Sales Reps. Welcome
Raja M. Mahendran, P. Eng.
(Broker / Owner)
* INDEPENDENTLY OWNED AND OPERATED
For All your Real Estate & Investments Needs!
HomeLife GTA Realty Inc.*
1711 McCowan Rd. #206, Toronto
145 Traders Blvd # 28, Mississauga
416.321.6969 / 905.712.2666

16 வது வருடத்தில்

# விளம்பரம்

VLAMBARAM™

416-282-8059
E-mail: vlambaram@sympatico.ca
Web: www.vlambaram.com
416-282-4978

வாய், பல் சம்பந்தமான வைத்திய சேவைகளுக்கு
WALK IN DENTAL CLINIC
Dr. Iru Vijayanathan

குடும்ப பல்வைத்தியர்
416-264-3232
3150 Eglinton Ave. E.
Markham & Eglinton சந்திப்புக்கு அருகாமையில்

நதி 16 | பாலம் 21 | சமூக முன்னேற்றப்பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | NOVEMBER 01, 2006



வட்டிவீத அதிகரிப்பு

07



நாடக அனுபவங்கள்

08



கீரிமலை ஆய்வுக் கண்ணோட்டம்

10

# ஜெனிவா பேச்சுவார்த்தை தோல்வி

சர்வதேச சமூகத்தின் கடுமையான அழுத்தம் காரணமாக ஜெனிவாவில் நடைபெற்ற விடுதலைப் புலிகளுக்கும், இலங்கை அரசுக்கும் இடையிலான பேச்சுவார்த்தை சமாதானத்திற்காக எந்த முடிவையும் எடுக்காமல் தோல்வியில் முடிந்துள்ளது.

பேச்சுவார்த்தையின் பின்னர் நோர்வே, பின்லாந்து நாடுகளுக்கு விடுதலைப்புலிகளின் தூதுக்குழு செல்லும் என்று ஏற்கனவே திட்டமிடப்பட்டு இருந்தது. ஆனால் பேச்சுவார்த்தை தோல்வி அடைந்ததால் அந்தப் பயணம் இரத்து செய்யப்பட்டு உடனடியாக அவர்கள் தாயகம் திரும்பினார்கள். “எங்கள் மக்கள் என்ன நடந்தது என்று அறிய விரும்புகின்றார்கள். அதனாலேயே நாம் உடனடியாக நாடு திரும்புகின்றோம்” என்று தமிழ்ச் செல்வன் கூறியுள்ளார்.

“ஜெனிவாவில் இடம் பெற்ற சமாதானப் பேச்சுவார்த்தைகளில் இணக்கம் எதுவும் ஏற்படாமல் விட்டமைக்கு இலங்கை அரசின் இராணுவ ஆதிக்க நிலைப்பாடே காரணம்” என்று தமிழ் தேசிய கூட்டமைப்பு குற்றம் சாட்டியுள்ளது. மேலும் “தமிழ் மக்களை பட்டினி போட்டு அழித்தொழிக்க அரசு முடிவுசெய்துள்ளது” எனவும் தமிழர் கூட்டமைப்பு அரசை சாடியுள்ளது.

ஏ 9 பாதை மூடப்பட்டு கிடப்பதால் யாழ், மற்றும் வன்னி நிலங்களில் வாழும் மக்கள் பட்டினிச்சாவை எதிர்கொண்டுள்ளனர். மருந்து, எரிபொருள், உணவு உட்பட எந்தவித அத்தியாவசியப் பொருட்களையும் பெற்றுக் கொள்ள முடியாத மனித அவலத்துக்கு இந்த மக்கள் தள்ளப்பட்டுள்ளனர். குடாநாட்டில் விவசாயம், மீன் பிடி என்பன முற்றாக சீர்குலைந்துள்ளது. அரச பேரூந்து தனது சேவையை இடை நிறுத்திவிட்டது. தனியார் வண்டிகளும் மட்டுப்படுத்திய சேவையை மட்டுமே நிகழ்த்துகின்றன. வெகுவிரைவில் வர்த்தக நிறுவனங்கள், சுண்ணாக மின்சார நிலையம், போக்குவரத்து, பாடசாலைகள் எல்லாமே முற்றாக முடங்கிப் போய்விடும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. எந்த வருமானமும் இன்றி வாழும் பல இலட்சம் மக்கள், கப்பல் மூலம் வந்து இராணுவத்தினரால் வழங்கப்படும் உணவுக்காக கையேந்தி நிற்க வேண்டிய நிலைமையில் உள்ளனர்.

கடைகளில் விற்கப்படும் பொருட்கள் ஏழை மக்கள் வாங்க முடியாத நிலைமையில் உள்ளனர்.

ஏ 9 பாதை மூடப்படும் முன்னர் 32 ரூபாய்க்கு விற்கப்பட்ட ஒரு கிலோ அரிசி இன்று 120 ரூபாய்க்கும், 60 ரூபாய்க்கு விற்கப்பட்ட சீனி 400 ரூபாய்க்கும் விற்கப்படுகின்றன.

# நவம்பர் 13ஆம் திகதி தேர்தலில் வாக்களிப்பது தமிழர்களது வரலாற்றுக்கடமை



Dr. Elagu Elaguppillai



Logan Kanapathi



Thaya Rajah



Neethan Shan



kumar Nadarajah



Shan Thayaparan



Ram Selvarajah



Ketheesh Waran



Bala Balasubraramaniam

சந்திரமௌலீஸ்வர சிவாலயம்

ஆலயம் திறந்திருக்கும் நேரம்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில்
காலை 7am - மாலை 9pm வரை
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm, மாலை 5pm - 9pm
தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்.
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480
3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarboro.

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்!

KG Master
(வாழ்வியல் ஆலாசகர்)
எமது ஆரோக்கியமானது (Health) மூன்று படிமுறைகளால் பராமரிக்கப்பட வேண்டியது. குழந்தைகள் முதல் முதியவர்கள்வரை இந்தப் படிமுறை களைப் பின்பற்றுவதன் மூலம் புற்றுநோய் (Cancer) இருதய நோய் (Heart Disease) உட்படப் பல நோய்களைத் தவிர்த்துக்கொள்ளலாம்.
By Appointment only
Office: 416.291.2611 / Mobile: 416.725.5112

Singapore Communication
Since 1991
$40/350 min + Unlimited incoming local calling
$50/500 min + Unlimited incoming local calling
$75/750 min + Unlimited incoming local calling
**Option E & W calling , Free phone $20, $30 Packages also available
For More Info Please Visit to the Store
*** Offer Ends Without Notice*****
More Info. Call: 416-740-5292
5010 Steeles Ave. W., Unit 17 ABC
(Kipling & Steeles)

துரித பணமாற்றுச் சேவை

வவுனியா - கொழும்புச் சுற்றுப் புறங்களுக்கும் - சிங்கப்பூர் - சென்னை ஆகிய இடங்களுக்கும் கடுகதியில் பணம் அனுப்புவதற்கு
மு. காசிப்பிள்ளை & சன்ஸ்
416.267.8221

“Making Dreams Reality”

HomeLife GTA Realty Inc., Brokerage *
Ravi R. Raveendran BSc.(Eng)
Sales Representative
416-817-8479
Bus: 416-321-6969
1711 McCowan Rd. Suite #206, Toronto
* INDEPENDENTLY OWNED AND OPERATED


RAJ
A. Rasaratnam
B.Com(Hons) - Sales Rep
416-726-8055

HomeLife/GTA Realty Inc. Brokerage*
Bus: 416-321-6969
#206 - 1711 McCowan Rd.,
Scarborough, ON.
*Independently owned and operated

வாழ்வு - வியாபாரம் - முதலீடு

HomeLife GTA Realty Inc., Brokerage *
Shiva Sharmah
Sales Representative
416-666-5515
Bus: 416-321-6969
1711 McCowan Rd. Suite #206, Toronto
* INDEPENDENTLY OWNED AND OPERATED

வீடு வாங்க, விற்க...
ரவி பரமு

வீட்டுப் பிரதிநிதி
DIRECT: 416.262.4176
OFFICE: 416.321.6969
HomeLife GTA Realty Inc., Brokerage*
1711 McCowan Rd.
Suite #206, Toronto
* INDEPENDENTLY OWNED AND OPERATED

# மார்க்கம் - சபைத்தேர்தல்

டொரொண்டோவிலும், அதன் சுற்றுப்புறப் பகுதிகளிலுமுள்ள பல நகரங்களிலும் வருகின்ற நவம்பர் 13 ந் திகதி தேர்தல் நடைபெற இருக்கின்றது. மற்றய உள்ளூராட்சி சபைத்தேர்தல்களை விட பிரதேசப்பிரிவிலுள்ள (Region) மாநகரம், நகரம், பட்டினத் தேர்தல் சற்று மாறுபட்டது. தமிழ் மக்கள் அதிகம் வசிப்பதாலும், இங்கு தமிழர்கள் பலர் போட்டியிடுவதாலும், மார்க்கம் தேர்தல் பற்றியும், வாக்களிக்கும் முறை பற்றியும் பல கேள்விகள் இருப்பதால், அந்த தேர்தல் பற்றி சிறிது பார்ப்போம்.

## விஜே குலத்துங்கம்

டொரண்டோ மாநகரசபைத் தேர்தலில் ஒருவர் மூன்று வெவ்வேறு பதவிகளுக்குப் போட்டியிடுபவர்களுக்கு வாக்களிக்க வேண்டும். நகரபிதா (Mayor) பதவிக்குப் போட்டியிடுபவர்களில் ஒருவருக்கும், தாங்கள் வசிக்கும் வட்டார கவுன்சிலர் (Municipal Councillor) பதவிக்குப் போட்டியிடுபவர்களில் ஒருவருக்கும், கல்விச்சபை பிரதிநிதி (Trustee) பதவிக்குப் போட்டியிடுபவர்களில் ஒருவருக்குமாக, மூன்று வெவ்வேறு அபேட்சகர்களுக்கு வாக்குகளை அளிக்க வேண்டும். மார்க்கம் நகரசபைத் தேர்தலிலும் மேற்கூறிய மூன்று விதமான வாக்களிப்புடன், மேலும் ஒரு வகை வாக்களிப்பு உள்ளது. அந்த நான்காவது வகை வாக்களிப்பு, பிரதேச சபை அங்கத்தவர் (Regional Councillors) பதவிக்கு ஆகும்.

இந்த பிரதேச சபை என்றால் என்ன என்று பார்ப்போம். மார்க்கம் நகரமானது (Town of Markham) யோர்க் பிரதேசத்தில் (York Region) அடங்கியுள்ளது. யோர்க் பிரதேசத்தில், மார்க்கம் நகரசபையுடன், றிச்மண்ட் ஹில், நியூ மார்க்கெற், வோன், கிங், அரோரா, ஜியோர்ஜினா, ஈஸ்ற் கிவிலிம்பரி ஆகிய மாநகர, நகர சபைகள் அடங்கியுள்ளன.

இந்த மாநகர, நகர சபைகளில் தெரிவு செய்யப்படும் மேயர்களும், மற்றும் பிரதேச சபை அங்கத்தவர்களும் ஆக மொத்தம் 21 அங்கத்தவர்கள் யோர்க் பிரதேசத்தின் அங்கத்தவர்களாக கடமை யாற்றுவார்கள். இந்த 21 பேரும் தங்களில் ஒருவரை பிரதேச சபை தலைவராக தெரிவு செய்வார்கள். ஒவ்வொரு மாநகர சபையும் அந்தந்த மாநகர அலுவல்களைக் கவனிக்க, பிரதேச சபை அங்கத்தவர்கள், யோர்க் பிரதேசம் முழுவதுக்குமான அபிவிருத்தி அலுவல்களைக் கவனிப்பார்கள். எனவே இந்த பிரதேச சபைக்கு, மார்க்கம் முழுவதிலும் இருந்து 4 அங்கத்தவர்கள் தெரிவு செய்யப்படுவார்கள்.

மார்க்கம் நகரசபைப் பிரதேசம் 8 வட்டாரங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இந்த எட்டு வட்டாரங்களில் இருந்து வட்டாரத்துக்கு ஒரு கவுன்சிலராக மொத்தம் எட்டு கவுன்சிலர்கள் தெரிவு செய்யப்படுவார்கள். இதைவிட
1ம், 2ம் வட்டாரங்களுக்கு ஒருவர்,
3ம் 4ம் வட்டாரங்களுக்கு ஒருவர்,
5ம், 6ம் வட்டாரங்களுக்கு ஒருவர்,
7ம் 8ம் வட்டாரங்களுக்கு ஒருவராக மொத்தம் நான்கு பேர்கள், மார்க்கம் நகர கல்விச்சபை அங்கத்தவர்களாக தெரிவு செய்யப் படுவார்கள். அனைத்து 8 வட்டாரங்களிலுள்ள மக்கள் மார்க்கம் நகர சபைக்குரிய மேயரைத் தெரிவு செய்வார்கள். இதைவிட யோர்க் பிரதேச சபைக்குரிய 4 அங்கத்தவர்களை அனைத்து 8 வட்டாரங்களிலுள்ள மக்களும் தெரிவு செய்ய வேண்டும். மற்றய பதவிகளுக்கு தெரிவு செய்யும் போது, ஒருவர் ஒரு பதவிக்கு ஒருவருக்குத்தான் வாக்களிக்க வேண்டும். அதாவது மேயருக்கு அந்த பட்டியலில் ஒருவரைத்தான் தெரிவு செய்ய வேண்டும். அதேபோல கவுன்சிலருக்கு ஒருவருக்கும், கல்விச் சபைக்கு ஒருவருக்கும் வாக்களிக்க வேண்டும். ஆனால், பிரதேச சபை அங்கத்தவர்களின் தெரிவில், ஒருவர் நான்கு பேருக்கு வாக்களிக்க வேண்டும். எனவே அந்தப் பிரதேச சபைக்குரிய வேட்பாளர் பட்டியலில் நான்கு அங்கத்தவர்களின் பெயருக்கு முன்னால் அடையாளம் இடலாம். ஜனநாயக முறைப்படி நான்கு பேரைத் தெரிவு செய்ய வேண்டும் என்றாலும், நீங்கள் ஒருவருக்கோ, இருவருக்கோ, மூவருக்கோ அல்லது நால்வருக்கோ வாக்களிக்கலாம். ஆனால் நான்கு பேருக்கு மேல் அடையாளம் இட்டால் வாக்கு செல்லுபடியாகாமல் போய்விடும்.

இதைச் சுருங்கச் சொன்னால், பின்வருமாறு கூறலாம். ஒருவர் நான்கு விதமான பதவிகளுக்கு போட்டியிடுபவர் களைத் தெரிவு செய்ய வேண்டும்.

கவுன்சிலர் ஒருவருக்கு ஒரு வாக்கு அளிக்க வேண்டும்.

கல்விச் சபை அங்கத்தவருக்கு ஒரு வாக்கு அளிக்க வேண்டும்.

மேயர் ஒருவருக்கு ஒரு வாக்கு அளிக்க வேண்டும்.

ஆகக்கூடுதலாக பிரதேச சபை அங்கத்தவர்கள் நால்வருக்கு வாக்குகளை அளிக்கலாம்.

மார்க்கம் நகர சபைத் தேர்தல்களில் இலங்கைத் தமிழர்கள் போட்டியிடுகின்றார்கள்.

எங்கள் பிரதிநித்துவம் கட்டாயம் தேவைப்படுகின்றது. எனவே அனைத்து பகுதிகளிலுமுள்ள தமிழர்கள் அனைவரும் கட்டாயம் வாக்களிக்க வேண்டும். முற்கூட்டிய வாக்களிப்பு நவம்பர் 4ம் 5ம் திகதிகளிலும், மற்றும் தேர்தல் தினமான நவம்பர் 13 ம் திகதியும் நீங்கள் வாக்களிக்கலாம்.



| Ward | Office | Name | Phone |
|---|---|---|---|
| York Region | Regional Councillor (Markham) | ELAGUPPILLAI, Elagu | 905-821-6606 |
| 5 Town of Markham | Ward Councillor | BALASUBRAMANIAM, Bala | 905-472-3389 |
| 7 '' | Ward Councillor | KANAPATHI, Logan | 905-927-9286 |
| 7 '' | Ward Councillor | JEYAVEERAN, William | 905-472-4089 |
| 8 '' | Ward Councillor | RAJAH, Thaya | 416-669-7450 |
| 7 & 8 '' | York region district School Board - Area 4 | SHAN, Neethan | 905-201-9301 |
| Mississauga | | | |
| 9 & 10 | Trustee English Public -Mississauga | Selvarajah, Ram | 905-593-1617 |
| City of Toronto | | | |
| 42 | Ward Councillor | Nadarajah, Kumar | 416-838-9616 |
| 41 | Ward Councillor | Navamanikkam, Thadsha | 416-824-4924 |
| 26 | Ward Councillor | Thomas David | 416-371-6005 |
| 4 | Ward Councillor | Balasunderam, Sathish | 647-231-966917 |
| Trustee, Toronto District School Board | | Navaratnam, Suriyacumaran | 416-288-9340 |
| 17 | Trustee, Toronto District School Board | Waran, Ketheesh | 416-529-6519 |
| 20 | Trustee, Toronto District School Board | Kanagaratnam, Warren | |
| 21 | Trustee, Toronto District School Board | Thayaparan, Shan | 416-703-6432 |
| 21 | Trustee, Toronto District School Board | Kulasegarampillai, Ganesh | |

# வரலாற்று பெருமைமிக்க...

16ஆம் பக்கத் தொடர்ச்சி

உருவாகி வளர்ச்சி பெற்று வருகின்றன.

மேலும் தமிழர்கள் அதிகமாக வாழும் நகரப்புறங்களில் நகராட்சி அமைப்புக்கள் பொதுசன நூலகங்களில் தமிழ் நூலகப் பிரிவினை உருவாக்கி தமிழ் மக்களுக்கு சேவையாற்றி வருகின்றன. குறிப்பாக கனடாவில் ரொறொன்ரோ மாநகரிலும் அதனைச் சூழவுள்ள உப நகரப் பிரிவுகளிலுமுள்ள மொத்தம் 135 நூலகங்களுள் 35 நூலகங்களில் தமிழ் நூலகப் பிரிவு செயற்பட்டு வருகின்றது.

இவற்றிலுள்ள தமிழ் நூலக சேர்க்கைகளின் மொத்த எண்ணிக்கை ஒரு இலட்சத்திற்கும் அதிகமாகும். நூலகத்தை அதிகமாகப் பயன்படுத்தும் சமூக இனங்களுள் தமிழினம் நான்காம் இடத்தினை வகிக்கின்றது.

ஈழத் தமிழர்கள் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளில் தமிழர்களாலும் தமிழ் அமைப்புகளாலும் உருவாக்கப்பட்டு வளர்ந்து வரும் நூலகங்கள் அனைத்திற்கும் இமாலய சிகரம் பொல் கனடா உலகத் தமிழர் சமூக நூலகம் ஒளி வீசி வருவது புலம் பெயர்ந்து வாழும் ஈழத்தமிழர்களுக்கு மட்டுமின்றி இலங்கை வாழ் தமிழர்களுக்கும் மகிழ்ச்சியும் பெருமையும் தரும் விடயமாகும். யாழ்ப்பாண பொதுசன நூலகமும் தமக்கேயுரிய தனித்துவத்தினை நிலை நிறுத்திக் கொண்டதன் மூலம் புலம்பெயர் வாழ் தமிழர் வரலாற்றிலும் ஈழத்தமிழர் வரலாற்றிலும் அழியா இடத்தைப் பெற்று விட்டன.



உலகத்தமிழர் சமூக நூலகம்

விளம்பரம்
VLAMBARAM

விளம்பரம் பத்திரிகை விளம்பரம் பப்க்கேஷன்ஸ் ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள்.

**பதிப்புரிமை:** 2004 விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ்.
விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

Vlambaram, P.O. Box 37527, 31 Tapscott Road, Toronto, ON M1B 5P9, Canada
TEL: 416-282-8059 FAX: 416-282-4978
e-mail: vlambaram@sympatico.ca Web: www.vlambaram.com

HOME INSPECTION
• வீடு தரமானது என உறுதிப்படுத்திக் கொள்ள... • வீடு பராமரிப்பு பற்றி விளக்கமாகத் தெரிந்து கொள்ள...
ந. தயாபரன்
Certified Inspection Specialist
Expert Building Inspections LTD.
• Exceed the Standards • Industry Canada Registered • Professionals Serving the GTA • On site Report
24 /7 - Toll Free - 1.866.373.3315 416.727.8336

# நவம்பர் 13ஆம் திகதி தேர்தலில் வாக்களிப்பது தமிழர்களது வரலாற்றுக்கடமை

கனடியத் தமிழர்களது வரலாறு கனடிய மண்ணைப் பொறுத்தவரையில் இரண்டு தசாப்தங்களை பூர்த்திசெய்து மூன்றாவது தசாப்பத்தில் வளர்ந்து வியாபித்து நிற்கின்றது. இந்தக்குறுகிய காலத்தில் எமது மக்கள் பல துறைகளில் கால்பதித்து சாதனைகளைப் படைத்து வருகின்றார்கள். ஆனால் அரசியல் துறையில் காலடி வைக்கப்பட்ட பொழுதெல்லாம் ஒற்றுமையின்மையும், ஒத்துழைப்பு இன்மையும் அந்த வாய்ப்புக்களையும் தவறவிட வைக்கப்பட்டது. இம்முறை அந்த நிலைமாறி தமிழர்களுக்கிடையேயான போட்டிகளை ஓரளவு தவிர்த்து பல தமிழர்கள் போட்டியிடுவது மகிழ்ச்சியைத் தருகின்றது. வேட்பாளர்கள் பலர் எமது மக்களது நலனை முன்னிலைப்படுத்தி போட்டியில் நிற்பதும் மக்கள் மத்தியில் அரசியல் விழிப்புணர்வு ஏற்பட்டுள்ளதும் இன்னுமொரு வரவேற்கத்தக்க விடயமாகும். எமது சமூகத்தின் மிக முக்கியமான அடுத்த கட்ட வளர்ச்சி கனடிய அரசியல்துறையாகும். ஒரு பலமான சமூகமாக மற்றைய சமூகத்தினர் எமது பண்பாட்டை, சிறப்புக்களை மெச்சவும், பல்லின சமூகங்களும் இணைந்த செயற்பாட்டுக்கும் எமக்குத் தேவையானது அரசியல் பிரதிநிதித்துவம் தலைமைத்துவமாகும். அந்த வரலாற்றுப் பதிவைச் செய்யப் போகும் தினம் நவம்பர் 13ஆம் திகதி என்பதை நினைவில் நிறுத்திச் செயற்படுவோம். அனைத்து தமிழர்களும் தமிழ் வேட்பாளர்களுக்கு வாக்களிப்பது மட்டுமல்லாது அவர்களது வெற்றிக்காக உழைப்பதும் முக்கியமாகும். தமிழர்கள் போட்டியிடாத பிரதேசங்களில் எமது விருப்பங்களை, பிரச்சினைகளைத் நிவர்த்தி செய்யக்கூடிய வேட்பாளர்களுக்கு வாக்களிப்பது சிறந்ததாகும். நவம்பர் 13ஆம் திகதி அனைத்து தமிழர்களும் வாக்குச் சாவடிகளுக்குச் சென்று வாக்களிப்பதன் மூலம் கனடியத் தமிழர்களின் ஒற்றுமையையும் பலத்தையும் மற்றைய சமூகத்தவர்கள் மெச்சவும், எமது சமூகத்தவர்களைத் தேடி கனடிய அரசியல் கட்சிகள் வரவும் வழி சமைப்போம்.

## யார் வாக்களிக்கலாம்?

- கனடியக்குடியுரிமை
- ஆகக் குறைந்தது 18 வயது
- றொறன்ரோ மாநகரத்தில் வசிப்பவர்
- றொறன்ரோ மாநகரத்து வளவு ஒன்றில் வசிக்காதவராயினும் அதன் உடைமையாளராய் அல்லது அங்கு குடியிருப்பவராய் அல்லது அவருடைய வாழ்க்கைத்துணையாய் விளங்குபவர்.
- எந்தச் சட்டத்தின் படியும் வாக்களிக்காவாறு தடுக்கப்படாதவர்.

நீங்கள் றொறன்ரோ மாநகரத்தில் வசிப்பவராகவும், அங்கு ஒன்றுக்கு மேற்பட்ட வளவு உடையவராகவும் அல்லது அதற்கு வாடகை செலுத்துபவராகவும் விளங்கினால், நீங்கள் வசிக்கும் இடத்திலேயே வாக்களிக்க வேண்டும். நீங்கள் றொறன்ரோ மாநகரத்தில் எத்தனை வளவுகள் உடையவராய் விளங்கினாலும், ஒரு தடவையே வாக்களிக்கலாம்.

• கிழமை இறுதியில் முன்கூட்டியே வாக்களித்தல்: நவம்பர் 4 சனிக்கிழமையும், நவம்பர் 5 ஞாயிற்றுக்கிழமையும் காலை 10:00 மணி முதல் மாலை 6:00 மணி வரை ஒவ்வொரு வட்டாரத்திலும் ஒரு நிலையத்தில் வாக்களிக்கலாம். கிழமை இறுதி நாட்களில் முன்கூட்டியே வாக்களிக்கும் நிலையங்கள் அக்டோபர் மாத இறுதியில் அஞ்சல் மூலம் உங்களை வந்தடையும் வாக்காளர் விபர அட்டையில் காணப்படும்.

• உங்கள் வாக்காளர் விபர அட்டையை நீங்கள் பெற்றுக்கொள்ளா விட்டால், அல்லது உங்கள் பெயர் வாக்காளர் நிரலில் இருக்கிறதா என்பதை நிச்சயிக்க விரும்பினால்,

றொறொன்றோ மக்கள்: 416.338.1111 அல்லது இணையத்தளம்: http://www.toronto.ca/vote2006/voter-eligibility.htm

மார்க்கம் மக்கள்: 905.477.7000 ext. 8683 அல்லது இணையத்தளம் : http://www.markham.ca/vote2006/onvoterlist.asp

மிசிசாகா மக்கள்: 905.615.8683 (vote) அல்லது இணையத்தளம்: http://www.5.mississauga.ca/vote2006

• முன்கூட்டியே வாக்களிக்கும் நிலையங்கள்: மார்க்கம் பகுதி

| | |
|---|---|
| Wards 1 & 2 | Thornhill Community Centre, 7755 Bayview Ave. |
| Wards 3 & 6 | Town Civic Centre, 101 Town Centre Blvd. |
| Wards 4 & 5 | Markham Museum Reception Centre, 9350 Hwy. 48 |
| Ward 7 | Parkland Public School, 18 Coxworth Ave. |
| Ward 8 | Milliken Mills Community Centre, 7600 Kennedy Road |
| Wards 1 to 8 | Town Civic Centre, 101 Town Centre Boulevard |

# உள்ளூராட்சி சபை தேர்தலில் பல்வேறு பதவிகளுக்குப் போட்டியிடும் தமிழர்கள் சிலருடன் நேர்காணல் - ஆத்மன்

## கனடாவில் தமிழர்களுக்கு அரசியல் தலைமைத்துவம், பிரதிநிதித்துவம் தேவை!



**கலாநிதி இலகு. இலகுப்பிள்ளை**

யோர்க் பிரதேச சபை
(Regional Councillor) வேட்பாளர்

**• பிரதேசசபை உறுப்பினர் நிலையை ஏன் தேர்தெடுத்தீர்கள்?**

யோர்க் பிரதேசசபையில் (York Region) ஒன்பது வேட்பாளர்கள் மார்க்கம் நகரசபை சார்பாக போட்டியிடுகின்றார்கள். இதில் நான்கு பிரதேச சபை வேட்பாளர்கள் தெரிவுசெய்யப்படுவர். அவர்களில் ஒரேயொரு தமிழ்மகன் நான்தான்! இப்படியானதொரு சந்தர்ப்பத்திலே எங்களுடைய தமிழ்மக்கள் அவைரும் ஒன்றுசேர்ந்து வாக்களித்து தமிழ்மகனையும் அனுப்பவேண்டும். தேர்வுசெய்து அனுப்புவதன் ஊடாக எங்கள் மக்களது விருப்பங்களை நிவர்த்தி செய்வதற்குரிய வாய்ப்புகள் நிறையவே ஏற்படும். முக்கியமாக பிரதேச சபை வேட்பாளராக ஏன் நின்றேன் என்றதற்குரிய முக்கியகாரணம், மார்க்கம் நகரில் பிரதேசசபைதான் சகலவிதமான திட்டங்கள், அத்திட்டங்களை அமுல்படுத்துவதற்குரிய நிதியை ஒதுக்குவது. கிட்டதட்ட பிரதேசசபையினுடைய வரவுசெலவு திட்டத்துக்கு ஒரு வருடத்துக்கு 2000 மில்லியன் டொலர் செலவு ஏற்படுகின்றது. ஆகவே ஒரு நகரத்திலே மாற்றங்களை ஏற்படுத்த வேண்டுமாயின் பிரதேச சபையூடாகவே மாற்றங்களை ஏற்படுத்த முடியும். பிரதேசசபை முக்கியமாக போக்குவரத்து, சூழல், பொருளாதார அபிவிருத்தி திட்டங்கள், பாதுகாப்பு வரி போன்ற பல விடயங்களை கவனிக்கின்றது, அதனைத் தீர்மானிக்கின்றது. ஒரு மாக்கம் நகர் வதிவாளரிடமிருந்து $100 டொலரை வரியாக எடுத்தால் அதில் $42 டொலர் மார்க்கம் நகரத்துக்குப் போகின்றது. சகலவிதமான பரந்த திட்டங்களையும் நிதி ஒதுக்கீடுகளையும் பிரதேசசபை தான் செய்கின்றது.

**• பிரதேசசபை உறுப்பினர் நிலைக்கு நீங்கள் போட்டியிடுவதன் நோக்கம் என்ன?**

முதலாவதாக எங்களுடைய கனடியத் தமிழ் மக்களுக்கு தகுந்தவொரு பிரதிநிதித்துவம் தேவை. மூன்று இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்டவர்கள் இங்கு வாழுகின்ற பொழுது அவர்களுடைய அபிலாஷைகளை, உணர்வுகளை, அவர்களுக்கு வாய்ப்புகளை ஏற்படுத்தக்கூடிய ஓர் அரசியல் தலைமைத்துவம் கண்டிப்பாக கனடாவில் விரைவில் தேவை. இதைத்தவிர எங்கள் மக்களுடைய தேவைகள் பல கனடாவில், தயாகத்தில் இருக்கின்றன. அவற்றை நிவர்த்தி செய்யக்கூடிய சக்தியை பிரதேசசபையூடாக எம்மால் எடுக்கக்கூடிய வாய்ப்புக்கள் நிறையவே இருக்கின்றன.

**• மார்க்கம் நகரத்தைப் பொறுத்தளவில் கூடுதலான தமிழர்கள் வசிக்கும் பிரதேசமாக இருக்கின்றது. அந்தவகையில் நீங்கள் பிரதேச சபைக்கும், இன்னும் பல தமிழர்கள் நகர-சபைக்கும், கல்விச்சபைக்கும் போட்டியிடுகின்றனர். ஒருவருக்கெதிராக மற்றவர் போட்டியிடும் நிலை இங்கு இல்லை. இருந்தும் மக்கள் மத்தியில் குழப்பமான நிலை இருப்பதாகத் தென்படுகின்றது. ஒரு மார்க்கம் நகர வாக்காளர் தமது வாக்கை எப்படி எந்தவகையில் செலுத்தமுடியும்?**

ஒரேயொரு வாக்காளர் அட்டைதான் ஒவ்வொரு வாக்காளருக்கும் கொடுக்கப்படும். உதாரணமாக ஏழாம் வட்டாரத்தை எடுத்துக்கொண்டால் வாக்காளர் அட்டையில் நகரபிதா பதவிக்கு போட்டியிடும் நாலு பேருடைய பெயர்கள் இருக்கும். அதில் ஒருவரை மட்டும் தெரிவுசெய்யலாம். அதேபோல பிரதேசசபைக்கு ஒன்பது பேருடைய பெயர்கள் இருக்கும். அதிலே நால்வரைத் தெரிவு செய்யலாம். அதனூடாக தமிழ் மகனை பிரதேசசபை உறுப்பினராகவும் உதவி நகர பிதாவாகவும் தெரிவுசெய்யலாம். ஏழாம் வட்டாரத்துகுரிய நகரசபைக்கு போட்டியிடுபவர்களின் பெயர்கள் இருக்கும். அதில் ஒருவரைத் தெரிவு செய்யலாம். அதைப்போல கல்விச்சபைக்கு போட்டியிடும் வேட்பாளர்களுடைய பெயர்கள் இருக்கும். அதில் ஒருவரைத் தெரிவு செய்யவேண்டும். ஒரே அட்டையிலேயே எல்லோருக்கும் வாக்களிக்கும் படியாக அமைக்கப்பட்டிருக்கும்.

**• பிரதேசசபையிலே ஒன்பது வேட்பாளர்கள் இருப்பதாக கூறுகின்றீர்கள். அதிலே நால்வரைத் தெரிவு செய்ய முடியும். ஆனால் நீங்கள் ஒருவரே தமிழ் மகனாக இருக்கின்றீர்கள். தமிழ்மக்கள் எப்படி தமிழ் பிரதிநிதியாகிய உங்களைத் தெரிவு செய்யமுடியும்?**

நீங்கள் வாக்களிக்கும் பொழுது நால்வருக்கு வாக்களிக்க முடியுமாக இருந்தாலும் கூட உங்கள் விருப்பப்படி வாக்களிக்க முடியும். ஆனால் நால்வருக்குத் தான் வாக்களிக்க முடியும். கூடுதலாக வாக்களித்தால் உங்கள் வாக்குச்சீட்டு செல்லுபடியாகாமல் போய்விடும். ஆகவே நீங்கள் ஒரு தமிழ் மகனை மட்டும் பிரதேசசபைக்கு தெரிவுசெய்ய வேண்டுமென விரும்பினால் எனக்கு மட்டும் வாக்களிக்கலாம். அதாவது போட்டியிடுபவர்களிலும் பார்க்க அதிகூடிய வாக்குகளைப் பெறமுடியும். அதனூடாக உதவி நகர பிதாவாக (Deputy Mayor) தமிழ்மகன் வருவதற்கும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க முடியும். தமிழ்மக்கள் அனைவரும் ஒற்றுமையாக வாக்களிப்பதனூடாக அந்த நிலையை ஒரு தமிழ் மகன் பெற்றுக்கொள்ள முடியும்.

**• மார்க்கம் நகரத்தைப் பொறுத்தவரையில் 40க்கு மேற்பட்ட இனத்தவர்கள் வாழ்வதாக அறிகின்றேன். ஆகவே அவர்களுடைய வாக்குகளைப் பெறுவதற்கு உங்களுடைய பிரச்சார வேலைகளை எப்படி அமைத்திருக்கின்றீர்கள்?**

தொடர்ச்சி 04ஆம் பக்கம்


APPLEMORE AUTOMOTIVE

உட்புற, வெளிப்பு திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்

ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility

- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing

- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing

416-285-4998

435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6

SPECIAL



# கனடாவில் தமிழர்களுக்கு அரசியல் தலைமைத்துவம்....

03ஆம் பக்கத் தொடர்ச்சி

நீங்கள் கூறியபடி நான் வலுவாக மற்றைய சமூகத்தவர்கள் மத்தியில் பிரச்சாரம் செய்து வருகின்றேன். வாக்களிக்கத் தகுதிபெற்ற தமிழ் மக்கள் ஏறக்குறைய 15ஆயிரம் பேர் இருந்தாலும் கூட மற்றைய சமூகத்தவர்களின் ஆதரவும் தேவை. பல்லின மக்களுடைய கூட்டங்கள், அவர்களுடைய பிரச்சனைகள் அணுகக்கூடிய வாய்ப்புகளை நான் பயன்படுத்திக் கொண்டுவருகின்றேன். பல்லின மக்களுடைய கலாசார நிகழ்வுகளில் பங்கேற்று வருகின்றேன். இந்திய, சீன, மசிடோனிய, கிறீக், ஈரானியன் இப்படியாக பல சமூகங்கள் மத்தியில் வலுவான தொடர்புகளை ஏற்படுத்தி உள்ளேன். அவர்கள் மத்தியிலும் எனது பிரச்சாரங்களை செய்து வருகின்றேன்.

**• கடந்த தேர்தலைப்போல் அல்லாது இந்த முறை பல கனடியத் தமிழர்கள் போட்டியிடுவதை அவதானிக்கக்கூடியதாக இருக்கின்றது. Markham நகரம் மட்டுமல்லாது Toronto, Mississauga நகரங்களிலும் நகர, கல்விச்சபைகளுக்குப் பலர் போட்டியிடு கின்றார்கள். முன்னரைவிட தற்பொழுது கனடியத்தமிழர்கள் மத்தியில் ஓர் எழுச்சி, விழிப்புணர்வு ஏற்பட்டுள்ளதை அவதானிக்க முடிகின்றது. இந்த போக்கு குறித்து உங்கள் கருத்து என்ன?**

நான் இந்த தேர்தலில் போட்டியிடுவதற்கு முன்வந்ததன் முக்கியநோக்கமே எங்கள் மக்கள் மத்தியில் அரசியல் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். அதன் மூலமாக எங்களுடைய பிரச்சினைகளை, அபிலாஷைகளை முன்னெடுத்துச் செல்லமுடியும் என்ற ஒரேயொரு நோக்குடன் தான் இந்த அரசியல் துறைக்கு வந்திருக்கின்றேன். அதனுடைய நோக்கம் ஓரளவுக்கு நிறைவடைந்து வருகின்றது என்றுதான் சொல்லமுடியும். மக்கள் அரசியல்பற்றி விழிப்புணர்வாக இருக்கின்றார்கள். இந்த தேர்தலை முதல் கட்டமாகத்தான் நான் பார்க்கின்றேன். விழிப்புணர்வு ஏற்படுவது மட்டுமல்ல எங்களுடைய பிரதிநிதிகளை ஒருவரை மட்டுமல்ல பல பிரதிநிதிகளை பலமட்டங்களிலும் உள்ள கனடிய அரசியலுக்கு அனுப்புவதன் ஊடாக நம்மை அதாவது கனடிய தமிழர்கள் வலுவான சமூகமாக இருக்கக்கூடிய வாய்ப்பை உருவாக்க வேண்டும்.

*• பிரதேச சபை உறுப்பினரைத் தெரிவு செய்யும் பொழுது எனது பெயரை மட்டும் தெரிவு செய்தால் அதிக வாக்குகளைக் தமிழ் மகன் பெறமுடியும். அதனூடாக மார்க்கம் நகர உதவி நகர பிதாவாக தமிழர் உருவாக வழிவகுக்கும்.*

*• கனடியத் தமிழர்களின் முக்கியமான வரலாற்றுப் பதிவு நவம்பர் 13ஆம்திகதி தேர்தல்! அதிகப்படியான தமிழர்கள் வாக்களிப்பதனூடாக பல தமிழ் பிரதிநிதிகளை உள்ளூராட்சி சபைகளுக்கு அனுப்பப் போகின்றார்கள். அதனூடாக மாநகர, மாகாண, மத்திய அரசுத்தேர்தல்களில் தமிழ் வேட்பாளர்களைத் தேடி கனடிய அரசியல் கட்சிகள் வரும் காலம் வெகுதூரத்தில் இல்லை.*

**• பல அரசியல் ஆய்வாளர்களது கருத்தின்படி, கனடியத்தமிழர்கள் கனடிய தேசிய நீரோட்டத்தில் உள்ள அரசியல் கட்சிகளிடம் செல்லும் நிலை கடந்த காலங்களில் இருந்தது என்றும் ஆனால் நவம்பர் 13ஆம்திகதிக்குப் பின்னர் அந்தக்கட்சிகள் கனடிய தமிழர்களைத்தேடி வரும் நிலை ஏற்படப்போகின்றது என கூறியுள்ளார்கள். உங்கள் கருத்து என்ன?**

நவம்பர் 13ஆம் திகதி தேர்தல் நாள். அன்று அதிகப்படியான தமிழர்கள் வாக்களிப்பதன் ஊடாக அதிகமான தமிழ் பிரதிநிதிகள் வெற்றி பெறும் பட்சத்தில் கண்டிப்பாக தமிழர்கள் முக்கியமான சமூகமாக, அரசியலில் பங்கேற்கக் கூடிய மற்றைய சமூகங்களுடன் அரசியலில் ஒத்துழைக்கக்கூடிய சமூகமாக அவர்கள் கருதப்போகின்றார்கள். அத்துடன் தமிழ்மக்களுக்கு அரசியல் பிரதிநிதித்துவம் இப்பொழுது இல்லை. மாநகர மட்டத்தில் மட்டுமல்ல மாகாண மட்டத்தில், மத்திய அரசு மட்டத்தில் கூட எமது தமிழ் வேட்பாளர்களைத் தேடி வரும் நிலை விரைவில் ஏற்படும்.

**• உள்ளூராட்சி சபைகளில் பல தமிழர்கள் போட்டியிடுகின்றார்கள் என்பதை எல்லோரும் அறிவார்கள். தமிழ் பிரநிதிகளைத்தெரிவு செய்து இந்த சபைக்கு அனுப்புவதன் ஊடாக என்ன பயன்பாடுகளை கனடியதமிழர்கள் பெற்றுக்கொள்ளமுடியும்?**

முதலாவதாக தகுதியான ஒரு தமிழரைத்தெரிவு செய்வதன் மூலமாக மற்றைய இனமக்கள் எம் சமூகத்தவர்களை அந்தப்பிரதிநிதியூடாகப் பார்த்து தமிழ் மக்களுடைய சிறப்பையும், அவர்களுடைய கௌரவத்தையும் கணிக்கக கூடியதொரு வாய்ப்பு ஏற்படும். இரண்டாவதாக தமிழ் பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதன் மூலமாக தமிழ் மக்களின் உணர்வுகளை அந்தந்த இடங்களிலே பிரதிபலிக்க கூடிய வாய்ப்புக்களை ஏற்படுத்துகின்றோம். மூன்றாவதாக ஒரு தமிழ் மகன் போட்டியிடுவதன் மூலம் எதிர்வரும் காலங்களிலே கூட மேலும் பல தமிழர்கள் போட்டிபோட்டு வெற்றிபெறக்கூடிய ஒரு நடைமுறையை நாங்கள் ஆரம்பித்து வைக்கப்போகின்றோம். பெரியதொரு அரசியல் அதிர்வலையை கனடாவில் நாங்கள் ஏற்படுத்தப் போகின்றோமென நான் கருதுகின்றேன்.

**• பேராசிரியர் இலகு இலகுப்பிள்ளை அவர்களே! அண்ணளவாக இன்னும் இரு வாரங்களே தேர்தலுக்கு இருக்கின்றன. ஆகவே நிறைவாக எமது வாசகர்களுக்கு என்ன கூறவிரும்புகின்றீர்கள்?**

முக்கியமாக நவம்பர் நாலாம், ஐந்தாம் திகதிகளில் வாக்களிக்கத் தகுதிபெற்ற எங்களுடைய தமிழ் மக்கள் எல்லோரும் வாக்குச்சீட்டு வந்ததோ வரவில்லையோ அடையாள அட்டையுடன் தங்கள் முகவரியை உறுதிப்படுத்தக் கூடிய ஆவணத்துடன் வாக்குச் சாவடிகளுக்குச் சென்று கட்டாயமாக வாக்களிக்குமாறு கேட்டுக்கொள்ளுகின்றேன். இது கனடியத்தமிழர்களது மிகமிக முக்கியமான வரலாற்றுக்கடமை.

தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுக்குத் தொண்டர்கள் பலர் தேவை. பலவிதமான பிரச்சார விடயங்களில் ஈடுபடுவதற்கு நூற்றுக் கணக்கானவர்கள் தேவை. குறிப்பாக நான் மார்க்கம் நகரத்தின் எட்டு வட்டாரங்களையும் இணைத்த பிரதேசசபை உறுப்பினர் நிலைக்குப் போட்டியிடுவதால் அனைத்து வட்டாரங்களிலும் தொண்டர்கள் குறிப்பாக 500 தொண்டர்கள் தேவை. இப்படியான சூழ்நிலையில்தான் நான் இருக்கின்றேன். மக்கள் அனைவரிடமும் அன்பாக வேண்டிக்கொள்வது நேரம் கிடைக்கும் பொழுது எனக்கு வந்து உதவியளிக்குமாறு கேட்டுக்கொள்ளுகின்றேன். இந்தத்தேர்தலை நான் தமிழ்மக்களுடைய தேர்தலாகப் பார்க்கின்றேன். மக்களுடைய ஆதரவு இல்லாமல் நான் வெற்றிபெறமுடியாது நான் வெற்றி பெற்றால் நீங்கள் வெற்றி பெற்றதாகத் தான் கருதுவேன். அதுதான் உண்மை. ஆகவே நவம்பர் 13ஆம்திகதி எல்லோரும் சென்று வாக்களியுங்கள். உங்களுடைய அயலவர்கள் குறிப்பாக மற்றைய இன மக்களுக்கு உங்களுடைய வேட்பாளர்கள் பற்றி கூறி அவர்களையும் அழைத்துச் சென்று வாக்களிக்க வையுங்கள். இந்தத் தேர்தலில் எந்தவொரு வேட்பாளருக்கும் இல்லாத அதிகப் படியான தராதரம், அனுபவங்கள், கல்வித் தகைமை எல்லாம் எனக்கு இருக்கின்றது. நீங்கள் துணிந்து எனக்கு வாக்களிக்குமாறு மற்றையவர்களைக் கேட்கலாம். தொடர்ந்து எனக்கு ஆதரவு தரும் அனைத்து மக்களுக்கும் விளம்பரம் பத்திரிகைக்கும் நன்றி.

தொடர்புகளுக்கு: தொலைபேசி: 416.821.6606
மின்னஞ்சல்: info@electelagu.ca
இணையத்தளம்: www.electelagu.ca

# செயலாதிக்கமுள்ள சமூகத்தலைமை வேண்டும்!



## லோகன் கணபதி

மார்க்கம் ஏழாம் வட்டாரம்
City Councillor வேட்பாளர்

**• மார்க்கம் நகரசபையின் 7ஆம் வட்டார வேட்பாளராக போட்டியிடுவதன் நோக்கம் என்ன? வெற்றிபெறுவதனூடாக என்ன பணிகளை செய்ய திட்டங்கள் வைத்திருக்கின்றீர்கள்?**

எனது தலையாய பணிகளாகக் கருதுபவை

- செயலாக்கமுள்ள சமூகத்தலைமை
- இளைஞர் பிரச்சினைகளும் அவற்றுக்கான தீர்வுகளும் பற்றிய செயற்பாட்டு மையம்
- சமூக சேவைகளையும், கலாசார சமூகங்களையும் இணைக்கும் அடிப்படை கட்டுமானங்களும்
- செம்மையான நிதி நிர்வாகம், மற்றும் Property Tax ஐ சீராக கொண்ட சீரான வரிகள்
- குற்றச்செயல்களுக்கு எதிரான உறுதிப்பாடு.

இப்பணிகளை நான் நிறைவேற்றுவதற்கான அதிகாரங்களை, உங்கள் வாக்குகள் மூலம் நீங்கள் வழங்குவீர்கள் என உறுதியுடன் நம்புகிறேன்.

மார்க்கம் வாழ் சமூகம் மிகவும் துடிப்பாக வளர்ந்து வரும் சமூகம். மார்க்கத்தில் கடந்த 13 வருடங்களாக எனது மனைவி மக்களுடன் உங்கள் தோழமையுடன் வாழ்ந்து வருகிறேன். எமது வாழ்வில் கடின உழைப்பும் மக்கள் கரிசனையும் பொது நோக்கமும் பின்னிப் பிணைந்திருப்பதை நீங்கள் அறிவீர்கள். இன விடுதலை, கனடிய தமிழர் மேம்பாடு, மார்க்கம் ஏழாம் வட்டார மக்களின் வளர்ச்சி என்பனவே எனது கனவும் கருத்தும் ஆகும்.

23 ஆண்டுகளுக்கு மேலான எனது கனடிய வாழ்வில் இந்நாட்டின் மூன்று மட்ட அரசியலில் தேசிய, மாகாண, உள்ளூராட்சி மட்டத்தில் ஏற்பட்ட தொடர்புகளும் அதில் நான் பெற்ற அனுபவங்களும், எம்முடன் வாழும் பல்வேறு கலாசார பண்பாட்டு விழுமியங்களைக் கொண்ட இனங்களைப் பற்றிய மதிப்பும் மற்றும் இங்குள்ள பல்வேறுபட்ட தொழில்துறைசார் நிறுவனங்களுக்காக நான் பெற்ற அறிவும் வளர்ந்து வரும் மார்க்கம் சமூகத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்ய நிச்சயமாக உதவுமென நம்புகிறேன்.

தொடர்புகளுக்கு: தொலைபேசி: 905.927.9286
மின்னஞ்சல்: logan@logankanapathi.com
இணையத்தளம்: www.logankanapathi.com

# மார்க்கம் சமூகத்தின் வளர்ச்சியும், தமிழர்களின் விருப்பங்களையும் நிறைவேற்றுவதே எனது பணி!



## தயா ராஜா

மார்க்கம் எட்டாம் வட்டாரம்
City Councillor வேட்பாளர்

**• மார்க்கம் நகரசபையின் 8ஆம் வட்டார வேட்பாளராக தேர்ந்தெடுக்கப்படும் பட்சத்தில் தமிழ் பேசும் மக்களுக்கு என்ன செய்வீர்கள்? மார்க்கம் நகர மக்கள் உங்களிடமிருந்து என்ன விடயங்களை எதிர்பார்க்கலாம்?**

எனது தொகுதியில் என்னால் முன்னெடுக்கப்படும் செயற்பாடுகள் அனைத்தும், இன பாகுபாடின்றி அனைத்துத் தரப்பினருக்கும் பொதுவானதாக அமைந்தாலும், நான் பிறப்பால் ஒரு தமிழன் என்ற வகையிலும் எனக்குள்ள தமிழுணர்வின் உந்துதலினா லும், தமிழர்கள் ரீதியான பிரச்சினைகளுக்கு என்னால் இயன்றளவு முக்கியத்துவம் கொடுப்பேன். தமிழ் மக்களின் பிரதிநிதியாக என்றும் தமிழ் மக்களின் குரலாக நான் ஒலிப்பேன். இதை வேற்றினத்தவர் ஒருவரிடமிருந்து எதிர்பார்க்க முடியாது.

என்னிடம் நிறையவே திட்டங்கள் இருக்கின்றன. என்னைப்பற்றி அறிந்தவர்களுக்குத் தெரிந்திருக்கும், நான் கடந்த காலங்களில் ஈழத்தமிழர்களின் செயற்பாடுகளில் எவ்வளவு ஈடுபாடு காட்டியிருக்கின்றேன் என்பது. உதாரணமாக, சுனாமியால் ஈழத்தில் பாதிப்பு ஏற்பட்ட பொழுது, கனடிய அரசியல் வாதிகளுக்கு வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ஏற்பட்ட அனர்த்தங்களைப் பார்வையிடுவதற்காக ஏற்பாடு செய்யப்பட்ட பயணத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. ஜிம் கரிஜியானிஸ் அவர்களுடன் நானும் சென்றிருந்தேன். மிகவும் குறுகிய காலத்திலேயே (15 நாட்களுக்குள்) அங்கு சென்றிருந்தோம். யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, அம்பாறை, கிளிநொச்சி ஆகிய பிரதேசங்களுக்கு பயணம் செய்து அங்கு பாதிக்கப்பட்ட மக்களையும், அரசியல் தலைவர்களையும் சந்தித்து நிலைமைகளை நன்கு அறிந்து கொண்டோம். இப்பயணமானது, கனடிய அரசியல் மட்டத்தில் பெரும் வரவேற்புப் பெற்றதுடன், ஈழப் பிரச்சினை தொடர்பாக ஒரு புரிந்துணர்வையும் அவர்களுக்கு ஏற்படுத்தியிருந்தது.

நான் இத்தேர்தலில் வெற்றிபெறும் பட்சத்தில், இது போன்ற செயற்பாடுகளை தொடர்ந்தும் செயலாற்றுவது மட்டுமன்றி, என்னோடு பணியாற்றப் போகும் வேற்றினத் தலைவர்களுக்கு தெரியப்படுத்தி, அவர்களினூடாக அனைத்து இனத்தவர்களுக்கும் ஈழத்தில் வாழும் உறவுகளின் நிலையைப் புரிய வைப்பேன். மார்க்கம் சமூகத்தின் வளர்ச்சியையும் தமிழர்களின் விடுதலை விருப்பையும் நிறைவேற்றுவதே என் பணியாகும்.

எனது பிரதேசத்தில் வாழும் அத்தனை தமிழ் மக்களும் எனக்கு வாக்களிக்கும் பட்சத்தில், எனது வெற்றி மிக இலகுவாக உறுதி செய்யப்படுகிறது. இது தமிழனாக கனடிய அரசியல் நீரோட்டத்தில் கலந்து முன்னேறிட தமிழர்களுக்கு கிடைத்ததொரு அரிய சந்தர்ப்பமாகும். இதனை மனதில் கொண்டு ஒற்றுமையாக, அனைவரும் வாக்களிக்கும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

பாதுகாப்பான வாழ்விடம், அத்துடன் 8ஆம் வட்டாரம் சுத்தமான சுற்றுப்புறச் சூழல், இளையோர் மேம்பாடு போன்ற செயற்பாடு களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து செயற்படுவேன் என்பதை உறுதி செய்கின்றேன்.

தொடர்புகளுக்கு: தொலைபேசி : 416.669.7450
மின்னஞ்சல்: thaya@electthaya.com

# கனடிய அரசியலில் ஈடுபட தமிழர்கள் தயார்நிலையில்...



## நீதன் சண்முகராஜா

மார்க்கம் 7 & 8 வட்டாரம்
கல்விச் சபை வேட்பாளர்

**Markham நகரத்தின் 7ஆம் & 8ஆம் வட்டாரத்துக்குரிய கல்விச்சபை பிரதிநிதியாக குறிப்பாக அந்தப்பகுதி மக்களுடைய பிரதிநிதியாக தேர்ந்தெடுக்கப்படபோகின்றீர்கள். தனியே தமிழ் மக்களின் பிரதிநிதியாக அல்ல! எனவே அனைத்து இன மக்களின் வாக்குகளைப் பெறுவதற்கு எவ்விதமான பிரச்சார வேலைகளில் ஈடுபட்டுவருகின்றீர்கள்?**

கல்வித்துறையில் நான் தொடர்ந்து செய்துவரும் பணி காரணமாக என்ற உயர்தரப் பாடசாலைகளின் ஆசிரியர் சம்மேளனம், ஆரம்ப பாடசாலைகளின் ஆசிரியர் சம்மேளனம் ஆகிய இரு ஆசிரியர் சம்மேளனமும் எனக்கு ஆதரவு தந்திருக்கின்றன. மற்றைய சமூகத்தவர்களின் ஆதரவைப் பெறுவதற்கு இது ஒரு வழியாக இருக்கின்றது. பஞ்சாபி இனமக்கள் பாரிய அளவில் ஆதரவு தந்திருக்கின்றார்கள். அவர்களது ஆலயத்தில் கூட சமூக, அரசியல் திட்டங்கள் நடைபெறுகின்றன. அவர்கள் ஊடாகவும் ஆதரவு பெறப்பட்டிருக்கின்றது. இந்த பிரதேசத்தில் பல்வேறு மட்டங்களில் ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட பிரமுகர்கள் ஆதரவு தருகின்றார்கள். Markham நகரின் பாராளுமன்ற உறுப்பினர் எனது பிரச்சார கூட்டங்களில் கலந்துகொண்டு ஆதரவு தந்திருக்கின்றார். மற்றும் முஸ்லீம் இனத்தைச் சேர்ந்தவர்கள் குறிப்பாக 7ஆம் வட்டாரத்தில் முன்பு நகரசபை உறுப்பினராக இருந்த கலீதுஸ்மான் அவர்கள் இப்படியாக பல்வேறு மட்டங்களிலிருந்து பல்லின மக்களிடத்தில் இருந்தும் எனக்கு ஆதரவு கிடைத்திருக்கின்றது. இவற்றைத்தவிர எனது தொண்டர்கள் பல்வேறு இனத்தைச் சார்ந்தவர்கள் இருக்கின்றார்கள். முஸ்லீம், பஞ்சாபி இனத்தொண்டர்கள் அவர்களது இனமக்களது ஆதரவைப் பெற்றுக்கொடுக்கின்றார்கள். எனது பிரச்சார விடயங்களை அவர்கள் மட்டத்தில் எடுத்துச் செல்வதற்கு அவர்களது உதவி பெரும் பங்கு வகிக்கின்றது. Markham நகரத்தை எடுத்துக்கொண்டால் பிரதேசசபை, நகரசபை, கல்விச்சபை போன்ற மூன்று சபைகளுக்கு கனடிய தமிழர்கள் போட்டியிடுகின்றார்கள். பலர் வெற்றி பெறுவதற்குரிய வாய்ப்புக்கள் நிறையவே இருக்கின்றன. தமிழர்களது ஒற்றுமைப்பட்ட செயற்பாட்டால் அவை சாத்தியமாகும்.

**• "திசைகள்" பெற்றோருக்கான கைநூல் அண்மையில் தங்களால் வெளியிடப்பட்டது. அந்தநூலினுடைய பயன்பாடு, நோக்கம் பற்றி கூறுவீர்களா?**

பல ஆண்டுகளாக பெற்றோர்களுக்கும் பிள்ளைகளுக்குமிடையே இருக்கும் பிரச்சினை கள், இளைஞர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் முரண்பாடுகள் பற்றி கருத்தரங்குகள் நடத்தியிருக்கின்றோம். பல்வேறு செயற்பாடு களை நடத்தியிருக்கின்றோம். கூடுதலான சந்தர்ப்பங்களில் "Finger Pointing" என்று கூறுவோம். இது பெற்றோர்களது பிரச்சினை, பிள்ளைகளது பிரச்சினை என்று ஒருவரை-யொருவர் குற்றம் சாட்டுவதை பார்த்திருக் கின்றோம். ஆகவே பெற்றோர்களுக்குத் தேவையான தகவல்களை, பல்வேறு விடயங்களை உள்ளடக்கிய கைநூல் இதுவரைக்கும் முழுமையாக வெளியிடப்பட வில்லை. குறிப்பாக பெற்றோர்களது பாவனைக்கு உதவக்கூடியவகையில் அவர்களது தேவையை பூர்த்திசெய்யும் வகையில் "திசைகள்" என்ற பெயரில் இந்த நூலை தயாரித்து தொகுத்து வழங்கியிருக்கின்றேன். பெற்றோருக்கு ஒரு பிள்ளை பிறந்த காலத்திலிருந்து பல்கலைக் கழகம் செல்லும் வரைக்கும் பல்வேறு காலகட்டங்களில் பல்வேறு தகவல்களை தரக்கூடிய வகையில் இந்நூல் உதவியாக இருக்கும். பல்வேறு துறைகளில் அனுபவங் களைக் கொண்டவர்கள், வெவ்வேறு துறையில் பல ஆண்டுகளாக வேலைகள் செய்து அதில் அனுபவங்களைப் பெற்ற வல்லுனர்கள் எழுதிய 38 கட்டுரைகளை உள்ளடக்கிய ஒரு கைநூலாக இது வெளிவந்திருக்கின்றது. முக்கியமாக பெற்றோர்கள் இளைஞர்கள் வாழும் வாழ்க்கைச் சூழல்கள், வாழ்க்கை முறைகள் சம்பந்தமான அனைத்தையுமே சென்றுபார்த்து அறிந்து விடமுடியாது. அவற்றை அறிந்து கொள்வதற்குரிய ஒரு தளமாக இந்நூலைப் பார்க்கலாம்.

**• இந்தக் கைநூலை நீங்கள் வெளியிட்டு விற்பனை செய்துவரும் நிதியை உங்களது (கல்விச் சபை உறுப்பினராக) தேர்தல் பிரச்சாரத்துக்காக பயன்படுத்துவதற்கு உத்தேசித் திருப்பதாக அறிகின்றோம். எப்படி மக்களது ஆதரவு இந்த கைநூலுக்கு இருக்கின்றது?**

தேர்தல் பிரச்சாரத்தின் போது மக்களுக்கு பயன்பாடான விடயங்கள் ஏதாவது செய்ய வேண்டுமென விரும்பியிருந்தேன். தேர்தல் பிரச்சாரத்துக்கு நிதியை விட அதிகமான பெறுமதிவாய்ந்த பொருளை கொடுக்க வேண்டுமென நினைத்திருந்தேன். அந்த வகையில் தான் இந்த நூலை தொகுக்க ஆரம்பித்திருந்தேன். 'திசைகள்' நூலை பெறுபவர்கள் குறைந்த பட்ச நன்கொடையாக $20 டொலர் கொடுத்துப் பெற்றுக்கொள்ளலாம். மக்கள் இந்த நூலின் ஊடாக பயன் பெறுகின்றார்கள். அதேவேளை எனது தேர்தல் பிரச்சாரம் வெற்றிகரமாக நடைபெற அவர்கள் தரும் நிதி பயன்படுகின்றது. ஓரளவுக்கு இந்நூல் விற்பனை செய்யப்பட்டு விட்டது. ஆனால் இன்னும் நூல்கள் கையிருப்பில் இருக்கின்றன. இன்னும் பெற்றுக் கொள்ளாதவர்கள் நூலைப்பெற்றுக் கொள்வதனூடாக தொடர்ந்து மக்கள் எனது பிரச்சாரத்து ஆதரவளிக்கின்றனர். எல்லோரது வீடுகளிலும் முக்கியமான கைநூலாக இருக்ககும்.

*எனது தேர்தல் பிரச்சாரத்துக்கு நிதியை தரும் மக்களுக்கு அவர்கள் தரும் நிதியை விட பெறுமதியான ஒரு பொருளைக் கொடுக்க வேண்டுமென தீர்மானித்தேன். அந்த வகையில் "திசைகள்" பெற்றோர்க்களுக்கான கைநூல் உருவாகியது.*

*• அரசியல் துறையில் ஈடுபடுவதற்கு நிறைய பயிற்சிகள் தேவை. அப்பயிற்சியைப் பெறுவதற்கு ஆரம்ப கட்டத்திலிருந்து செல்ல வே ண்டும். எனவே கல்விச் சபையிலிருந்து எனது அரசியல் பயணத்தை ஆரம்பிக்கின்றேன்.*

*• கடந்த முறை போன்று அல்லாமல் இம்முறை போட்டியிடும் தமிழர்கள் குறைந்த வாக்கு எண்ணிக்கையில் தோல்வி அடையக்கூடாது. எனவே அனைத்து தமிழர்களும் வாக்குச்சாவடிகளுக்குச் சென்று வாக்களிப்பதன் மூலம் பல தமிழர்களது வெற்றியை உறுதி செய்து கொள்ளமுடியும்.*

**• நீதன் அவர்களே! கடந்த தேர்தலிலும் 7ஆம் & 8ஆம் வட்டாரத்துக்கான கல்விச்சபை உறுப்பினராக போட்டியிட்டிருந்தீர்கள். Markham பிரதேசத்தைப் பொறுத்தவரையில் பிரதேசசபை, நகரசபை, கல்விச்சபை என மூன்று நிலைகள் இருக்கின்றன. மற்றைய சபைகளுக்கு நீங்கள் போட்டியிடுவதற்கான தகுதிகள் அனைத்தும் இருந்தும் ஏன் மீண்டும் கல்விச்சபை உறுப்பினர் நிலைக்கு போட்டியிடுகின்றீர்கள்?**

என்னுடைய அனுபவங்கள் கல்வித்தகைமைகள் அனைத்துமே கல்வியும் அதைச் சுற்றிய துறையாகவுமே இருக்கின்றன. கல்வி சம்பந்தமாக குறிப்பாக கற்பித்தல் தொடர்பாக Teachers College இல் கற்று சான்றிதழைப் பெற்று தகுதியுள்ள ஆசிரியராக இப்பொழுது திகழ்கின்றேன். அத்துடன் ஆசிரியராக கடமையும் ஆற்றியிருக்கின்றேன். இப்பொழுது கனடிய பாடசாலையில் எந்த நேரமும் கற்பிக்கும் தகுதியைப்பெற்றிருக்கின்றேன். அதைவிட இப்பொழுது Toronto பல்கலைக்கழகத்தில் M.A பட்டத்துக்கான முயற்சியில் ஈடுபட்டிருக்கின்றேன். பாடசாலை, மாணவர்கள், இளைஞர்கள் சம்பந்தமான விடயங்களில்தான் அதிகமாக ஈடுபட்டிருக்கின்றேன் தற்பொழுதும் ஈடுபட்டும் வருகின்றேன். கல்வித்துறையாக இருந்தாலும் மாணவர்கள், இளைஞர்களின் முன்னேற்றத திட்டங்களில் முக்கியமாக பங்காற்றுகின்றேன். ஆகவே எந்த அரசியல் பிரதிநிதியாக நான் தேர்ந்தெடுக்கப்பட்டால் சாதகமான பாதிப்பை கொண்டுவர முடியுமோ அதை முன்னிலைப்படுத்தியதால் தான் கல்விச்சபைப் பிரதிநிதி நிலைக்காகப் போட்டியிடுகின்றேன். நீங்கள் கூறியது போல் மற்றைய சபைகளுக்கு எனக்கு வாய்ப்பு இருந்தாலும் கல்விச்சபைப் பிரதிநிதி நிலையை தேர்ந்தெடுக்க முன்கூறிய விடயங்கள் காரணமாக இருக்கின்றன. முக்கியமாக அரசியல்துறையில் ஈடுபடுவதற்கு பயிற்சி தேவை. பயிற்சியைப்பெற்றுக்கொள்ள வேண்டுமாயின் ஆரம்ப கட்டத்திலிருந்து செல்லவேண்டும். இடையில் புகுவதைவிட கல்விச்சபையிலிருந்து எனது அரசியல் பயணத்தை தொடர்வதற்கு இலகுவாகவும் நன்கு தெரிந்தவிடயத்தை சிறப்பாக செய்வதற்கும் வழிவகுக்கும் என நம்புகின்றேன்.

**• கனடிய தமிழர்கள் வெற்றிபெறுவதற்கு எமது மக்கள் எவ்வாறு பங்களிக்கலாம்?**

மிகமுக்கியமானது எமது மக்கள் வாக்களிக்க வேண்டும். விசேடமாக மார்க்கம் நகரத்தில் நவம்பர் 4ஆம், 5ஆம் திகதிகளில் முன்கூட்டிய வாக்குப்பதிவினை (Early Voting) மேற்கொள்ளலாம். இது வார இறுதி நாட்களாக இருக்கின்றது. நவம்பர் 4ம், 5ம் திகதிகளில் முன்கூட்டியே வாக்களிக்கும் சந்தர்ப்பத்தை எமது மக்கள் சரிவர பயன்படுத்திக்கொள்ள வேண்டும். இந்த திகதிகளில் வாக்குப்பதிவை மக்கள் செய்வது சிரமம் இருக்காது. அத்துடன் வேட்பாளர்களுக்கும் ஓரளவுக்கு வாக்குகளை கணிக்கக்கூடியதாக இருக்கும். அதாவது எத்தனை தமிழர்கள் வாக்களித்து விட்டனர் என்பதை தெரிந்து கொள்வதற்கும் உதவியாக இருக்கும். மிகுதியானோர் நவம்பர் 13ம் திகதி வாக்களிப்பதற்குரிய வேலைத்திட்டங்களைச் செய்யலாம். வாக்களிப்பது என்பது மிக முக்கியமான விடயமாக இருக்கின்றது. கடந்த தேர்தலில் நான் 400 வாக்குகளால் தோல்வியடைந்தேன். இன்னொரு தமிழர் எனக்கு எதிராக போட்டியிட்டிருந்தார் என்பது உண்மை. ஆனால் எத்தனையோ தமிழர்கள் வாக்களிக்கவில்லை என்பதும் உண்மை. அப்பொழுது 400 தமிழர்கள் வாக்களித்திருந்தால் வெற்றியை நான் அன்றே பெற்றிருப்பேன். எனவே இம்முறை போட்டியிடும் தமிழர்கள் குறைந்த எண்ணிக்கையில் தோல்வியடையக் கூடாது. எனவே அனைத்து தமிழர்களும் வாக்குச்சாவடிகளுக்கு சென்று வாக்களிப்பதன் ஊடாக பல தமிழர்களது வெற்றியை உறுதிசெய்து கொள்ளலாம். அத்துடன் தமிழர்கள் வெற்றி பெறவேண்டுமென நினைப்பவர்கள் குறைந்த பட்சம் உங்கள் பகுதிகளில் போட்டியிடும் தமிழர்களது




பிரச்சாரத்துக்காக தொண்டர்களாக இணைந்து கொள்ளுங்கள் அல்லது உங்களுக்குப் பிடித்த நம்பிக்கையான வேட்பாளர்கள் யாரோ அவர்களுடன் இணைந்து வேலைசெய்வதன் மூலம் அவர்களது வெற்றியை உறுதிசெய்து கொள்ளலாம்.

**• நிறைவாக எமது வாசகர்களுக்கு என்ன கூறவிரும்புகின்றீர்கள்?**

மிகவும் குறுகிய காலத்தில் தொடர்ந்து எமது சமூகம் பல்வேறு துறைகளில் கால்பதித்திருக்கின்றனர். அதனூடாக கனடிய தமிழர்களின் வளர்ச்சியை நாம் காணக்கூடியதாக இருக்கின்றது. அடுத்த கட்ட வளர்ச்சியாக ஒரு பலமான சமூகமாக கனடாவில் நிலை நாட்டிக் கொள்வதற்கு எமக்கு முக்கியமான துறை அரசியல் துறை. இந்த துறையிலும் பிரதநிதித்துவம் பெற்றோமானால் எமது சமூகம் அசைக்கமுடியாத, வலுவான சமூகமாக மாறும். அந்தக்கட்டத்தில் நாம் நினைத்த விடயங்களில் தாயக சூழலைப் பொறுத்தவரையிலும் சரி, கனடிய சூழலைப் பொறுத்தவரையிலும் சரி, எமது அபிலாசைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய சந்தர்ப்பம் வரும். அந்த தருணம் தற்பொழுது வாய்ந்திருக்கின்றது. அரசியல் துறையின் ஆரம்ப கட்டமாகப் பார்க்ககூடியது மாநகரசபை அரசியல்மட்டம். அந்தமட்டத்தில் இணைந்து கொள்ளக்கூடிய சந்தர்ப்பம் தற்பொழுது இருக்கின்றது என்பது மட்டுமல்ல. அதற்குரிய தயார்நிலையில் தமிழர்கள் இருக்கின்றோம். ஆகவே இந்த சந்தர்ப்பத்தை முழுமையாக நாம் பாவித்துக்கொள்ள வேண்டும். நிறைவாக எனக்கு தொடர்ந்து ஆதரவு தந்து கொண்டிருக்கும் கனடியத்தமிழர்களுக்கும் ஊடகங்களுக்கும் எனது நன்றி. அத்துடன் உங்களின் முழுஆதரவையும் எதிர்பார்க்கின்றேன்.

தொடர்புகளுக்கு: தொலைபேசி: 905.201.9301
மின்னஞ்சல்: info@neethanshan.ca
இணையத்தளம்: www.neethanshan.ca



**வீட்டில் முதலிட்டுச் சேமிக்கும் பணத்தை பல மடங்காகப் பெருக்கவும், பிள்ளைகளின் எதிர்காலத்தை வளமாக அமைக்கும் போதே உங்கள் ஓய்வு காலத்திற்காக ஒரு வீட்டினை இலகுவாகத் தேடிக் கொள்ளும் வழிகளை அறிந்து வாழ்க்கையில் வெற்றி பெற அழையுங்கள்.**

*பரம்ஜி* - **416.230.1107**

**PARAM GNANASWARAN**
Broker
**HOME LIFE GTA REALTY INC.** Brokerage*
Office East: 1711 McCowan Rd., Suite 206, Scarborough, ON
**416.321.6969**
Office West: 145 Traders Blvd., Suite 28, Mississuga, ON
**905.712.2666**
* INDEPENDENTLY OWNED AND OPERATED
paramg@gmail.com

# விடைபெறுகின்றது...! ஒரு நட்சத்திரம்...!

## சாதனைவீரர் ஷுமாக்கர்

"இத் தருணத்தில் சொல்ல வேண்டியவை நிறைய உள்ளன. ஆனால் அதற்குச் சரியான வார்த்தைகளைத்தான் தேட முடியவில்லை. என்றாலும், இக்கட்டான நிலைகளில் என்னை உற்சாகப்படுத்திய ரசிகர்களை இழப்பது எனக்கு வேதனை அளிக்கிறது" கடந்த ஞாயிற்கிழமை ஃபார்முலா ஒன் கார் பந்தயத்துக்கு விடை கொடுத்தபோது ஜாம்பவான் மைக்கேல் ஷுமாக்கர் உதிர்த்த வார்த்தைகள் இவை.



37வயதாகும் 'ஷுமி', தனது அபாரமான திறமையால் உலக கார் பந்தய ரசிகர்களின் கதா-நாயகனாகத் திகழ்ந்தவர். ஃபார்முலா ஒன் கார் பந்தயமே இவரால் தான் அதிக அளவில் பிரபலமானது என்று கூறலாம். கிராண்ட் பிரீ பந்தயத்தில் காரை 'பறக்க விடுவது' சாதாரண-மான விஷயம் அல்ல. மனவலிமை மிக அதிகம் வேண்டும். மணிக்கு 350 கிலோமீற்றர் வேகத்தில் காரில் பாய்வதற்கு அசாத்திய தைரியம் வேண்டும். இல்லையேல், பட்டமெல்லாம் வசப்படாது.

அப்படிப்பட்ட போட்டியில் ஏழுமுறை சீசனுக்கு சாம்பியன் பட்டத்தை வென்றவர்தான் ஷுமாக்கர். ஒரு சீசன் என்பது அந்த ஆண்டில் நடைபெறும் 18 முதல் 21வரையிலான கிராண்ட் பிரீ பந்தயங்களை உள்ளடக்கியது. ஒவ்வொரு போட்டியிலும் சேர்க்கும் புள்ளிகளின் அடிப்படை யில் சாம்பியன் பட்டம் தீர்மானிக்கப்படுகிறது.

கிராண்ட் பிரீ பந்தயங்களில் ஒன்றான பெல்ஜியம் பந்தயத்தில் 1991 இல் முதன் முதலாக அடியெடுத்து வைத்த ஷுமி, தற்போது கார் பந்தய ஆர்வலர்களின் ஆதர்சமாகத் திகழ்கிறார். அதிகமான கிராண்ட் பிரீ பந்தயங்களைக்கைப் பற்றி சாதனை படைத்திருந்த ஆர்ஜென்ரீனா வீரர் ஜுவன் மானுவல் ஃபார்ஜியோயின் சாதனையை 2003இல் முறியடித்த பெருமை இவருக்கு உண்டு. 1950களில் பிரபலமான ஃபான்ஜியோ ஐந்து சீசன்களில் சாம்பியன் பட்டத்தை வென்றுள்ளார்.

கார்பந்தய உலகில் நிகரற்றவர் ஷுமாக்கர்தான் என உலகம் போற்றினாலும், ஃபான்ஜியோதான் சிறந்தவர் என அவரது சாதனையை முறியடித்தபோது தன்னடக்கத்தோடு கூறியவர் ஷுமி. 2000 ஆண்டுமுதல் 2004ஆம் ஆண்டுவரை ஷுமியை சீண்டிப் பார்க்க கார் பந்தய வட்டாரத்தில் ஆள் இல்லை. அதனால், சென்ற இடமெல்லாம் புகழ், மகுடம், பணமழை.

கிராண்ட் பிரீ பந்தயங்களுக்கு அதிபதியாகத் திகழும் ஷுமி, ஜேர்மனியில் உள்ள சிறிய நகரான கெர்பனில் ஒரு கொத்தனாருக்கு மகனாகப் பிறந்தவர். 2004ஆம் ஆண்டு, விளையாட்டு வீரராக அதிகம் சம்பாதித்த பெருமை இவருக்கு உண்டு. 80 மில்லியன் டொலர் அப்போது அவருக்கு வருமானம்.

## விளையாட்டுத் தகவல்கள் 201

16 ஆண்டுகளாக ஸ்டியரிங்கும் (Steering), ரேஸ் டிராக்குமாகவே ((Race Track) காலத்தைக் கழித்துவிட்ட ஷுமாக்கர், கடந்த ஞாயிற்றுக்கிழமை பிரேசிலில் உள்ள சாபாலோ சர்க்யூட்டில் கடைசியாகப் போட்டியிட்டார். அதில் நாலாவது இடத்தைத்தான் பிடிக்க முடிந்தது என்றாலும், 2006 சீசன் சாம்பியனான அலான்சோவுக்கு கடைசிப் போட்டிவரை இவர் கிலி கொடுத்துவந்தது குறிப்பிடத்தக்கது.

தொடக்கத்தில் கடுமையான பின்னடைவு பெற்று, 15வது இத்தாலி கிராண்ட்பிரீ பந்தயத்தில் பட்டம் வென்று மொத்தப் புள்ளிகள் பட்டியலில் அலான்சோவை நெருங்கினார் ஷுமி. ஆனாலும், சீசனுக்காக சாம்பியன் பட்டத்துடன் ஓய்வு பெறவேண்டும் என்ற அவா அவருக்கு கைகூடவில்லை.

அலான்சோவே 2006 ஃபார்முலா - 1 பட்டத்தைக் கைப்பற்றியுள்ளார். அவர் மட்டுமல்ல, முன்னாள் உலக சம்பியன்களான மிகா ஹாக்கினென், நிக்கி லாவ்டா ஆகியோரும் ஷுமாக்கரைத் தோற்கடிக்க ஒருவர் புதிதாகப் பிறக்க வேண்டும் எனக்கூறியுள்ளது குறிப்பிடத்தக்கது.

ஜோர்டான், பென்னட்டான் ஆகிய நிறுவனங்களுக்காக ஒப்பந்தமாகி பந்தயங்களில் வலம் வந்ததைக் காட்டிலும் ஃபெராரி நிறுவனத்துக்காக அதிக ஆண்டுகள் கார் ஓட்டியுள்ளார் ஷுமாக்கர். 1996இலிருந்து கடைசியாக விடைபெற்றதுவரை ஃபெராரி குழுவில் இருந்துள்ளார். அதிலிருந்த போது தான் ஃபான்ஜியோவின் சாதனையை முறியடித்தார். அத்துடன், தொடர்ந்து ஐந்துமுறை (2000-2004) ஃபார்முலா - 1 சாம்பியன் பட்டத்தையும் வென்ற சிறப்பை பெற்றார். மொத்தத்தில் 250கிராண்ட் பிரீ பந்தயங்களில் பங்கேற்று, 68முறை சாம்பியன் பட்டத்தை வென்றுள்ளார் ஷுமி.

கால்பந்தாட்டம் என்றால் பீலே, துடுப்பாட்ட என்றால் பிராட்மன், கூடைப்பந்தாட்டம் என்றால் மைக்கேல் ஜோர்டான் என பெருமை கூறும் விளையாட்டு உலகம், எஃப் - 1 பந்தயம் என்றால் மைக்கேல் ஷுமாக்கரைத்தான் நினைக்கும். அதை, விளையாடும் போதே ஷுமாக்கர் பெற்றது கூடுதல் சிறப்பு, ஷுமாக்கரின் ஓய்வு, கார் பந்தய போட்டியில் நிரப்ப முடியாத வெற்றிடத்தை ஏற்படுத்தியுள்ளது உண்மை.

### கிரிக்கெட் ICC CHAMPION TROPHY
### சாதிக்கும் Capitn ஸ்டீபன் பிளெமிங்

ஒருதின கிரிக்கெட் வரலாற்றில் அதிகமான போட்டிகளில் அணித்தலைவராகப் பணியாற்றிய சாதனையை பதிவு செய்தார் நியூஸிலாந்தின் ஸ்டீபன் பிளெமிங். 33வயதாகும் அவருக்கு, பாகிஸ்தானுக்கு எதிராக மொஹாலியில் புதன்கிழமை நடைபெற்ற ஆட்டம் 194 வது போட்டியாக அமைந்தது. இதையடுத்து, இலங்கை முன்னாள் அணித்தலைவர் அர்ஜுன ரணதுங்காவின் சாதனையை முறியடித்துள்ளார் பிளெமிங். ரணதுங்கா 193 போட்டிகளில் அணித்தலைவராகப் பணியாற்றி சிறப்பு சேர்த்திருந்தார். பிளெமிங் தலைமையிலான நியூஸிலாந்து அணி, 85 போட்டிகளில் வெற்றியும், 95 போட்டிகளில் தோல்வியும் கண்டுள்ளது. 12 போட்டிகள் முடிவில்லாமல் போயின. ஓர் ஆட்டம் வெற்றிதோல்வியின்றி முடிந்துள்ளது.

இந்தியாவுக்கு எதிராக 1993 - 94 இல் சர்வதேச கிரிக்கெட் போட்டியில் அறிமுகம் ஆனார். 1997 இல் அணித்தலைவர் பதவியைப் பெற்றார். இடதுகை பேட்ஸ்மேனான பிளெமிங், பாகிஸ்தானுக்கு எதிரான மொகஹாலி ஆட்டத்துக்கு முன்புவரை 255 ஒருதினப் போட்டிகளில் விளையாடி, 7,273 ஓட்டங்களை சேர்த்துள்ளார். அதே சமயம் ரெஸ்ரில் 102 போட்டிகளில் பங்கேற்று 6,545 ஓட்டங்களைச் சேர்த்துள்ளார்.

### இந்தியா Vs மேற்கிந்தியத்தீவுகள்

ஐசிசி சாம்பியன்ஸ் கோப்பை கிரிக்கெட் போட்டியில் அரையிறுதிச் சுற்று வாய்ப்பை உறுதிசெய்தது நடப்பு சாம்பியன் மேற்கிந்தியத் தீவுகள். அகமதாபாதில் வியாழக்கிழமை நடைபெ-பற்ற 'ஏ' பிரிவுக்கான லீக் ஆட்டத்தில் இந்தியாவை மூன்று விக்கெட் வித்தியாசத்தில் தோற்கடித்தது மேற்கிந்தியத்தீவுகள்.

இது அந்த அணிக்கு இரண்டாவது வெற்றி. இங்கிலாந்துடன் நடைபெறும் மூன்றாவது ஆட்டம் மேற்கிந்தியத்தீவுகளுக்கு சம்பிரதாயமாகவே இருக்கும். அதேசமயம் ஒரு தோல்வி. ஒரு வெற்றியுடன் உள்ள இந்தியா, வரும் 29ஆம் தேதி சண்டிகாரில் நடைபெறும் ஆட்டத்தில் அவுஸ்திரேலியாவை வீழ்த்தினால் மட்டுமே அரையிறுதி வாய்ப்பை பெறமுடியும்.

**எஸ். கணேஷ்**

எளிதான இலக்கு - 224 ஓட்டங்களைச் சேர்த்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆடிய மேற்கிந்தியத்தீவுகள் அணி இரண்டு பந்துகள் மீதம் இருக்கையில் ஏழு விக்கெட்டுகளை இழந்து பரபரப்பான வெற்றியை பெற்றது. தொடக்கம் முதல் பொறுமையாக ஆடிய மேற்கிந்தியதீவுகள் அணி, சந்தர்பால் சார்வான் ஆட்ட மிழந்ததற்குப் பிறகு 'ஆட்டம்' கண்டது. 13 பந்துகளுக்கு 11 ஓட்டம் தேவைப்பட்ட நிலையில் நாலு விக்கெட்டுகளை இழந்தது குறிப்பிடத்தக்கது. பந்துகளில் நாலு ஓட்டம் வெற்றிக்கு தேவைப்பட்ட போது, அகர்கர் வீசிய பந்தை பவுண்டரிக்கு விரட்டி அணியை வெற்றிக்கு அழைத்துச் சென்றார் சாமுவேல்ஸ்.

முன்னதாக, சார்வான் 53 ஓட்டங்களும், சந்தர்பால் 51 ஓட்டங்களும், மோர்டான் 45 ஓட்டங்களும் சேர்த்து அணியின் வெற்றியை எளிதாக்கினர்.

"Toss" டாஸ் வென்ற பிரையன் லாரா, இந்தியாவை முதலில் துடுப்பெடுத்தாடக் கேட்டுக்கொண்டார்.

சச்சின், சேவாக் ஆட்டத்தைத் தொடங்கினர். சிறப்பாக விளையாடுவார் என எதிர்பார்க்கப்பட்ட சேவாக் 17 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். அவரைத் தொடர்ந்து, வந்த வழித்தடம் மறைவதற்குள் திரும்பினார் பதான். அவர் ஓட்டம் ஏதும் எடுக்கவில்லை. 27ஓட்டங்களைச் சேர்ப்பதற்குள் இரண்டி விக்கெட்டுகளை இழந்து பரிதவித்தது இந்தியா. அதன்பின்னர் அணித்தலைவர் திராவிட், சச்சினுடன் ஜோடி சேர்ந்து பொறுப்புடன் விளையாடினார். இதனால் அணியின் புள்ளிவிபரம் சற்று உயர்ந்தது. 29 ஓட்டங்களைச் சேர்த்திருந்தபோது, பிராட்ஷா வீசிய பந்தில் 'கிளீன் போல்டு' ஆனார் சச்சின். ரசிகர்கள் இதனால் ஏமாற்றம் அடைந்தனர்.

அடுத்து திராவிட்டுடன் ஜோடி சேர்ந்தார் யுவராஜ் சிங். நாலு பவுண்டரிகளுடன் 27 ஓட்டங்களைச் சேர்த்து வெளியேறினார். அவர், நாலாவது விக்கெட்டுக்கு யுவராஜ், திராவிட் ஜோடி 61 ஓட்டங்களைச் சேர்த்தது. அடுத்து சிறிது நேரத்தில் 'ஆட்டமிழந்தார்' ஒரு ஓட்டத்தில் அரை சதத்தை இழந்தார் திராவிட்.

அடுத்து வந்த அதிரடி நாயகன் தோனி சற்று அமுக்கியே வாசித்துவந்தார். இருந்தாலும், ஓவர்கள் இல்லாத நிலையைக் கருத்தில் கொண்டு கடைசியில் தனது வழக்கமான அதிரடியை வெளிப்படுத்தினார். அணியின் புள்ளிவிபரம் குறிப்பிடும்படியாக உயர்ந்தது. இதற்கிடையே 19 ஓட்டங்களுடன் ராய்னா ஆட்டமிழந்தார். அடுத்து வந்த ஹர்பஜன் சிங், தோனியுடன் சேர்ந்து விரைவாக ஓட்டங்களைச் சேர்த்தார். 15 ஓட்டங்கள் சேர்த்த நிலையில் ஹர்பஜன் ஆட்டமிழந்தார். தோனி பொறுமையுடன் விளையாடி தனது ஒன்பதாவது அரை சதத்தைப் பூர்த்தி செய்து ஆட்டமிழந்தார். அவர் சேர்த்த 51 ஓட்டங்களில் இரண்டு சிக்சர்களும் ஒரு பவுண்டரியும் அடங்கும்.

ICC CHAMPION TROPHY இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளது. Group B பிரிவில் தென் ஆபிரக்கா அணியும், நியூசிலாந்து அணியும் அரைஇறுதி ஆட்டத்தில் விளையாடுவதற்கு தகுதி பெற்றுள்ளன. Group A பிரிவில் மேற்கிந்தியத் தீவுகள் அணி ஏற்கனவே அரை இறுதியாட்டத்தில் தகுதி பெற்றுவிட்டது. நவம்பர் 10ஆம் திகதி முதல் அரை இறுதியாட்டமும், 2ஆம் திகதி இரண்டாம் அரையிறுதியாட்டமும் நடைபெற இருக்கின்றது. இறுயாட்டம் நவம்பர் 5ஆம் திகதி மும்பாய் மைதானத்தில் நடைபெற இருக்கின்றது.




நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் - இலவச ஆலோசனை வழங்கப்படும்

**தீராத நோயினால் பீடிக்கப்பட்டுள்ளீர்களா?**



சிறியோர் தொடக்கம் முதியோர்வரை இதுவரை தீராத வியாதியினால் பீடிக்கப்பட்டு குணமடையாமல் இருப்பவர்களுக்கு இயற்கை மூலிகைகளிலான தீங்கு விளைவிக்காத சூரணங்கள், குளிகைகள், லேகியங்கள், உயிர்ச்சத்துக்கள், பானங்கள் போன்றவற்றினாலும் சர்மத்தின் வெளிப்புறத்தே ஏற்பட்டிருக்கும் மாறாத நாள்பட்ட புண்களுக்கும், சொறியினால் ஏற்பட்டிருக்கும் காயங்களுக்கும் விபத்தினால் ஏற்பட்ட அடிகாய நோவிற்கும் ஏற்ற அனுபவ ரீதியாக கையாண்ட எண்ணையினால் குணமடைய தகுந்த ஆலோசனை! இலவசமாக வழங்கப்படும். இது தவிர தகுந்த அன்ன ஆகாரங்களினாலும் நோய்கள் நிவர்த்தி பெற வழியுண்டு.

இலவச ஆலோசனைகளுக்கு : **416.439.8549**

**வைத்திய கலாநிதி கே.ரி. கோபால்**

D.A.M.S - R.A.M.P. (SriLanka) M.H.D.C (Madras) C.D.S. _ C.N.H.P. (Canada)

Herbalist - Sidha - Ayurvedic - Homeopathic & Biochemic Family Physician

LG.Ayurvedic Medical Services (SriLanka)





# மத்தியவங்கி வட்டிவீதத்தை அதிகரிக்கவில்லை

ஒக்ரோபர் 17ஆம்திகதி, செவ்வாய்கிழமை கூடிய, கனடிய மத்தியவங்கியின் ஆளுனரும் அவர்களின் குழாமினரும் இம்முறையும் வட்டிவீதத்தை அதிகரிக்கவில்லை. ஏற்கனவே இருந்தது போல், 4.25% ஆக வைத்திருக்கிறார்கள். வீட்டுச்சந்தைக்கு பொறுப்பான நிறுவனம் (Canadian Real Estate Association - CREA) இந்த வருடம் முழுவதும் வட்டிவீதத்தால் எதுவித மாற்றமும் ஏற்படாது என எதிர்வு கூறியுள்ளது. செப்ரெம்பர் 2005 இலிருந்து வட்டி வீதத்தை அதிகரித்துவந்த மத்திய வங்கி யூலை 2006 உடன் அதிகரிப்பை தற்காலிகமாக நிறுத்தியுள்ளது. இது ஏழு தடவைகள் அதிகரித்துள்ளது. அதிகரித்ததை விளம்பரவாசகர்கள் அறிந்ததே.



கனடிய பொருளாதாரத்தின் வளர்ச்சி இறக்கம் அடைந்துள்ளதை மத்தியவங்கி தெரியப்படுத்தியுள்ளது. அண்மையில் வெளிவந்த தகவல்களின்படி அமெரிக்க பொருளாதாரம் இறங்குமுகமாக செல்வதாகவும், விற்கப்படும் வீடுகளின் எண்ணிக்கை குறைவதாகவும், வீட்டின் விலையில் தொடர்ந்தும் இறக்கம் ஏற்படுவதாகவும் தெரிகின்றது. இதன் தாக்கம் கனடாவிலும் ஏற்படலாம் என பொருளாதார வல்லுனர்கள் எதிர்வு கூறியுள்ளார்கள். இதனைக்கருத்தில் கொண்டே கனடிய மத்திய வங்கி வட்டி வீதத்தினில் மாற்றம் ஏற்படுத்தாமல் விட்டுள்ளது எனத் தோன்றுகின்றது. மேலும் கனடாவில் 2006ஆம் ஆண்டின் இரண்டாவது, மூன்றாவது காலாண்டு பகுதியில் பொருளாதாரம் எதிர்பார்த்ததைவிட மந்தமாக இருப்பதாகவும் வெளியிடப்பட்டுள்ளது. கனடிய பொருளாதாரம் முக்கியமாக ஏற்றுமதியிலேயே தங்கியுள்ளது. ஏற்றுமதியின் தளர்வே இதற்கு காரணம் ஆகும். ஏற்றுமதி குறைவதால் பொதுவாக Lumber, Gypsum (Drywall) போன்றவற்றின் ஏற்றுமதியில் பாரிய இறக்கம் ஏற்பட்டுள்ளது. ஆனால் கனடாவின் மேற்குபகுதியில், உதாரணமாக அல்பேட்டா மாகாணத்தில் பொருளாதார நிலைமை வேறு. அங்கு பொருளாதார வளர்ச்சி அதிகமாகக் காணப்படுகின்றது. வீட்டின் விலையும் அபாரமாக அதிகரிக்கின்றது. இதனால் கனடிய மத்தியவங்கி வட்டிவீதத்தை குறைப்பதற்கு காலம் எடுக்கலாம். மேற்கு மாகாணங்களின் பொருளாதார வளர்ச்சி பணவீக்கத்தை ஏற்படுத்தலாம் என மத்தியவங்கி எதிர்பார்க்கின்றது. இதனால் வட்டிவீத இறக்கத்தை உடனடியாக எதிர்பார்க்கமுடியாது. பொதுவாக 2007 இலும் கனடிய பொருளாதாரம் மந்தகதியிலே இருக்கும் என எதிர்பார்க்கலாம். இருந்தபோதிலும், வீட்டுச் சந்தைகளில் விற்க இருக்கும் வீடுகளின் எண்ணிக்கை அதிகரிக்கின்றது. அத்துடன் வீட்டின் சராசரி விலையும் அதிகரித்தே செல்கின்றது. இதனால் வாங்குபவர்களின் எண்ணிக்கை குறைவடைந்தே செல்கின்றது. மற்றும் அண்மைக்காலங்களில் வீடு வாங்குபவர்கள் குறைந்த காலத்து வீடுகளையே (5 வருடத்திற்கு உட்பட்ட வீடுகள்) வாங்குகிறார்கள். துரதிஷ்டவசமாக புதிய வீடுகளின் விலை (ஐந்து வருடத்திற்கு உட்பட்டவரை) ஒப்பீட்டளவில் மிக அதிகமாகக் காணப்படுகின்றது. இதற்கு பின்வரும் சில காரணங்களைக் கொள்ளலாம். வீடுகட்டுவதற்கு பாவிக்கப்படும் பொருட்களின் மிகக்கூடிய விலை, நிர்மாணத்துறையில் தொழில் புரிபவர்களின் சம்பளம், வீடு கட்டப்படும் நிலத்தின் விலை, உள்ளூராட்சி அரசுகளுக்கு செலுத்தப்படும் மற்றும் வரி / நிலுவை மற்றும் நிறுவனங்களின் பணப் பேராசை போன்றவை.

ஆனால் உதாரணமாக ஒரேஅளவிலான பத்துவருடத்திற்கு மேற்பட்ட வீடுகள் ஒப்பீட்டளவில் குறைந்த விலையில் வாங்கக்கூடிய வசதிகள் இருந்தும் பொதுவாக இந்த காலகட்டத்தில் எல்லா சமூகத்தினரும் (Community) ஐந்து

## நாமும் நமது இல்லமும்

### ராஜா மகேந்திரன்

### தொடர் - 238

வருடத்திற்கு உட்பட்ட வீடுகளையே விரும்புகின்றார்கள். இதனாலும், பத்து வருடதற்திற்கு மேற்பட்ட வீடுகளின் விற்பனையின் மந்த நிலையே ஏற்பட்டுள்ளது. ஆனால் புதிய விலை கூடிய வீடுகளை வாங்குவதால், மாதாந்த கட்டுப்பணத்தால் மேலதிக செலவு ஏற்படும் என்பதனை கவனத்தில் கொள்வது நல்லது.

எது எப்படி இருந்தாலும் உங்களுடைய மாதாந்த கட்டுப்பணத்தை கருத்தில் கொண்டு வீடு வாங்குவதே சிறந்தது நன்மை பயக்கும்.

அமெரிக்க நாட்டின் பொருளாதாரத்தில் இறக்கம் ஏற்பட்டுள்ளதால், இதனை கனடிய பொருட்களான மரம் (Lumber) சுவரிற்கு பாவிக்கும் Drywall சிறப்பாக Gypsum, வயர்களிற்கு உபயோகிக்கும் Copper இன் ஏற்றுமதியில் பாரிய இறக்கம் ஏற்பட்டுள்ளது.




Raja M. Mahendran, P. Eng.
(Broker / Owner)

இப்பொழுது இரு இடங்களில்,

HomeLife GTA Realty Inc., Brokerage*

1711 McCowan Rd. #206, Toronto - 416.321.6969
145 Traders Blvd # 28, Mississauga - 905.712.2666

*Independently owned & operated

| Brand New Semi Detach | Detached Bungalow | Detached 2 Storey | Detach 2 Storey | Townhouse 2 Storey |
|---|---|---|---|---|
|  |  |  |  |  |
| 9th Line & North of Steeles | Scar. Golf Club & Lawrence | Morningside & Sheppard | Morningside & Sheppard | Morningside & Ellesmere |
| • 1972 sq.ft.<br>• 4 Bedroom /<br>• 3 Washroom<br>• 4 Brand new Appoiances<br>• $339,900 | • Detached Bungalow<br>• 3 Bedroom<br>• 2 Bedroom BSMT Apt.<br>• Walkout BSMT<br>• $279,900 | • 4 Bedroom<br>• 3 Washroom<br>• BSMT Finished Walk out<br>• 2 Kitchen<br>• $299,900 | • 3 Bedroom<br>• BSMT Finished<br>• BSMT Apt. Possible<br>• $239,900 | • 3 Bedroom<br>• Upgraded/New Appliances<br>• Low Maintence fee<br>• $184,900 |

Nantha Aiyadurai
Cell: 613 850 9931
COLDWELL BANKER COBURN REALTY

கனடாவின் தலைநகர் ஒட்டாவாவில்
Buying or Selling

Relocation Service
OTTAWA>>><<<GTA



நந்தா ஐயாத்துரை

Business: 613 823 7555 Fax: 613 825 8177 3777 Strandherd Drive, Nepean, Ontario K2J 4B1

# எனது நாடக அனுபவங்கள் (11)



## நடிகரும் பார்வையாளரும்

நடிகரும் பார்வையாளரும்

அரங்கம் நெடுங் காலமாகவே 'பார்க்கப்படும் அரங்க'மாகவே (Observed Theatre) இருந்து வந்திருக்கிறது. அதாவது வரையறுக்கப்பட்ட ஓர் இடத்தில் (மேடையில்) கலைஞர்கள் நிகழ்ச்சிகளை ஆற்ற, அவற்றைப் பார்வையாளர் இருந்து பார்த்து இரசித்தலே வழக்கமாகும். இம்முறையில் அவைக்காற்று கலைஞர்களுக்கும் அவையோருக்குமிடையில் கட்புல, செவிப்புல, கற்பனைத் தொடர்பின்றி வேறுவகைத் தொடர்புகள் எதுவும் இல்லை. ஆற்றுநர்க்கும் அவையினருக்கும் இடையில் கடும் வேலி போடுவதை விரும்பாத சிலர் 1950களில் ஆற்றுநர்க்கும் அவையினர்க்கும் தொடர்புப் பாலம் அமைக்க முயன்றனர். அதன் விளைவாக நடிகர் அவைக்குள் வந்து ஆட்களுடன் பேசுதல், கை குலுக்குதல் போன்ற தொடர்புகளை ஏற்படுத்தலாயினர். அவையினரும் அரங்கினில் ஏறிச் சிறு பங்களிப்புகளைச் செய்ய ஊக்குவிக்கப்பட்டனர். கலையை வாழ்வோடு இணைக்க மேற்கொண்ட முயற்சியாக இது கருதப்பட்டது.

பார்வையாளர் நாடகத்திற் பங்குகொள்ளுமிடத்து அரங்கம் பார்க்கப்படும் அரங்கமாகவன்றி பங்கேற்கும் அரங்கமாக (Participatory Theatre) மாறிவிடுகிறது. இந்தக் கொள்கையை ஓரளவு பின்பற்றி, எமது பாணியில் அரங்பேற்றப்பட்டதுதான் மந்திரவாதி.

மரபு நாடகத்தில் ஒரு பாத்திரம் மற்றொரு பாத்திரத்துடன் பேசுவதுதான் வழக்கம். தனிமொழி பேசும் இடத்திலும் தன்னுடன் பேசுவதுபோல் அல்லது அரங்கில் இல்லாத வேறு ஒரு பாத்திரத்துடன் பேசுவது போலவே அது அமையும்.

மந்திரவாதியில் மந்திரவாதி பார்வையாளருக்காகப் பேசவில்லை. பார்வையாளரைப் பார்த்து அவர்களுடன் பேசுகிறார். பின்னர் பார்வையாளரை மேடைக்கு அழைக்கிறார். இருவர் உண்மையாகவே மேடையில் ஏறிவிடுகிறார்கள். மந்திரவாதி அவர்களுடன் உரையாடலில் ஈடுபடுகிறார். அக்கட்டத்தில் பார்வையாளர் நடிகராக மாற்றம் பெறுகின்றனர்.

அடுத்து மந்திரவாதி மேடையைவிட்டு இறங்கிப் பார்வையாளருடன் பேசி அவர்களிட மிருந்து பெறக்கூடிய பொருட்களைச் சேகரிக்கிறார். தாம் கொடுத்த பொருட்களை மேடையிற் பார்க்கும்பொழுது அவர்களின் உணர்வுரீதியான பங்களிப்பு அதிகமாகிறது. இவ்விதம் உணர்வுபூர்வமாகவும் உடல்ரீதியாகவும் ஒருசிலரை ஈடுபடுத்துவதன் மூலம் அவையோர் அனைவரும் நாடகத்துடன் தொடர்பு படுத்தப்படுகிறார்கள். அதனால் குழு அநுபவம் அதிகரிக்கிறது.

## கல்லூரி அரங்கம்

மந்திரவாதி முறையாகத் தயாரிக்கப்பட்ட ஒரு கலைத்துவப் படைப்பு அன்று. ஏற்கனவே குறிப்பிட்டதுபோல இதில் -

(1) வசனங்கள் எழுதிப் பாடமாக்க வில்லை. ஒத்திகைகள் ஒன்றுகூடச் செய்து பார்க்க வில்லை

(2) முறையான ஒப்பனைகளில் கவனஞ் செலுத்த வில்லை காட்சி அமைப்புகள் என்று எதுவும் இல்லை.

எனினும் அதனை ஒரு மேல்லோட்ட நகைச்சுவைப் படைப்பு என்று மட்டும் ஒதுக்கிவிட முடியாது. பார்வையாளரை நாடகத்துடன் இணைத்த சிறப்பு இந்த நாடகத்துக்கு உண்டு. இன்னுஞ் சொல்லப் போனால் கிறித்துவக் கல்லூரி அரங்கம் கண்டிராத ஒரு புதிய முயற்சி.

கல்லூரி அரங்கங்கள் (1) முறை சார்ந்ததும் (2) முறை சாராதது மாகிய இருவகை நாடகங்களையும் தயாரிப்பதுண்டு. எனினும் அவசரப் படைப்புகளே அதிகம். அதற்கு மாணவர்களுடைய படிப்புகள், ஆய்வுகள், எழுத்து வேலைகள், பரீட்சைகள் என்பன பிரதான காரணங்கள். இவை அல்லாத சூழ்நிலைகளும் திடீர் படைப்புகளைத் தோற்றுவிக்கும் என்பதற்கு மந்திரவாதி நல்ல உதாரணம். மாணவ உலகம் எதற்கும் கவலைப்படாத உலகம். எதையும் சமாளிக்க வல்ல உலகம். நாடகக் கலைக்குக் கல்லூரி அரங்கங்கள் ஆற்றிவரும் பங்களிப்புகள் நன்கு ஆராயப்பட வேண்டும்.



கவிஞர் வி. கந்தவனம்



# காஞ்சிபுரம்: கோயில்கள் நிறைந்த பொன்நகர்

தமிழகத்தில், வரலாற்று ரீதியாகவும் ஆன்மீக ரீதியாகவும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த மூன்று நகரங்களில் ஒன்று காஞ்சிபுரம். மிகவும் பழமையான நகரம். ஆறாம் நூற்றாண்டு முதல் எட்டாம் நூற்றாண்டு வரை பல்லவ மன்னர்களின் புகழ்மிக்க தலைநகராக இருந்துள்ளது இந்நகரம், "அர்த்த சாஸ்திரம்" எழுதிய சாணக்கர் (கௌடில்லியர்) பிறந்த இடமாகவும் குறிப்பிடப்படுகிறது. முற்காலத்தில் இந்து மதத்தோடு, சமண மதமும் பௌத்த நெறியும் இங்கு செல்வாக்குப் பெற்று வளர்ந்திருக்கின்றன.

இன்னொரு பக்கம், காஞ்சிபுரம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள கோயில்கள் காரணமாகவும் இந்நகரம் மிகவும் முக்கியத்துவம் உடையதாக இருக்கிறது. ஏகாம்பரநாதர் கோயில், கைலாசநாதர் கோயில், காமாட்சியம்மன் கோயில், வைகுந்தபெருமாள் கோயில், வரதராஜப்பெருமாள் கோயில், கச்சபேஸ்வரர் கோயில், உலகளந்த பெருமாள் கோயில், திருப்பராந்தகேஸ்வரர் கோயில், விளக்கொளி பெருமாள் கோயில், பச்சை வண்ணக் கோயில், முத்தேஸ்வரன் கோயில், மதங்கேஸ்வரன் கோயில் என்று சிறியதும் பெரியதுமான இருநூறுக்கும் மேற்பட்ட கோயில்கள் காஞ்சிபுரத்தைச் சுற்றி உள்ளன. இதனால் முக்தி தரும் தலங்கள் ஏழினுள் ஒன்றாக காஞ்சிபுரம் குறிப்பிடப்பிடப்படுகிறது.

இந்த சிறப்பு காரணமாகவே உலக அளவில் கோயில்கள் நகரம் என்று புகழ்பெற்ற நகரம் காஞ்சிபுரம்.

ஆயிரக்கணக்கான பக்தர்களுடன், கலையெழில் மிக்க திருக்கோயில்கள் காரணமாக சுற்றுலா பயணிகளையும் தன்னை நோக்கி ஈர்க்கும் நகரமாக எப்போதும் இருந்து கொண்டிருக்கிறது காஞ்சிபுரம். முற்காலத் தமிழகத்தின் சிற்பக்கலை செழுமையைத் தெரிந்துகொள்ள விரும்புவர்கள் கட்டாயம் பார்க்க வேண்டிய நகரம் இது.

**வழிப்போக்கன்**

காஞ்சிபுரத்திலுள்ள கோயில்கள் அனைத்தும் காலத்தால் தொன்மையானவை. கட்டடக்கலை சிறப்பும் சிற்பக்கலை பெருமையும் கொண்டவை. மூன்று நிலைக் கோபுரத்தைக் கொண்ட, கலையழகு மிக்க காமாட்சி அம்மன் கோயில் சோழ மன்னர்களால் 14ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டது. சோழர்களுக்குப் பிறகு காஞ்சிபுரத்தை ஆண்ட கிருஷ்ண தேவராயரால் இக்கோயிலின் ராஜகோபுரமும் பிரசார கோபுரங்களும் கட்டப்பட்டுள்ளன. பல்லவ மன்னர்களும் இக்கோயிலைப் புதுப்பித்துள்ளனர்.



## தமிழ்நாடு சுற்றுலாத் தளங்கள் - 2

சிவத்தாண்டவச் சிற்பங்கள் காண்போரை வியக்க வைக்கும் அழகுடையவை. இதில் சிவன் - பார்வதி போட்டி நடனம் தத்ரூபமாக



வடிக்கப்பட்டுள்ளது. எட்டாம் நூற்றாண்டில் பல்லவர்களால் கட்டப்பட்ட இக்கோயிலில் அக்கால கல்வெட்டுகளும் ஓவியங்களும் நிறைய உள்ளன.

கைலாசநாதர் கோயிலுக்கு நேர்கிழக்கில் பல்லவர்களால் கட்டப்பட்ட வைணவத் தலங்களில் ஒன்றான வைகுந்த பெருமாள் திருக்கோயில் உள்ளது. இங்கு பெருமாள் அமர்ந்த கோலம், நின்ற கோலம், சாய்ந்த கோலம் என்று மூன்று கோலங்களில் காட்சி தருகிறார். இக்கோயிலில் உள்ள

உள்ளன. சின்ன காஞ்சிபுரத்திலுள்ள வரதராஜபெருமாள் கோயில் 108 வைணவத் திருத்தலங்களுள் ஒன்று. பொய்கையாழ்வார் அவதாரத் திருத்தலம் இது. ஸ்ரீரங்கத்தைப் போல வைணவம் வளர்க்கப்பட்ட திருத்தலம். இங்குள்ள பெருமானை வணங்கினால் பாவங்கள் நீங்கும், கோயில் பிரகாரத்தில் உள்ள சுவர்ண சிரசுகளுடன் இருக்கும் பல்லிகளைத் தொடுபவர்களுக்கு சகல வியாதிகளும் குணமாகும் என்பது பொதுவான நம்பிக்கை. இக்கோயிலின் மண்டபத்தின் வெளிப்புறத்தில் நான்கு மூலைகளிலும் தொங்கும் கல் சங்கலிகள் பார்ப்பவர்களை வியப்பில் ஆழ்த்தக்கூடியவை. ஹஸ்தகிரி என்றழைக்கப்படும் யானை வடிவிலுள்ள

### எப்படிச் செல்வது?

சென்னையிலிருந்து தென்மேற்கே 75 கிலோமீட்டர் தொலைவில் உள்ளது காஞ்சிபுரம்.

சென்னையிலிருந்து அரசு பேருந்துகள் பத்து அல்லது பதினைந்து நிமிடத்துக்கு ஒருமுறை வீதம் இயக்கப்படுகின்றன. ஒரு மணி நேரப் பயணம். வாடகை கார்கள் அமர்த்திக்கொண்டும் செல்லலாம். சென்னையிலிருந்து தமிழ்நாடு சுற்றுலாத்துறை பேருந்துகளும் தினம் இயக்கப்படுகின்றன. சுற்றுலாத்துறைப் பேருந்துகளில் செல்பவர்களை வழிகாட்டித் துணையுடன் அவர்களே எல்லா முக்கிய தலங்களுக்கும் அழைத்துச் செல்கிறார்கள்.

குன்றின் மீது இக்கோயில் எழுப்பப்பட்டுள்ளது.

காஞ்சிபுரத்தில் இருந்து 4 கிலோமீட்டர் தொலைவில் திருப்பருத்திக்குன்றம் என்ற ஊரில் உள்ள ஜைனக்கோயில் மிகவும் பழங்காலத்தது. இன்றும் சிதையாமல் உள்ள இக்கோயில், மகேந்திரவேமனால் கட்டப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. இந்தக் கோயிலிலுள்ள ஓவியங்கள் அஜந்தா, சித்தன்னவாசல் ஓவியங்களுக்கு இணையானவை. காஞ்சிபுரத்துக்கு அடுத்தபடியாக கோயில்கள் நகரம் என அழைக்கப்படும் உத்திரமேரூர் இங்கிருந்து 25 கிலோமீட்டர் தொலைவில் உள்ளது.

காஞ்சிபுரத்திலுள்ள தொண்டை மண்டல ஆதீனம் 2000 ஆண்டுகள் பழமையானது. சங்ககாலம் முதல் சைவத்தையும் தமிழையும் வளர்ப்பதைக் குறிக்கோளாகக் கொண்டே இந்த ஆதீனம் செயல்பட்டு வருகிறது. இன்னொரு காஞ்சிபுரத்திலுள்ள முக்கியமான இடம் அண்ணா நினைவகம். திமுக கட்சியை தோற்றுவித்தவரும் முன்னாள் தமிழக முதல்வருமான அண்ணாத்துரை பிறந்த ஊர் இது. இங்குள்ள அவரது இல்லம், அவரது நினைவகமாக மாற்றப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது.

### காஞ்சிப்பட்டு

கோயில்கள் மற்றும் வரலாற்று சிறப்புகள் காரணமாக காஞ்சிபுரத்தை நோக்கி ஈர்க்கப்படும் சுற்றுலாப் பயணிகளை வியப்பில் ஆழ்த்தும் இன்னொரு சிறப்பையும் தன் கையில் வைத்திருக்கிறது இந்த நகரம். அது காஞ்சிப்பட்டு. நேர்த்தி மிகு பட்டுப்புடவைகளுக்கு மிகவும் பிரசித்திப் பெற்ற ஊர் காஞ்சிபுரம்.

சென்னையில் வாங்குவதைவிட இங்கே பட்டுப்புடவை விலை மலிவாகவும் இருக்கும். எனவே காஞ்சிபுரம் செல்பவர்கள் மறக்காமல் பட்டுப்புடவை வாங்கிச் செல்லுங்கள். பட்டுப்புடவை வாங்கும்போது மிகவும் கவனமாக தேர்ந்தெடுத்து வாங்கவேண்டும். ஏனெனில் ஏமாற்றுப் பேர்வழிகள் நிறையச் சுற்றிக் கொண்டிருப்பார்கள்.

அவர்களிடம் போலியான பட்டுகளை விலை அதிகம் கொடுத்து வாங்கிச் செல்பவர்கள் ஊருக்குத் திரும்பிய பிறகுதான் தாங்கள் ஏமாற்றப்பட்டிருக்கிறோம் என்பதை உணர்வார்கள். நல்லி, ராசி போன்ற பாரம்பரிய கடைகளில் பட்டு வாங்குவது பாதுகாப்பானது



காஞ்சிபுரத்திலுள்ள ஏகாம்பரநாதர் கோயில் தென்னிந்தியாவிலேயே மிகப்பெரிய இராஜகோபுரத்தை உடையது. கிருஷ்ண தேவராயரின் ஆட்சிக்காலத்தில் எழுப்பப்பட்டது. இங்குள்ள ஆயிரங்கால் மண்டபமும் உட்பிரகாரத் தூண்களும் கலைச்செழுமை ததும்பி நிற்பவை. "இராசசிம்மேசுவரம்" எனவும் "பெரிய திருக்கள்ளி" எனவும் சிறப்பிக்கப்பெறும் கைலாசநாதர் கோயில் அதிஷ்டானம் முதல் உச்சிவரை கருங்கல்லால் கட்டப்பட்டது. இக்கோயிலின் கருவறைச் சுவர்களில் உள்ள சிற்பங்கள் பல்லவர் கால வரலாற்றை அறிய வரலாற்று ஆசிரியர்களுக்கு இன்றும் உதவியாக உள்ளன. பல்லவ - சாளுக்கிய போரினைச் சித்தரிக்கும் அரிய கல்வெட்டுகளும் இக்கோயிலில் உள்ளது. இதன் கருவறை மீது மூன்றடுக்குகளைக் கொண்ட விமானம் அறுபது அடி உயரத்தில் திகழ்கிறது.

காஞ்சிபுரத்தைச் சுற்றியும் உள்ள சிறிய, சிறிய ஊர்களிலும் வரலாற்று சிறப்பும் கலையழகும் கொண்ட பல்வேறு கோயில்கள்


ஏக்கர் நிலம் வருமானத்துடன்
வீடும் வியாபாரமும்

Metal Recycling
Auto Body Shop
Yunk Yard 2 Acres land with
House and Basesemt

Auto Body shop
House with Basement
Yunk Yard
10 acres

பரந்த நிலப்பரப்பு பங்களோ இரண்டு மூன்று குடும்பங்கட்கு
வேலைவாய்ப்பு அழையுங்கள் - Sam Sitham (Sales Rep.)
416.230.7820 / 905.696.7310
HomeLife GTA Realty Inc. - 416.321.6969 /905.712.2666

KENNEDY / FINCH பகுதியில் கோவில், வீதி நடைதூரத்தில்
Sep. entrance Basement வருமானத்துடன் அழகான இல்லம்

# கீரிமுகம், குதிரைமுகம் மிருகங்களின் முகங்களா?

## கடந்த இதழ் தொடர்ச்சி

எங்கள் பிரதேசம் சுண்ணாம்புக கற்பாறையின் மேல்தான் அமைந்துள்ளதாகப் புவியியல் நிபுணர்கள் கூறுகிறார்கள். அதுவும் காங்கேசன் துறைப்பகுதியில் சுண்ணாம்புக் கற்கள் அபரிமிதமாகக் காணப்படுவதால்தான் சீமெந்துத் தொழிற்சாலை அங்கே அமைந்தது. மேலிருந்து விழும் மழைநீர் முருகைக் கல்லூடாக கீழே செல்லும் போது சுண்ணாம்புக்கல்லையும் ஊடறுத்துச் செல்லமுடியாமல் அங்கேயே தங்கி நின்று ஏதோ இரசாயனமாற்றம் பெற்று நீரூற்றாக வருகிறதுபோலும். இதற்கு சிலசமயம் சில நோய்களைத் தீர்க்கக் கூடிய சக்தி இருக்கக் கூடும். இந்த நீரைப் பரிசோதிக்கக் கூடிய எமது இளைய வைத்தியத்துறையினர் முன்வரவேண்டும்.

கட்டுரை எழுதுங்காலத்து முருகைக் கல் பற்றிய எதுவித அறிவும் எமக்கில்லை. ஆயினும் 15.10.06 அன்று வீரகேசரி வாரவெளியீட்டில் யாழ். பல்கலைக்கழகத்து பா. துஷ்யந்தன் என்பவர் முருங்கைக்கற்பாறை தொடர் ஓர் ஆய்வுக்கட்டுரை எழுதியிருந்தார்.

அதன்படி முருகைக்கல் உயிரினப்பான்மை கொண்ட சூழல் தொகுதி எனவும், அது 19 நூற்றாண்டின் பிற்பகுதியில் ‘விலங்கியல் தன்மை’ கொண்டது என ஆய்வாளர்களால் நிரூபிக்கப்பட்டதெனவும், இது பாமரமக்களால் சுண்ணாம்புக்கல் எனச் சொல்லப்படுவதாகவும் கூறப்பட்டிருந்தது.

மேலும் இது பொருளாதாரத் துறையிலும், மருந்துவத்துறையிலும் உபயோகமாகிறதெனவும், கடலரிப்பைத் தடுப்பதோடுகூட மருந்து வகைகளின் உற்பத்திக்கும் மூலப்பொருளாகிறதெனவும், மலட்டுத் தன்மைக்கான பரிகரிப்பிலும் வேறும் நோய்களுக்கும் உபயோகமாகிறதெனவும், நகைகளாக கழுத்து கைகளில் அணிவார்கள் எனவும் இத்தாலியர் கண்ணூறுபடாமல் இருக்கக் கழுத்தில் மாட்டி வைப்பர் எனவும் பல சங்களைக் கூறியிருந்தார். இது அதிகளவு கல்சியம் காபனேற்றைக் கொண்டுள்ளதாம்.

எனவே அதனுள்ளே தேங்கி நிற்கும் மழை நீர் இரசாயமமாற்றம் பெற்று தோல் வியாதி தீர்க்கும் மருத்துவத் தன்மை அடைந்திருக்கலாம்.

குடும்பத்திலும் சமூகத்திலும் பொறுப்புகள் கூடியமையாலும் போர் மேகங்கள் சூழ்ந்திருந்தமையாலும் இந்தச் சிந்தனை ஊக்கப்படவில்லை. ‘அழுத்கம’வில் கடமையாற்றும் போது சிங்கள நாட்டு வைத்தியரிடமும் கேட்டேன் ‘அசுவமுக’ என்றிருக்கிறது ஒரு நாளைக்கு வந்தால், அவர் வாகடம் பார்த்துச் சொல்வதாக இருந்தார். சந்திக்கும் ஆயுள் வேத வைத்தியர்களையெல்லாம் இந்த நோயைப் பற்றி விசாரித்துக்கொண்டேயிருந்தோம்.

1985 ஆண்டு யாழ்ப்பாணம் வந்தபின் பலாலியில் பிரபல சித்த வைத்தியர் பஞ்சாட்சரம் ஐயாவிடம் சிகிச்சை பெறச் செல்வதுண்டு. ஒருநாள் அங்கே சென்றபோது ஏதோ சூட்டுச் சத்தங்கள் கேட்டன. பின்னர் ஊரடங்குச் சட்டம் போட்டுவிட்டு இராணுவ வாகனங்கள் தாறுமாறாக ஓடத்தொடங்கின. வீடு போக ஒரு வழியுமில்லை. ஐயரிடம் வந்த நோயாளிகூட தெருவில் சுடப்பட்டார். பொழுதுபட்ட பின்னர் இராணுவம் அடங்கி விடும் எனவும் பிரதான வீதி வழியாகப் போக முடியாதபடியால் வெளிச்சம் போடாமல் காரைக் கொண்டு போகக் கூடிய சிறு ஒழுங்கைகளைக் காட்டித்தரலாமென ஒருவர் கூறவே நிம்மதியாயிற்று.

ஐயருக்கும் நோயாளிகள் வரவில்லை. பேசிக்கொண்டிருந்த போது கீரிமலை விடயம் நினைவு வரவே அவரைக் கேட்டேன். படிப்பு முடிந்து வரும்போது இந்தியாவிலிருந்து பழைய மருத்துவ நூல்கள் எல்லாம் வாங்கி வந்ததெனக்கூறி ஒரு பெரிய கல்லாப்பெட்டியைத் திறந்து 1000 - 1500 பக்கங்கள் கொண்ட சில மருத்துவ நூல்களை எடுத்துத் தந்தார். எல்லாம் பழுப்பு நிறமேறியவை.

தோல் வியாதியால் இருந்தால் அவர் அக்கி, சிங்கமுகம் இரண்டுக்குமே வைத்தியம் செய்வதாகக் கூறி அவை இருக்கக்கூடிய இரு நூல்களைத் தெரிந்தெடுத்து கூறி இருநூல்களைத் தெரிந்தெடுத்துத் தந்தார். கட்டிகள் பற்றிய நூலைக் கையிலெடுக்கும் போது மாலை நாலுமணியாகி விட்டது. சில நூல்கள் பிரித்துப்படிக்காமலே இருந்தன. பழம் புத்தகக்

**கீரிமலை : கீரிமுகம் குதிரைமுகம் என்பன ஒரு நோயே தவிர மிருகங்களின் முகங்களல்ல. நோய் எது என்பதன் முரண்பாடுகளும் அதன் தீர்வான கருதுகோள் ஒன்றும் இங்கே முன்வைக்கப்படுகின்றன.**

## ஓர் ஆய்வுக்கண்ணோட்டத்துடன் கூடிய வரலாறு

கடையில் தேடி வாங்கியவை.

என்ன ஆச்சரியம்! கட்டி (கட்டு) என்று சொல்லும் வகையில் ஏராளமான பெயர்கள். கீரிமுகம், குதிரைமுகம், சிங்கமுகம் எனப்பல இருந்தன. அவசரம் அவசரமாக வாசிக்கத் தொடங்கினோம்.

கீரிமுகம் என்பது சிதலும் இரத்தமும் உள்ளடக்கிய ஒருவகைக் கட்டி. ( கட்டு - Hard Boil) தோலிலிருந்து உயர்ந்து சிறிது கீழே நோக்கிக் கவிழ்ந்து முனை வைக்கும். தாங்க முடியாத வேதனை. உடைத்து சீழ் பெருகினாலும் மாறிச்சுகம் பெற நாளெடுக்கும். திரும்பத் திரும்ப புதிதாகக் கட்டிகள் தோன்றும். முனை வைப்போடு அதனைப் பார்த்தால் கீரியின் முகம்போல் காணப்படும். அதன்பின் அதற்கான வைத்திய முறைகள் (பச்சிலை அரைத்துப் பூசுதல்) உணவுப் பத்தியம் எழுதியிருந்தது முதலியன எழுதியிருதது.

அவ்வண்ணமே குதிரைமுகம் என்பதும் அதனைவிடப் பெரிய கட்டியாக (ஏதோ பழமளவு எனப் போட்டிருந்தது. புரியாத பழம்) மேலெழுந்து கீழ் சரிந்து முனைவைத்து சீழும் இரத்தமும் கக்கும் எனவும்; சிங்கமுகம் எனப்படுவது கட்டுவின் நடுவில் முனை வைக்கும் எனவும் போடப்பட்டிருந்தது.

இக்கட்டிகள் முகம், கை, முதுகு ஆகிய அங்கங்களைத் தாக்குமாம். இலேசில் மாறமாட்டாவாம். வைத்திய முறைகள் எழுதப்பட்டிருந்தன. ஐயரிடமும் வாசிக்கக் கொடுத்துவிட்டு, இன்னொரு நாள் வந்து எழுதிக்கொள்கிறேன் எனப் புறப்பட்டு விட்டேன். திகில் நிறைந்த அந்த இருட்டில் ஒரு தம்பியின் வழிகாட்டலோடு ஒழுங்கைகள் கலட்டிகளூடாக வீடு வந்து சேரும்போது மணி எட்டரை ஆகிவிட்டது. ஆயினும் எம் உள்ளம் மகிழ்ச்சியாக துள்ளிக்கொண்டிருந்தது. எத்தனையோ காலமாகப் பிழையான தகவல் களைத் தந்து கொண்டிருந்த ஒரு விடயம் தெளிவுபடுத்தப்பட்டதே என்பதுதான் அந்த குதூகலம்.

உலகத்துக்கு இதனை அறிவிக்க வேண்டும். பெரிய கலாநிதிகளிடம் ஒப்புவித்து ஊற்றுநீரில் ஆராய்ச்சி செய்து அறிவிக்க மருத்துவத்துறைக்கும் வரலாற்று முனைவர் களிடமும் கையளிக்க வேண்டும். பிற்காலத்தில் சுத்தம் சுகாதாரம் மருத்துவம் முதலியவற்றில் முன்னேற்றம் ஏற்பட்ட படியால் இத்தகைய நோய்கள் குறைந்து போயிருக்கலாம். அதனால் இதன் கொடூரமும் பயன்பாடும் தெரியாமல் போயிருக்கலாம்.

நோய் பற்றிய நிருபணம் வேண்டுமே. அதற்கு நூலின் பெயர், ஆக்கியோன், அச்சகம், வெளியீடு, பக்கம் முதலிய விவரங்களை எழுதி நூல் கிடைக்கும் இடத்தையும் குறித்து அனுப்பினால் அவர்களுக்கு நேரே பார்க்கவும் நகல் எடுக்கவும் முடியும். அவற்றைத் தயாரித்து யாழ். பல்கலைக்கழகத்தில் சேர்ப்பிக்க வேண்டும். அடுத்த சனிக்கிழமையை எதிர்பார்த்தோம்.

**- குறமகள்-**

அதன்பின் இன்னொரு சனிக்கிழமை வரவேயில்லை. மாறாக பலாலி, துறைமுகம், கடல் மார்க்கங்களாக ஷெல்லடி, குண்டு வீச்சு என்பன எம்மைத் துரத்தியடிக்க உயிர்காக்க உடமைகளை விடுத்து எங்கெங்கோ ஓடிக் கனடாவில் காலூன்ற வேண்டியதாயிற்று. ஐயர் குடும்பமும் போட்டது போட்டபடியே இடம்பெயர்ந்து பின்னர் காலம் வருமுன்னரே அவரும் காலவாகி விட்டார்.

நீண்ட காலத்தின் பின் அவரது மகளோடு பேசியபோது அமைதிப்படை வந்து தம் வீட்டில் வசித்தார்களாம். கல்லாப்பெட்டி போன்றவை, மருந்து அரைக்கும் கல்லுரல்கள் எண்ணெய் காய்ச்சும் கொப்பரைகள் ஒன்றும் எடுக்க முடியவில்லையாம். உடுப்புகள் மாத்திரம் எடுத்துக் கொண்டு வெளியேறி விட்டார்களாம்.

மறைந்த உண்மைகளை வெளிக்கொணர்ந்து எதிர்கால சந்ததியின் மயக்கத்தைத் போக்க வேண்டும் என்பது எம் அவா. இந்திய சஞ்சிகையில் வெளியாகும் சித்த ஆயுர்வேத மருத்துவர்களின் முகவரிக்கும், பத்திரிகை மேற்பார்த்தும் அவர்களுக்கு இரண்டு டொலர் தாள் வைத்தும் அனுப்பினோம். எதுவித பதிலும் இல்லை.

மூன்று வருடங்களுக்கு முன் சிறிய கட்டுரையாக வரைந்து தினக்குரல் செய்தித்தாளுக்கு அனுப்பி அங்கு பிரசுரமாயிற்று. உயர் கற்கை நெறியாளருக்கு இவ்விடயம் போய்ச் சேரவேண்டும் எனவும் கேட்டிருந்தோம். அதாவது கீரிமுகம், குதிரைமுகம் என்பன கட்டி வகையில் சிதமும் இரத்தமும் சேர்ந்த கட்டுக்கள் என்பதே. அருவி நீரில் அதனை மாற்றும் இரசாயனச் சேர்க்கை இருக்கின்றதா என்பது பற்றிய அக்கறை எமக்கில்லை. அது வேண்டுமானால் மருத்துவத்துறையின் ஆய்வுக்குட்படட்டும்.

முன்னூறு ஆண்டுகளாக மறைக்கப் பட்ட அல்லது மறந்துபோன நோய், எழுந்தமான விளக்கங்களுக்கு ஆளாகாமல் இருந்தால் போதும்.

கீரிமுகம், குதிரைமுகம் என்பன மிருகங்களின் முகங்களல்ல. ஒருவகைக் கட்டுவின் பெயர் என்பதைப் பெற்றோர் பிள்ளைகளுக்குக் கதை சொல்லும் போது கவனத்திலெடுத்துச் சொல்ல வேண்டும். இதுவே ஒரு சாத்தியமான தீர்வு. இனி சங்கேதமான எண்ணங்களை அல்லது பிழையான கூற்றுக்களை ஊகங்களின் அடிப்படையில் எழுதாது தவிர்த்து, கதையைத் திருப்பி எழுதுதலும் நலம்.

முடிவுரை: இந்தக்குரல் மேலதிக ஆய்வுக்காக ஆயுள் வேத - சித்த வைத்தியர்களுக்கும் தாயக ஆயுள் வேதக்கல்லூரிக்கும் மருத்துவத்துறைக்கும் வரலாற்றாய்வாளர்களுக்கும், மற்றும் ஆர்வலர்களுக்கும் ‘விளம்பரம்’ மூலமாகக் காதில் விழட்டும் என்பதே என் அவா. யார் குற்றியும் அரிசி ஆகட்டும். அதுவே எமது வேண்டுகோள் ஆகும்.

எழுநிலை மாடம் கால்சாய்ந்துக்கு
கழுதை மேய் பாழ் ஆயினும் ஆகும்

பெற்றமும் கழுதையும் மேய்ந்த அப்பாழ்
பொற்றொடி மகளிரும் மைந்தரும் செறிந்து
நெற்பொலி நெடுநகர் ஆயினும் ஆகும்.

வெற்றி வேற்கை

மாடங்கள் நிறைந்து வளம் பொருந்திய ஓர் ஊர், காலக் கொடுமையால் பாழாகி அழிந்து போய் கழுதை மேய்கின்ற இடமும் ஆகலாம்.. அதுவே பின்னொரு நாளில் மந்தையும் கழுதையும் மேய்ந்த காலம் போய், உற்சாகம் மிகுந்த இளம் ஆண்களும் பெண்களும் நிறைந்து, நெல் போன்ற பல வளங்களும் பெற்ற சிறந்த நகராக பொலியவும் கூடும்.

அந்தநாள் தமிழ் ஈழத்துக்கு வருமென்பது திண்ணம்.





# “சுற்றுசூழல் பாதுகாப்பை உறுதிப்படுத்துவேன்”

**• ரொறொன்ரோ 42ஆம் வட்டார வேட்பாளராக தேர்ந்தெடுக்கப்படும் பட்சத்தில் உங்கள் பணிகள் என்னவாக இருக்கும்?**

மல்வேன் வட்டாரத்தில் கடந்த 15 வருடங்களுக்கு மேலாக வசித்து வரும் நான் அந்தப் பகுதியில் அபிவிருத்தி திட்டங்களில் உள்ள குறைபாடுகள் குறித்து அவதானித்துள்ளேன். குறிப்பாக இப்பகுதியில் வாழ்ந்துவரும் மக்கள் வன்முறை நிறைந்த ஒரு சூழலில் வாழ்ந்து வருவதாக ஊடகங்கள் திரும்பத்திரும்பக் கூறுகின்றன. இப்பகுதியில் ஒரு பாதுகாப்பான சூழலை ஏற்படுத்துவது எனது முக்கிய குறிக்கோள்.

ஸ்காபறோ பகுதியிலிருந்து அறவிடப்படும் சோலைவரிப்பணம் மீண்டும் அப்பகுதி அபிவிருத்திக்கு செலவிடப்படுவது குறைவாகவே இருக்கிறது. இந்நிலைமையை மாற்றி எமது பகுதிச்சோலைவரி முழுவதையும் இப்பகுதி அபிவிருத்தித் திட்டங்களுக்கு செலவழிப்பதற்காக பாடுபடுவேன்.

சுற்றுச்சூழல் பாதுகாப்பையும் உறுதிப்படுத்துவேன். புதிய வீட்டுத்திட்டங்கள் உருவாக்கப்பட்ட பல பகுதிகளில் பஸ் சேவைகள் இல்லாமல் இருக்கிறது. இக் குறைபாட்டை நீக்குவேன்.

சோலை வரியில் வருமானம் குறைந்த குடும்பங்கள், முதியவர்கள் ஆகியோருக்கு சில சிறப்புச்சலுகைகள் ஏற்படுத்த முயற்சிப்பேன்.

சமூக நலத்திட்டங்கள் சேவைகள் முதலியனவற்றால் அனைத்து தரப்பினரும் பலன்பெற ஆவன செய்வேன்.

எனக்கு வெற்றி வாய்ப்பு அதிகமாக உள்ள இவ்வட்டாரத்தில் உள்ள அனைத்து தமிழ் மக்களும் வாக்களிப்பதன் மூலம் எனது வெற்றியை உறுதி செய்ய முடியும். வாகன வசதி தேவைப்படுவோர் அழைக்கலாம்.

தொடர்புகளுக்கு: 416.838.9616

மின்னஞ்சல்: elect@kumarnadarajah.com



**குமார் நடராஜா**

ரொறொன்ரோ 42ஆம் வட்டாரம்

City Councillor வேட்பாளர்

# “எமது பிள்ளைகளின் எதிர்காலம் எங்கள் கையில்”

**• நீங்கள் கல்விச் சபைக்கான தேர்தலில் போட்டியிடுவதற்கான காரணம் என்ன?**

எதிர்வரும் மாநகரசபைத் தேர்தலில் Scarborough Rouge River / Ward 21 தொகுதியில் Toronto கல்விச்சபை உறுப்பினர் பதவிக்காக போட்டியிடுகின்றேன். எம்மவர்கள் பெரும்பாலும் வாழும் தொகுதிகளுள் ஒன்றாக இத்தொகுதி இருப்பதாலும் எமது மாணவ சமுதாயமும் எமது மக்களும் கல்வி சம்பந்தமாக தொடர்ந்து முகங்கொடுத்து வரும் இன்னல்களை அறிந்தவன் என்ற முறையிலும் எதிர்வரும் கல்விச்சபைக்கான தேர்தலில் போட்டியிடத் தீர்மானித்தேன். தாயகத்திற்கு வெளியே பெருமளவில் எம்மவர் செறிந்து வாழும் கனடாவில் எந்தவொரு மட்டத்திலும் தற்சமயம் எம்மவரின் பிரதிநிதித்துவம் இல்லாமையால் எமது மாணவ சமுதாயத்தின் தேவைகளும் உண்மை நிலைமைகளும் வெளிக்கொணரப்படாமலே உள்ளது. எம்போன்ற பிற இனங்களது நிலைமையும் இவ்வாறே உருவாகியிருப்பது கண்கூடாகத் தெரிகிறது. எம்மவர்கள் மத்தியில் கல்விச்செல்வமே என்றும் அழியாச் சொத்தாக இருந்து வந்துள்ளது. இதனை, தொடர்ந்தும் தமிழ் மக்கள் கனடாவிலும் தக்கவைக்க வேண்டுமானால் எமது பிரதிநிதித்துவத்தை கல்விச்சபைகளில் நிலைநிறுத்த வேண்டிய கட்டாயம் எமக்குள்ளது. இதன் ஒரு பாகமாகவே எதிர்வரும் November 13ம் திகதி நடைபெறும் ரொறொன்ரோ மாநகர கல்விச்சபைக்கான தேர்தலில் போட்டுயிடுவதாக தீர்மானித்துள்ளேன்.

**• நீங்கள் இந்த கல்விச் சபைக்கான தேர்தலில் எந்தெந்த குறிக்கோள்களை முன்வைத்துள்ளீர்கள்?**

1. இரண்டாவது மொழியாக (English as a Second Language) ஆங்கிலத்திற்கு அதிக பணம் ஒதுக்குதல்
2. போதியளவு நிதியை பாடசாலைகளுக்கு ஒதுக்கீடு செய்தல்
3. குறைந்தளவு எண்ணிக்கை கொண்ட மாணவர்களை ஒவ்வொரு வகுப்பறையிலும் கொண்டிருக்கச் செய்தல்
4. குறிப்பிட்ட சமூகத்தின் (Community) தேவைகளுக்கேற்ப தொழில்புரிபவர்களை வேலைக்கு அமர்த்துதல்
5. பாடசாலைகளில் கூடியளவு இசை (Music), கலை (Arts), மற்றும் உடல்சார்ந்த கல்வி (Physical Education) இற்கு மேலதிக நேரத்தை ஒதுக்குதல்
6. சத்துணவு வகைகளை பாடசாலைகளில் முன்னிலைப்படுத்துதல்
7. கூடியளவு காலம் மாணவர்களை பாடசாலைகளில் தொடர்ந்து படிக்கச் செய்வதும், குறைந்த வயதில் பாடசாலையை விட்டு வெளியேறும் மாணவர்களின் (Drop - out) எண்ணிக்கையை குறைப்பதற்கு ஆவன செய்தலும்
8. மேலதிக செயற்பாடுகளை (Activities) பாடசாலையில் ஏற்படுத்துதல்

மற்றும் முக்கியமாக (Discriminatory Save School Act) இற்கு எதிராக குரல் கொடுத்தல்

**• நவம்பர் 13ஆம் திகதிக்கு முன்பாக தமது வாக்குகளையளிக்க விரும்புபவர்கள் எவ்வாறு தமது வாக்குரிமையை செய்யலாம்?**

வாரநாட்களில் October 23ம் திகதிமுதல் November 1ம் திகதிவரை காலை 10 மணி முதல் மாலை 6 மணி வரை Scarborough Centre லும் வாரஇறுதி நாட்களில் November 4 ம், 5 ம் திகதிகளில் Malvern Recreation Centre, 30 Sewells Road. (Community Room), Percy Williams Public School, 35 White Heather Blvd. (Gym) இலும் உங்கள் வாக்குகளைப் பதிவு செய்யலாம். அத்துடன் வாகன ஒழுங்குகளும் செய்யப்பட்டுள்ளன.



**சாண் தயாபரன்**

ரொறொன்ரோ 21 வட்டாரம்

கல்விச் சபை வேட்பாளர்

தொடர்புகளுக்கு 416-703-6432, 416-826-7426

email: shan123@rogers.com

Web: shan123.com

# சிறுபான்மை இன மக்களின் குரலாக நான் இருப்பேன்!

**• கல்விச்சபை உறுப்பினர் நிலைக்கு போட்டியிடும் நோக்கம் என்ன? எமது மக்களிடமிருந்து என்ன விடயங்களை எதிர்பார்க்கிறீர்கள்?**

எங்களுடைய கல்வி அமைப்பு எல்லா இனமக்களுடைய தேவைகளையும், பல்லின கலாசார தன்மைகளையும் உள்ளடக்கியிருத்தல் வேண்டும். பிள்ளைகள், இளைஞர்கள் தமது முழுத்திறமையையும் வெளிக்கொணருவதற்கு ஊக்குவிப்புத்திட்டம் தேவை. குறிப்பாக எங்களுடைய சமூகத்தைப் போல சிறுபான்மை இனமக்களுக்கு கல்விச்சபையில் குரல் இல்லை. இதனால் முன்கூறிய மக்களை பிரதி நிதித்துவப்படுத்துவதுடன் அவர்களுக்கான குரலாக நான் செயற்படுவேன்.

வாழ்க்கையில் எப்படி ஆரோக்கியமாக வாழ முடியும் என்பதற்கு பல வேலைத்திட்டங்களை வகுத்து செய்படுத்துவதற்கு என்னிடம் பல திட்டங்கள் இருக்கின்றன.

சமூக கடமையும், சமூகத்துடன் இணைந்த வாழ்வும் (உதாரணமா எமது தாயகத்தில் அயலவர்களுடன் எப்படி உறவுகளை வைத்திருப்போமா அந்தநிலை) இங்கு இருப்பதற்கு கல்விச்சபை மூலம் பல திட்டங்களைச் செயற்படுத்த முடியும். எனவே 10 க்கும் மேற்பட்ட தமிழர்கள் போட்டியிடுகின்றானர்கள். எனவே உறவினர், அயலவர்கள், நண்பர்களுக்கு தமிழ் வேட்பாளர்கள் பற்றி கூறுங்கள். மிக முக்கியமாக தேர்தல் நொவம்பர் 13 ஆம் திகதி கனடியத் தமிழர்களுக்கு முக்கிய நாள்.

எனவே எங்களுடைய சமூகத்தின் ஒற்றுமையை பலத்தை மற்றவர்களுக்கு காட்ட வேண்டும். மிசிசாக்கா 9 & 10 ஆம் வட்டரங்களில் வாழும் மக்கள் எனக்கு வாக்களிப்பதன் மூலம் என்னை வெற்றிபெறச் சயலாம். அத்துடன் அவர்களின் பிரதிநிதியாக செயற்படுவேன் என உறுதியளிக்கிறேன்.

தொடர்புகளுக்கு: தொலைபேசி: 905.593.1617

மின்னஞ்சல்: ram@ramfortrustee.com

இணையத்தளம்: www.ramfortrustee.com



**ராம் செல்வராஜா**

மிசிசாகா 9 & 10 வட்டாரம்

கல்விச் சபை வேட்பாளர்


A.V.M.

**COOKING CLASSES**



உணவுத் தயாரிப்பு முறைகளும் (புரியாணி வகைகள் உட்பட) கேக் தயாரிப்பு முறை களும், அலங்கரிப்பும் (ஐசிங்) டோல் மேக்கிங், தலை அலங்காரம் என்பனவும் குறைந்த செலவில் நிறைவாக கற்பிக்கப்படும்.

அழையுங்கள் : Ahi - 416.299.6053

SAMI DAYCARE



* மாதம் தொடக்கம் 6 வயதுச் சிறார்களுக்குச் சிறந்த பராமரிப்பு
* ECE தகுதி பெற்ற நடத்துனர் * TAX RECEIPT வழங்கப்படும்
* காலை 7:00 மணி - மாலை 6:00 மணி வரை * மாலை 6:00 மணி - மாலை 10:00 மணி வரை * சனி, ஞாயிற்றுக் கிழமைகளிலும் பிள்ளைகள் பராமரிக்கப்படும்

1 Hr. - $3.00
Day - $15.00
Week - $75.00

Summer Daycare - $60 with food & Everything

தினசரி நடவடிக்கைகள் * உள்ளக, வெளியக, விளையாட்டுக்கள், தமிழ் ஆங்கிலம் படிப்பித்தல், இரு நேர உணவு, வெளிப்புறச் சுற்றுலா.

#7 Birchcrest Court (Finch / Warden) Mrs.S.J. சௌந்தரநாயகம் 416-502-3033

# காப்புறுதி கொடுப்பனவுகளில் இழப்பீடுகளை மதிப்பீடு செய்பவர் யார்?

**அவருக்குரிய அதிகாரங்களும், தகைமைகளும் யாவை?**

ஒவ்வொரு காப்புறுதி கம்பனியிலும் "நட்டஈடு வழங்கல் பிரிவு" (The Insurance Claims Department) என ஒரு விசேட பிரிவு இத்துறையில் நிபுணத்துவம் வாய்ந்த ஊழியர்களினால் இயங்கிக் கொண்டேயிருக்கும். பொதுவாக ஆயுள் காப்புறுதியிலும், மருத்துவ, உடல் நல காப்புறுதிகள் போன்றவற்றிலும் நட்ட ஈட்டு கோரிக்கை விண்ணப்ப படிவங்கள் சமர்ப்பிக்கப்பட்டவுடன், இவைகள் யாவும் இத்துறையில் நிபுணத்துவம் வாய்ந்த ஊழியர்களினால் பரிசீலனை செய்யப்பட்டு, காப்புறுதி ஒழுங்கு சட்ட விதிகளுக்கு முரண்படாத நிலைமையில் உள்ளதா? என்ற புலன் விசாரணைகளின் பின்பு நட்ட ஈட்டு கோரிக்கை அங்கீகரிக்கப்படும் நிலைமை நிறைவெய்தியதும் நிதித்துறை பிரிவுக்கு மாற்றப்பட்டு அப்பிரிவினால் நட்ட ஈடு உரிய நபருக்கு போய்சேரும்.

இங்கு நட்ட ஈடு வழங்கல் தொடர்பாக புலனாய்வு செய்து வழங்கப் போகும் அதிகாரிகளை ஆங்கிலத்தில் "Insurance Adjuster" என குறிப்பிடப்படுவதுண்டு. இத்தொழில்துறை அதிகாரிகள் பின்வரும் வகையாக பிரிக்கலாம்.

1.STAFF INSURANCE ADJUSTERS (கம்பனியினுள் பணிபுரியும் நட்டஈடு புலனாய்வு அதிகாரிகள்)
கனடாவில் கியூபெக், நியூபுறூண்ஸ்வீக் மாகாணங்களில் மட்டும் இயங்கும் காப்புறுதி கம்பனிகளில் பணிபுரியும் இவ் ஊழியர்கள் மாகாண அரசின் அனுமதிப்பத்திரத்தினை பெற்று இருத்தல் வேண்டும். ஏனைய மாகாணங்களில் அனுமதிப்பத்திரம் தேவையில்லை.

ஒன்ராரியோ மாகாணத்தில் கம்பனியினால் மாத சம்பளத்தில் நியமிக்கப்படும் இவ் ஊழியர்கள், ஒவ்வொரு நட்டஈட்டு கோரிக்கையினையும், முறைப்படி புலனாய்வு செய்து வழங்கப் போகும் நட்டஈடு தொடர்பாக தீர்மானத்தினை எடுப்பார்கள்.

2.TELEPHONE INSURANCE ADJUSTERS (தொலைபேசியினூடாக நட்ட ஈடுகள் தொடர்பாக புலனாய்வு செய்பவர்கள்)

இவர்களும் ஒரு காப்புறுதி கம்பனியின் ஊழியர்களாக தொலைபேசி மூலம் தகவல்களை பெற்று நட்டஈடு வழங்கல் தொடர்பாக முடிவு பண்ணுவார்கள். இவர்களுக்கும் மாகாண அரசின் அனுமதிப்பத்திரம் என்பது தேவையில்லை.
3.INDEPENDENT LICENSED INSURANCE ADJUSTERS (அரச அனுமதிப்பத்திரம் பெற்ற சுதந்திரமான இழப்பீடுகளின் புலனாய்வு அதிகாரிகள்.)

இவர்கள் இத்துறையில் உள்ள சகல கற்கை நெறிகளிலும் பயிற்றப்பட்டு மாகாண அரசின் அனுமதிப்பத்திரம் பெற்று சுதந்திரமாக இயங்கும் ஊழியர்கள் ஆவார்கள்.


சிவ. பஞ்சலிங்கம் B. Com,

(Licensed Insurance Broker)

காப்புறுதி சம்பந்தமான ஆலோசனைகளுக்கு:

416.321.0999


பொதுவாக வாகன விபத்துகள், வீடுகள், சொத்துகள் போன்றவற்றில் ஏற்படும் விபத்துகள் ஆகியவற்றினை நேரடியாக சென்று தகவல்களை பெற்று, விபத்துக்குள்ளான வாகனங்கள், சொத்துகளை படங்கள் எடுத்து, காப்புறுதி நட்டஈடு கோரும் சட்டவிதிகளுக்கு அமைய பிழை, சரி என்பதனை தீர்மானிக்கும் அறிக்கை யினையும், இழப்பீட்டு தொகைகளை யும் மதிப்பிட்டு காப்புறுதி கம்பனியிடம் சமர்ப்பிப்பார் கள். காப்புறுதிக் கம்பனியின் உடன்படிக்கை வரம்பினுள் நின்றே செயல்படுவார்கள்.

ஒவ்வொரு மாகாணத்திலும் பல்வேறு இடங்களிலும் தன்னிச்சையாக காப்புறுதி முகவர்கள் போல அலுவலகம் வைத்து இயங்கிக் கொண்டிருக்கும் இவர்களை குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு விபத்துகளையும் புலனாய்வு செய்வதற்காக காப்புறுதி கம்பனியின் ஒரு குறிப்பிடப்பட்ட தரகு கூலி வழங்கும் உடன் பாட்டில் வேலைக்கு அமர்த்தி கொள்வார்கள்.

இத்துறையில் நிபுணத்துவம் வாய்ந்த இவர்கள் தாம் பொறுப்பு எடுக்கும் காப்புறுதி கம்பனி சார்பில் நேர்மையாக, விசுவாசமாக, தொழில் ஒழுக்க நெறி எல்லையினுள் நின்று விபத்து தொடர்பாக புலனாய்வு செய்து காப்புறுதி கம்பனிக்கு அறிக்கை வழங்குவார்கள். இவர்கள் ஒரே நேரத்தில் பல கம்பனிகளுக்கும் பணி புரிவார்கள். ஒவ்வொரு விபத்தினையும் புலனாய்வு செய்வதற்கு இவர்கள் செலவழித்த நேரங்கள், பிரயாண செலவுகள், பத்திரங்கள், பிரதிகள், தயாரிப்பு செலவுகள் என்பனவற்றின் அடிப்படையில் இவர்களுக்கான தரகுகூலி போன்ற ஊதியத்தினை இவர்களை பயன்படுத்திய காப்புறுதி கம்பனி வழங்கி கொள்ளும். ஒரேநாளில் வாகன விபத்து நடந்த இடங்கள், மற்றும் விபத்து நடந்த வாகனங்களை பரிசோதனை செய்து புலனாய்வு செய்வதற்காக வெவ்வேறு காப்புறுதி கம்பனியின் கோப்புகளையும் கையில் வைத்திருந்து காப்புறுதி கம்பனிகளுக்காக விரைந்து செயல்படுவது வழமையானதாகும்.

இவ் அரச அனுமதிப்பத்திரம் பெற்று சுதந்திரமாக இயங்கும் இழப்பீடுகளின் புலனாய்வு அதிகாரிகளை ஒருங்கிணைக்கப்பட்ட ஒரு நிறுவனம் உண்டு. இதனை ஆங்கிலத்தில் "UNDERWRITERS ADJUSTING BUREAU" என குறிப்பிடப்படுவதுண்டு. இந் நிறுவனத்தின் பங்குதாரர்களாக காப்புறுதி கம்பனிகளே உள்ளன. அனுமதிப்பத்திரம் வழங்கி தன்னிச்சை யாக இயங்கும் இப்புலனாய்வு அதிகாரிகளையும், அவர்களின் தொழில் ஒழுக்க நெறிகளையும் மாகாண அரசின் கண்காணிப்பில் இயங்கும் இந்நிறுவனம் கண்காணித்து கொண்டேயிருக்கும்.

4. PUBLIC INSURANCE ADJUSTERS
(பொதுமக்களுக்காக நட்ட ஈடு கோரிக்கையினை முன் எடுப்பவர்கள்)

மேலே குறிப்பிடப்பட்ட "INDEPENDENT UNSURANCE ADJUSTERR" காப்புறுதி கம்பனிகளின் சார்பில் பணி புரிபவர்களே தவிர பொதுமக்களிடம் கம்பனியின் பிரதிநிதியாக ஊதியம் வாங்கி பொதுமக்களுக்காக பணி செய்ய முடியாது.

ஆனால் இங்கு "PUBLIC INSURANCE ADJUSTER" என ஆங்கிலத்தில் குறிப்பிடப்படும் நட்டஈடு கோரிக்கையினை முன் எடுப்பவர்கள், பொதுமக்கள் மத்தியில் வாடிக்கையாளர்கள் வழங்கும் ஊதியத்தின் அடிப்படையில் அவர்களுக்காக, அவர்களின் பிரதிநிதியாக நட்டஈட்டு கோரிக்கையினை கம்பனியிடம் முன் எடுத்து செல்பவர்கள் ஆவார்கள்.

இவர்களை கனடாவில் சில மாகாணங்களில் மட்டும் அனுமதிபத்திரம் வழங்கி பொதுமக்கள் மத்தியில் தொழில் செய்ய அனுமதிக்கப் பட்டுள்ளது. ஆனால் நியூபவுண்ட்லாந்து மாகாணத்தில் மட்டும் அனுமதிப்பத்திரம் இல்லாமலேயே இவர்கள் வாடிக்கையாளர் களுக்காக இயங்க முடியும்.

தங்களின் நட்டஈடு கோரிக்கையில் சிக்கல்கள் உள்ள வாடிக்கையாளர்கள் இவர்களை அணுகுவது உண்டு. சில காப்புறுதி கம்பனிகள் "நட்டஈட்டு கோரிக்கையின் பரிசோதகர்கள்" (CLAIM EXAMINER) என அதிவிசேடத்துவம் வாய்ந்த நிபுணர்களையும் விபத்துகளின் புலன்விசாரணைக்காக அழைப்பதுண்டு. இவர்கள் விபத்துகளை புலனாய்வு செய்வதுடன் நட்டஈடு புலனாய்வு அதிகாரிகளின் அறிக்கையினையும், குறிப்பிடப்பட்ட காப்புறுதி ஒப்பந்த உடன்படிக்கையில் காப்புறுதி கம்பனியின் நிலைப்பாடுகளையும் ஆய்வு செய்து இழப்புகள் தொடர்பாகவும், நட்டஈடுகள் தொடர்பாகவும் காப்புறுதி கம்பனி களுக்கு தங்கள் சிபார்சுகளை வழங்குவார்கள்.




SHAWN TRUCK & FORKLIFT
DRIVING SCHOOL





Fork Lift licence
From $75.00

Truck licence A-Z
From $599.00

In Classes
365 (Learning Permit)
Dangerous Goods
Border Crossing
Air Brake (Z)
Log book

- A-Z & D-Z up grade
- One on One Training
- Job Placement Right Away!
- உடனடி வேலை வாய்ப்புக்கள்
- வாரத்தில் ஏழு நாட்களும் அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களால் பயிற்சிகள் வழங்கப்படும்.

Air brake

Excellent Quality - Low Cost Training

சிறந்த பயிற்சி பெற அழையுங்கள்:

Pl. Call: Raja / Shan

416.913.9574 416.829.0603

40 NUGGET AVE., #8, Scarborough East (McCowan & Sheppard)



BREAD MASTER BAKERY

புதிதாகத் திருத்தி அமைக்கப்பட்ட வெதுப்பகம் செப்ரெம்பர் நடுப்பகுதியில் இருந்து பல்வேறு வகையான உணவுத் தயாரிப்புக்களுடன் ஆரம்பிக்கப்படவுள்ளது.



- ரொட்டி வகைகள்
- புரியாணி வகைகள்
- புட்டு வகைகள்
- மரக்கறிச் சாப்பாடு
- சிக்கின், மட்டன் சாப்பாடு
- இடியப்பம்
- நூடில்ஸ்

ஓடர்கள் (Order) ஏற்றுக்கொள்ளப்படும்

*மற்றும் சிற்றுண்டி வகைகள் அனைத்தையும் பெற்றுக்கொள்ளலாம்*

கடை திறக்கும் நேரம்
காலை 6:00 மணி முதல்
இரவு 10:00 வரை



உணவுகளை ருசித்து மகிழ்ந்திட அழையுங்கள்

416.299.5083

31 Tapscott Rd. B3, Scarborough
Malvern Area

# இதயத்தின் உண்மையான அளவு

## Real Size of a Heart

## ஓடும் நீர் உறைவதில்லை 23

எமது இதயமானது (Heart) முன்னூறு முதல் நானூற்றைம்பது கிராம் எடையுடையது. சாதாரண நிலையில் ஒரு நிமிடத்திற்கு நான்கு முதல் ஐந்து லீற்றர் குருதியை உடம்புக்குப் பாய்ச்சுகிறது. அதனுடைய துடிப்பு நிமிடத்திற்கு எழுபது முதல் எண்பதுவரை இடம் பெறுகின்றது. இன்னொருவகையில் கூறுவதாயின் எமது இதயமானது நாளொன்றுக்கு ஏழாயிரத்து இருநூறு லீற்றர் குருதியை உடம்புக்குப் பாய்ச்சுகின்றது. ஒரு இலட்சத்து பதினையாயிரம் தடவைக்கு மேலாகத் துடிக்கிறது. இதனுடைய அடிப்படைத் தொழிற்பாடு பிராணவாயு உள்ள குருதியை (Oxygenated Blood) உடம்பு முழுவதும் பாய்ச்சுவதும் உடம்பிலிருந்து பிராணவாயு அல்லாத (DeOxygenated) குருதியையும், கழிவுப் பொருட்கள் (கரியமிலவாயு - Carbon dioxide) என்பனவற்றையும் நுரையீரலுக்கு (Lungs) வழங்குவதுமாகும். சிறிய எடையுடையதும், எமது உயிர்வாழ்தலின் மையமுமானதும் நாளாந்த செயற்பாட்டில் அதிசயிக்கத்தக்க வகையில் ஈடுபட்டுக் கொண்டிருப்பதுமான இந்த இதயத்தின் பௌதீக அளவு விரல்கள் மடித்து மூடப்பட்ட (A Clenched Fist) கையின் அளவாகும்.

இங்கே நான் குறிப்பிட விரும்பும் இதயமோ அல்லது அதன் அளவோ பௌதீக அளவைப் பற்றியதல்ல. சிலரைப்பார்த்து இதயம் இல்லாதவர்கள் என்றும் வேறுசிலரைப் பார்த்து நல்ல இதயம் கொண்டவர்கள் என்றும் கூறுகின்றோம் அல்லவா. அந்த இதயத்தைப் பற்றிய கட்டுரைதான் இது. ஒருவரது உயர் வாழும் காலத்தைத் தீர்மானிப்பது பௌதீக இதயம். ஒருவர் எவ்வாறு வாழ்ந்தார் என்பதைத் தீர்மானிப்பது பௌதீகமல்லாத இதயம். இந்த இரு இதயங்களும் வேறுபட்டவையாக இருப்பினும் அவற்றின் செயற்பாடுகள் ஒரே மாதிரியானவையே.

ஒருவரது உயிர்வாழ்தலின் மையம் இதயமாக அமைவது போலவே வாழ்வியலின் மையமாக அமைவதும் ஒருவரது இதயமே. பௌதீக இதயத்தின் தொழிற்பாடு பௌதீக ரீதியாக அளவிடுவதைப் போன்றே பௌதீகமல்லாத இதயத்தின் செயற்பாடும் பௌதீகமல்லாத விடயங்களால் அளவிடப்படுகின்றது. முதலில் எமது பௌதீக இதயத்தின் அடிப்படைச் செயற்பாட்டைச் சிறிது ஆழமாகப் பார்ப்போம். நாளாந்தம் ஏறத்தாழ ஏழாயிரத்து இருநூறு லீற்றர் குருதியைப் பாய்ச்சுகின்றது. அவ்வாறு பாய்ச்சப்படும் குருதியானது உடம்பின் ஒவ்வொரு பகுதிக்கும் செல்கிறது. அத்துடன் மாசுபடுத்தப்பட்ட குருதியை நுரையீரலுக்கு அனுப்புகின்றது. இங்கே ஒரு விடயத்தை நாம் மிக நுணுக்கமாகக் கவனித்தல் வேண்டும். அதாவது இதயத்தின் தொழிற்பாடு குருதியைப் பாய்ச்சுவதேயன்றி சுத்திகரிப்பதல்ல. நமது இயத்தின் தரமான தொழிற்பாடும் அதனால் எமது உடலுக்கு ஏற்படும் விளைவுகளும் நமது குருதியின் பிராணவாயுவின் பங்கினால் தீர்மானிக்கப்படுகின்றது. இங்கே குருதியைப் பாய்ச்சுகின்ற இதயத்தின் இயக்கமே குருதியின் பிராணவாயுவினால் நிர்ணயிக்கப்படுவதைக் காணலாம்.



இப்போது மேற்கூறிய விடயங்களைப் பௌதீகமல்லாத இதயத்துடன் தொடர்புபடுத்துவோம். பௌதீகமல்லாத இதயத்தின் தொழிற்பாடும் ஒரு குறிப்பிட்ட தொழிற்பாட்டைத் தொடர்ச்சியாகச் செய்வது தான். முன்னையது உடலுக்கு, இந்த இதயம் உலகத்திற்கு. இடைவிடாது கொடுக்கப்படும் விடயம் முன்னையது பௌதீக அடிப்படையானது. மற்றையது உளவியல் சார்ந்தது. . ஒருவரது உடல் ஆரோக்கியம் அவர் உடலில் ஓடுகின்ற குருதியின் பிராண வாயுவின் அளவால் தீர்மானிக்கப்படுவதைப் போன்றே ஒருவரது வாழ்வியல் ஆரோக்கியம் உயர்வான எண்ணங்களின் உள்ளீடுகளால் தீர்மானிக்கப்படுகின்றது.

ஒருவரது நடவடிக்கைகளின் தன்மைகளைப் பொறுத்தே அவருக்கு இதயம் இருக்கிறதா அல்லது இல்லையா என்பதைப் நாம் தீர்மானிக்கின்றோம். மற்றவர்களின் துன்பத்தில் இன்பம் காணும் மனிதர்கள், சுயநலத்திற்காகச் சுயகௌரவத்தை இழந்து செயற்படுபவர்கள், தனது கடமையைச் செய்ய வாய்ப்பிருந்தும் அதைச் செய்யாதவர்கள், தமது பொறுப்புக்களில் இருந்து ஒழிந்து கொள்வர்கள், இரக்கமில்லாதவர்கள் என்று பட்டியலிடப்படுபவர்கள் அனைவரும் நெஞ்சுக் கூட்டுக்குள் ஒரு இதயத்தை வைத்திருந்தும் இதயம் இல்லாதவர்கள் என்று முத்திரை குத்தப்படுபவர்கள். எனவே வாழ்வியலில் உடல்நலவியல் சம்பந்தப்பட்ட இதயம் ஒரு தொழிற்படும் கருவியே. அதனால் தான் அதன் இயக்கத்திற்கும் அதன் அளவுக்கும் ஒரு கணிப்பு உண்டு..

மாறாக உளநலவியல் சார்ந்த இதயம் எந்த ஒரு அளவுகோலுக்கும் உட்படாது மட்டுமல்ல அதன் செயற்பாடு ஒரு முடிவுக்கு வருவதுமல்ல. இந்த இதயம் எப்படிப்பட்டது, என்ன செய்கின்றது, இதன் செயற்பாடுகளின் பெறுபேறுகள் என்ன என்பதெல்லாம் அந்த இதயத்தின் உரிமையாளரால் கூட அளவிடமுடியாதவை. இந்த இதயத்தின் அடிப்படைத் தொழிற்பாடும் கொடுத்துக் கொண்டிருப்பது தான். இந்தக் கொடுப்பனவு முற்றுமுழுதாகப் பிறருக்குத்தான். அவை மற்றவர்கள் வாழ்வை மேம்படுத்தும் கொடுப்பனவுகள்.

இந்த இதயத்தின் உரிமையாளர்கள் இந்த மகத்தான வாழ்வியல் பண்புகளைப் பிறப்பால் கொண்டுவந்தவர்கள் அல்ல. . வாழ்வால் கண்டறிந்தவர்கள். வாழ்க்கையின் பாதையில் அவர்களால் சேகரிக்கப்பட்ட உயர்ந்த பண்புகளின் கொடுப்புத்தான் அது.. இவர்களது இதயம் உலகுக்குப் பாய்ச்சும் வாழ்வியல் எனும் குருதிக்குள் உள்ளடக்கப்பட்டுள்ள பிராணவாயுதான் அவர்களது உண்மை, நேர்மை, கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, நாட்டுப்பற்று, இறையுணர்வு, தன்னலமற்ற சேவை போன்ற மகத்தான பண்புகளின் தொகுப்பு. இந்த உயரிய பண்புகளின் இதயங்கள் எப்போதும் கொடுத்துக் கொண்டிருப்பவையாக இருக்கும். அதனால் இந்த இதயங்கள் அவர்களின் இறப்புக்கப்பாலும் இயங்கிக் கொண்டிருக்கும்.

உயர்ந்த பண்புகளைக் கொண்டவர்களது இதயத்தின் வெளிப்பாடு அவர்களது வாழ்வியல் அனுபவங்களில் இருந்தே எழுகின்றது. பிறருடைய நலனை முன்வைத்து உழைப்பவர்கள் எல்லோரும் மிகவும் கடினமான பாதையூடாகத்தான் வாழ்வியல் பயணத்தை மேற்கொண்டுள்ளார்கள். பலர் எள்ளிநகையாடப்பட்டவர்களாகவும் ஏளனம் செய்யப்பட்டவர்களாகவும், அறிவிலிகள் என்று ஆததிரதாரிகளால் முத்திரையிடப்பட்டவர்களாகவும், ஏன் அதிகாரத்தின் உயர்மட்டத்தில் உள்ளவர்களால் அரக்கத் தனமாகச் சித்திரவதை செய்யப்பட்டவர்களாகவும் காணப்பட்டுள்ளார்கள். இவ்வாறான நெஞ்சை உருக்கும் நெருக்குதல்களுக்கெல்லாம் அடிபணியாது உலகுக்குத் தம்மை உத்தமர்களாகக் கொடுத்தவர்கள் அனைவரும் அவர்களது இதயத்தின் அளவை அளவிட முடியாத நிலைக்கு உயர்த்தியவர்கள்.


KG Master
416.725.5112


ஆம் வாசகர்ளே! ஒருவரது இதயத்தின் அளவு என்பது அவரது இதயத்தைத் தமது உயர்வான வாழ்வியலுக்காக எத்தனை பேர் பங்கெடுத்துக் கொள்கிறார்கள் என்பதால் மட்டுமே தீர்மானிக்கப்படுகிறது. நமது இதயத்தின் நற்செயல்களால் நன்மை பெறுபவர்களது எண்ணிக்கை அதிகரிக்க அதிகரிக்க எமது இதயத்தின் அளவும் அதிகரித்துச் செல்லும். பொதுநலம் சார்ந்த வாழ்வியல் முறையில் நாம் ஈடுபடும் போது நமது தலை மற்றவர்களது தலையை விடச் சிறிது உயர்வாகத் தெரியும். அப்போது சூழ்முட்டைகளும் அழுகிய தக்காளிப்பழங்களும் எமது தலையை முழுக வைக்கும். ஆனால் நேர்மையுடன் நேர்த்தியான பாதையில் தொடர்ந்து செல்வோமாயின் சூழ்முட்டைகளும் தக்காளிப்பழங்களும் பூக்களாகவும், பூமாலைகளாகவும் மாறும். அதுமட்டுமல்ல பல்லாயிரக்கணக்கான இதயங்களை எமது இதயம் பகிர்ந்து கொள்ளும். அதுவே இதயத்தின் உண்மையான அளவு.






கல்வி = அறிவுத்திறன் + பண்புடைமை

Education = Intelligence + Character

KG Master

(Over 25 years of experience)

(416) 291-2611

(416) 725-5112

Memory Power, Concentration
Listening Skill, Reading Skill
Goal Setting, Team Work
Performance, Presentation Skill
Time Management

Training Classes for children 7 to 16 years old

*Self-Confidence, Self-Image*
*Self-Discipline, Patience*
*Obedience, Positive Thinking*
*Winning Attitude,*
*Taking Responsibility*
*Leadership Qualities*

வீட்டில் பூச்சி, எலித் தொல்லையா?

வீடுகள், தொடர்மாடி வீடுகள், தொழிற்சாலைகள், வியாபார நிலையங்கள் போன்றவற்றில் பூச்சி, எலித் தொல்லையா? கவலையை விடுங்கள். முற்றாக ஒழிக்க அழையுங்கள்

**Kanthan: 416.291.3997**







• No Spraying • No Smelling • No Moving

ELECTRICAL WORKS



FRIDGE, WASHER, DRYER போன்ற மின் உபகரண திருத்த வேலைகள் செய்து கொடுக்கப்படும். நியாயமான கட்டணம். தரமான சேவை. வாடிக்கையாளர்களின் நன்மதிப்பீடு.

தொடர்புகளிற்கு: 416-286-2880

நகைச்சுவைத் தொடர் 158

# ராசம்மா ராச்சியம்

கலகலப்பு தீசன்

## போடு புள்ளடி .. போடு புள்ளடி..

உலகர் கத்திய கத்தில் ரி வி யில் சூரன்போர் பார்த்துக்கோண்டிருந்த ராசம்மா ஆட்டிலறி அன்னம்மா செக்கண்ட் புளோர் செல்லம்மா எல்லோரும் திடுக்கிட்டுவிட்டனர்.
உலகண்ணை! உலகண்ணை! கோழி கூவிப்போட்டுது எழும்புங்கோ என்று சிரித்தபடி சொன்னா ஆட்டிலறி அன்னம்மா.




பகல் முழுவதும் உலகர் கோஸ்டி மோலுக்குள் இருந்து இந்தமுறை ரொறன்ரோ, மார்க்கம் லெக்சனில் யார் வெல்லுவார்கள் என லெக்சன் களத்தில் இறங்கினர். வாக்குவாத களத்தில் களைத்து தூங்கிய உலகருக்கு பகல் கனவிலேயே தனது பழைய தேர்தல் நினைவுகள் மனதில் கோசமிட்டது.

எந்த வட்டாரம் எந்த கல்விசபை எந்த பகுதி என தெரியாதவர்களும் உலகருடன் வாக்குவாதப்பட்டு மோல் பாதுகாப்பாளர்கள் விலக்குப்பிடிக்குமளவிற்கு வந்துவிட்டது.

உலகண்ணை உந்த லெக்சனிலை வெல்லுற தமிழாக்கள் ஒட்டாவாவிற்கு போவின்மே? எனக்கேட்டபடி திரும்பவும் தூங்க முயற்சித்த உலகரைத் துளைத்தெடுத்தா ஆட்டிலறி அன்னம்மா. அன்னம்மா அது பெரிய லெக்சன். இது எங்கடை வி சி லெக்சன்.
கிராமசபை, மாநகரசபை லெக்சன் மாதிரி என சோனியா காந்தி தேர்தல் பிரசாரத்தில் பேசியதுபோல பேசிமுடித்தா செக்கண்ட் புளோர் செல்லம்மா.

உலகப்பு! உலகப்பு! நான் எங்கடை ஸ்கூல் றஸ்ரிக்கு வொலன்ரியர் ஹெல்ப் பண்ணுறன் என்றபடி வந்தான் பிறிம்லி மீனாவின் மகன் மதன்.
'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு. ஒற்றுமை நீங்கிலனைவர்க்கும் தாழ்வு'.
ராமனாண்டாலென்ன ராவணனாண்டாலென்ன என இருந்தகாலம் வேண்டாம்.

எமது பிள்ளைகளுக்கு பெற்றோர் நாம். ஆனால் பிறந்த நாடு கனடா. அவர்கள் வாழ்வு வளம்பெற வாழுமிடம், சுற்றுப்புற சூழல், கல்விமுறை நன்றாக அமைய வேண்டுமென்றால் தேர்தலில் நாமும் முழு மூச்சாக லெக்சனில் நன்மை தீமைகளை சிந்தித்துச்செயல்பட வேண்டும்.

உலகண்னை கிழமைக்குகிழமை எத்தினை நிகழ்ச்சிகள். சிலபேர் ஏலாட்டாலும் மழையோ, குளிரோ கொஞ்ச நேரமெண்டாலும் போய் வருவினம். சிலபேர் வெத்திலை வைச்சுக்கூப்பிட்டாலும் வராயினம் என ஆட்டிலறி அன்னம்மாவை கடைக்கண்ணால் பார்த்தபடி சொன்னா செக்கண்ட்புளோர் செல்லம்மா. ஏனெண்டால் சொந்த ஊர் ஒன்றுகூடல் நடந்தாலே ஆட்டிலறி அன்னம்மா போவதில்லை.


mhc

# MOHAN
## HOMEOPATHIC CLINIC & MASSAGE CLINIC

- கழுத்து, முதுகு நோவு
- வாகன விபத்து
- மன அழுத்தம்
- விளையாட்டுக் காயங்கள்
- தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் **டாக்டர் ஜே. மோகன்**



Dr. J. Mohan
D.H.M.S., N.H.C.

WE OFFER CONSULTATION
REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

- STRESS
- SKIN PROBLEM
- RESPIRATORY PROBLEMS
- DIGESTIVE PROBLEMS
- VARICOSE VEINS
- BACK PROBLEM / NECK PROBLEM
- TENNIS ELBOW PROBLEM
- TREAT WITH MASSAGE THERAP
- ALLERGIES
- SEXUAL PROBLEMS
- SEXUAL PROBLEMS
- CHOLESTEROL
- TUMOR
- FOOT PROBLEM

HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING

| | | | |
|---|---|---|---|
| Cough | Tonsillitis | Migraines | Prostatitis |
| Flu | Gout | Hair Loss | Obesity |
| Depression | Arthritis | Diabetes | Hemorrhoids |
| Anxiety | P.M.S | Cystitis | Stumatitis |
| Asthma | Leucorrhea | Cancer | Colitis |

Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER

**TEL: 416-298-7537 / 416-291-3022**

5200 Finch Ave, East Suite 210
(At Middle Field), Scarborough, M1S 4Z4



# “நல்ல இலக்கியங்களை திரைக்கதை வடிவமாக்குகிற திரைக்கதை ஆசிரியர்கள் தமிழில் இல்லை”

## நர்காணல்:இயக்குநர் சுசி கணேசன்

தமிழ் திரைப்பட இயக்குநர்களில் கிராமப்புற சூழலிலிருந்து வந்தவர்கள்தான் அதிகம். குறிப்பாக பாரதிராஜாவின் வருகைக்குப் பிறகு இது இன்னும் அதிகமானது. கிராமப் பின்புலத்தை வாழ்க்கை அனுபவமாகக் கொண்ட இயக்குநர்கள் தான் தமிழ் திரைப்படத்துறையில் அதிக வெற்றி யையும் கொடுத்திருக்கிறார்கள். இந்த வரிசையில் கடைசியாகச் சேர்ந்திருப்பவர் இயக்குநர் சுசி கணேசன். மதுரை மாவட்டம் வன்னி வேலம்பட்டி என்ற குக்கிராமத்தில் பிறந்தவர்.

பி. இ. இன்ஜினியரிங் முடித்திருக்கும் சுசி. கணேசன் மணிரத்னத்தின் வார்ப்பு. அவருடன் “பம்பாய்” , “ரோஜா”, “இருவர்” ஆகிய படங்களில் உதவி இயக்குநராக பணியாற்றியுள்ளார். அதன்பிறகு “விரும்புகிறேன்” என்ற தன் முதல் திரைப்படத்தை இயக்கினார். இந்த திரைப்படத்துக்கு தமிழக அரசின் நான்கு பரிசுகள் கிடைத்தன. இரண்டாவது திரைப்படம் “பைவ் ஸ்டார்”. மூன்றாவது படம் சமீபத்தில் வெளியாகி வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருக்கும் “திருட்டுப் பயலே”. சுசி. கணேசன் ஒரு சிறந்த எழுத்தாளரும்கூட. இவர் எழுதிய “வாக்கப்பட்ட பூமி” என்னும் கிராமியத் தொடர், தினமணிக் கதிரில் வெளியான காலகட்டத்திலேயே நல்ல வரவேற்பைப் பெற்றது.

“விளம்பரம்” பத்திரிகைக்காக சென்னையில் இருக்கும் சுசி. கணேசன் அலுவலகத்தில் அவரைச் சந்தித்தோம்.

**சந்திப்பு: சிவதாணு**

கேள்வி: உங்கள் முதல் திரைப்படத்திலேயே தமிழக அரசின் நான்கு விருதுகளை பெற்றுள்ளீர்கள். அந்த விருதுகள் வழங்கப்பட்ட போது உங்கள் மனநிலை எவ்வாறு இருந்தது?

சுசி. கணேசன்: எனக்கு திருமணமான அடுத்த வாரம் அந்த விருதுகள் அறிவிக்கப்பட்டன. என் மனைவி, என்னிடம், “என்னை நீங்கள் திருமணம் செய்துகொண்ட ராசிதான் உங்களுக்கு இந்த பரிசுகள் கிடைத்திருக்கின்றன” என்றாள். நானும் சிரித்துக் கொண்டே அதனை ஏற்றுக்கொண்டேன். வேறு வழி. (சத்தமாக சிரிக்கிறார்) உண்மையில் கடினமான முயற்சிக்கும் உழைப்புக்கும் கிடைத்த வெற்றி அது. “விரும்புகிறேன்” திரைப்படம் எடுக்கப்பட்டு, ஒன்றரை வருடம் கழித்து வெளியானது. காலதாமதமானாலும் நல்ல திரைப்படம் அங்கீகரிக்கப்படும் என்பதுதான் அந்த திரைப்படத்தில் உறுதியானது.

கேள்வி: நீங்கள் கிராம வாழ்க்கையை பின் புலமாக கொண்டவர். கிராமத்து வெள்ளந்தியான மனிதர்களையும் அவர்களின் வாழ்க்கையையும் பற்றி “வாக்கப்பட்ட பூமி” என்னும் தொடரை தின-மணியில் எழுதியிருக்கிறீர்கள். ஆனால், உங்கள் திரைப்படங்களில் அதிகமும் நகர வாழ்க்கையை பின்புலமாகக் கொண்ட மனிதர்களும் நகரமும்தானே வருகின்றன.

சுசி. கணேசன்: “விரும்புகிறேன்” கிராம வாழ்க்கைச் சூழலில் எடுக்கப்பட்ட திரைப்படம்தானே. முழுக்க கிராம வாழ்வை அடிப்படையாக கொண்ட திரைப்படம் என்று சொல்ல முடியாவிட்டாலும், இளம்வட்டக் கல் மாதிரியான கிராமத்து விடயங்களை அதில் நான் பதிவு செய்திருக்கிறேன். அந்த திரைப்படம் “வாக்கப்பட்ட பூமி” தொடரின் ஒரு பகுதிதான். பின்னாளில் முழுக்க முழுக்க கிராமியச் சூழலில் ஒரு திரைப்படம் செய்வதுக்கான திட்டங்கள் என்னிடம் இருக்கின்றன.

கேள்வி: தமிழ் சினிமா இயக்குநர்கள் கதாநாயகனை முடிவு செய்து ஒப்பந்தம் போட்ட பிறகுதான், கதையையே தயார் செய்கிறார்கள். நீங்கள் எப்படி, முதலில் கதாநாயகனை முடிவு செய்வீர்களா அல்லது கதை மற்றும் திரைக்கதையை தயார் செய்துவிட்டு அதற்கேற்ற கதாநாயகனைத் தேடுவீர்களா?

சுசி. கணேசன்: என்னுடைய மூன்று திரைப்படங்களிலுமே கதையை முடிவு செய்துவிட்டுதான் அதற்கேற்ற நடிகர்களை தேர்வு செய்தோம். “திருட்டுப் பயலே” கதை தயாரான பிறகு இரண்டு, மூன்று முன்னணி கதாநாயகர்களிடம் அதனைச் சொன்னேன். ஆனால், அவர்கள், அவர்களுக்கு ஏற்ற மாதிரி அந்த கதையில் திருத்தம் செய்யவேண்டும் என்று சொன்னார்கள். அவர்கள் சொன்ன திருத்தங்கள் அனைத்தையும் செய்தால் அது என்னுடைய கதையாகவே இருக்காது. முழுக்க மாறிவிடும். பெரும்பாலான தமிழ் திரைப்படங்கள் இப்படித்தான் தயாராகிக் கொண்டிருக்கின்றன. இவர்கள் ஒரு கதையுடன் நடிகர்களைப் பார்ப்பார்கள். அவர்கள், அதில் அங்கே ஒரு திருத்தம், இங்கே ஒரு திருத்தம், நடுவில் ஒரு திருத்தம், முடிவில் ஒரு திருத்தம் என்று ஒவ்வொன்றாக சொல்ல, கடைசியில் பார்த்தால் மொத்த கதையுமே மாறிப்போயிருக்கும். அது அந்த நடிகரின் கதையாகத்தான் இருக்கும். அதில் எனக்கு உடன்பாடில்லை. எனவே, அதன்பிறகு நான் புது நடிகர்களைத் தேடினேன். கதாநாயகனுக்கு ஏற்ற மாதிரி கதை தயார் செய்வதை நான் குறை கூறவில்லை. சில கதாநாயகர்களைப் பொறுத்தவரைக்கும், ரசிகர்களின் எதிர்பார்ப்புக்கு மாறான கதைகளில் அவர்கள் நடிக்கும் போது அதை ரசிகர்கள் ஏற்றுக்கொள்வதில்லை. உதாரணமாக எம்.ஜி.ஆர். திரைப்படங்களில் இறந்துபோவதை அவரது திரைப்பட வாழ்வின் கடைசிவரைக்கும் மக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. அதுபோல ரஜினி சினிமாவில் இறந்துபோவதையும் மக்கள் ஏற்றுக்கொள்வதில்லை. “தளபதி” திரைப்படத்தில் முதலில் ரஜினி இறந்து போவதுபோல்தான் கதை இருந்தது. அதன்பிறகு அது மாற்றப்பட்டது.

கேள்வி: ஆனால், பெரிய நடிகர்கள், நல்ல கதைகள் கிடைப்பதில்லை. அதனால்தான் நாங்கள் வித்தியாசமான முயற்சிகளில் இறங்க முடியவில்லை என்று சொல்கிறார்களே. நல்ல கதைகளுக்கு தமிழ் திரைப்படத்துறையில் பஞ்சமா?





சுசி. கணேசன்: நல்ல கதைகள் என்று அவர்கள் சொல்வது அவர்கள் எதிர்பார்க்கும் மாதிரியான கதைகளைத்தான். அப்படிப்பட்ட கதைகளுக்குத் தான் பஞ்சம் இருக்கிறது.

கேள்வி: மற்ற மொழிகளுடன் ஒப்பிடும்போது தமிழில் மாற்று சினிமாவுக்கான முயற்சிகள் குறைவாகவே உள்ளன. இதற்கு என்ன காரணம்?

சுசி. கணேசன்: தமிழில் மாற்று சினிமா முயற்சிகள் குறைவு என்பதுக்கு, மக்கள் அதனை ஆதரிப்பதில்லை என்பதுதான் முதலும் முடிவுமான காரணம். மக்கள் ஆதரவு இல்லாததால், செய்யப்பட்ட ஒன்றிரண்டு முயற்சிகளும் தொடரவில்லை. “குட்டி” என்றொரு திரைப்படம் மிகச் சமீபத்தில் வந்தது. மிக நல்ல முயற்சி. அந்த திரைப்படம் வெற்றிகரமாக ஓடியிருந்தால் மாற்று சினிமாவுக்கான மேலும் நான்கைந்து இயக்குநர்கள் முன்னே வந்திருப்பார்கள். தமிழ் சினிமாவே வியாபார சினிமாக்களிடமிருந்து விடைபெற்றுக்கொண்டு, மாற்று சினிமாவின் உலகமாகியிருக்கும். ஆனால், அது நடக்கவில்லை. இதுபோல அத்திபூத்தது போல அவ்வப்போது நடக்கும் சிறு முயற்சிகளுக்கும்கூட மக்கள் ஆதரவு தெரிவிப்பதில்லை என்பது வருத்தமான ஒன்றுதான். “சிவகாசி”யையும் “திருப்பாச்சி”யையும்தான் மீண்டும் மீண்டும் பார்த்து 150 தினங்களுக்கு மேல் ஓடவைக்கிறார்கள். ஆனால், தமிழகத்தின் பக்கத்து வீடான மலையாளத்தில் மாற்று சினி-மா முயற்சிகளை வ ரவேற்க மக்கள் இருக்கிறார்கள். அதற்கு அங்குள்ள படிப்பறிவும் அரசியல் விழிப்புணர்வும் ஒரு காரணம். எனவே அங்கே அது வெற்றிகரமான ஒரு இயக்கமாக இருக்கிறது.

கேள்வி: இலக்கியமும் சினிமாவும் இணைந்து பயணிப்பதுக்கான வாய்ப்பும் தமிழில் இல்லை.

சுசி. கணேசன்: புத்தக வடிவத்தில் இருக்கும் நல்ல இலக்கியப் படைப்புகளை திரைக்கதை வடிவமாக்குகிற திரைக்கதை ஆசிரியர்கள் தமிழில் இல்லை என்பதுதான் இதற்கு முதல் காரணம். இரண்டாவது காரணம் நாவல்கள் என்றாலே “நான்கமர்சியல்” என்ற எண்ணம்தான் தயாரிப்பாளர்களிடம் இருக்கிறது. இந்த இரண்டும் மாறவேண்டும். அப்போதுதான் இலக்கியமும் திரைப்படமும் தமிழில் இணைய முடியும்.

கேள்வி: உங்களது அடுத்த இலக்கு என்ன?

சுசி. கணேசன்: ஒவ்வொரு திரைப்படத்திலும் வித்தியாசமான கதைகளைக் கொடுக்கிற இயக்குநராக நிலைத்து நிற்க வேண்டும் என்று ஆசைப்படுகிறேன். எந்த எல்லைக்குள்ளும் சிக்கிக்கொள்ளாமல் எந்த சிக்கலான கதைச் சூழலையும் என்னால் கையாள முடியும் என்பதை தொடர்ந்து நிருபித்துக்கொண்டே இருப்பேன்.

கேள்வி: சமீபமாக வெளிவரும் தமிழ் திரைப்படங்கள் அதிகமும் பாலியலை மையமாக வைத்தே வெளிவருகின்றன, உங்கள் “திருட்டுப் பயலே” உட்பட. எதனால் இப்படி அதிகமான திரைப்படங்கள் பாலியலைப் பின்புலமாக கொண்டருக்கின்றன?

சுசி. கணேசன்: இதனை என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது. பொதுவாக எல்லா காலகட்டங்களிலும் பாலியலை மையமாகக் கொண்ட திரைப்படங்கள் தமிழில் வெளிவந்து கொண்டுதான் இருக்கின்றன. “அரங்கேற்றம்” வெளிவந்தது 2006இல் இல்லையே. பாலியலை மையமாகக் கொண்ட திரைப்படம் அதிகமாக வருகிறது, அவை வெற்றிகரமாக ஓடவும் செய்கின்றன என்றால் தயாரிப்பாளர்களிடம் இருக்கிறது. இந்த இரண்டும் மாறவேண்டும். அப்போதுதான் இலக்கியமும் திரைப்படமும் தமிழில் இணைய முடியும். அது சமூகத்தில் இருக்கிறது என்றுதான் அர்த்தம். எந்த விடயத்தையும் அதிக நாட்கள் மூடிமறைக்க முடியாது.

---

## ஓர் உலகம் தேவை

எல்லா மதமும்
‘அன்பு’
எனும் நிலையும்
எல்லாத் தொழிலும்
சமநிலை என்றும்
எல்லா மொழியும்
ஓர் உணர்வே
என்றும்
தீண்டாமை ஒழிந்து
என்றும்
எல்லோர் இரத்தமும் சிவப்புத்தான்
என்ற சிந்தனை புலமும்
நீயும் நானும்
இரட்டைத் தண்டவாளத்தில் ஓடுகின்ற
ஒற்றைப் புகையிரதம்
என்னும்
தாம்பத்திய உறவும்,
‘சீதனம் - முதுகன்னி’
என்ற சொற்கள் இல்லாத
சமூக அமைப்பிலும்



முத்துராஜா

# வரலாற்று பெருமைமிக்க இரு நூலகங்கள்

**தென்கிழக்கு ஆசியாவில் அதி சிறந்த நூலகங்களுள் ஒன்று என்ற பெருமையோடு விளங்கிய யாழ்ப்பாணப்பொதுசனநூலகம் தீக்கிரையாக்கப்பட்டு 25வது ஆண்டினை நினைவுகூர்ந்தும் புலம்பெயர்வாழ் ஈழத்தமிழர்கள் மிக அதிகமாக வாழும் கனடிய மண்ணில் உலகத் தமிழர் சமூக நூலகம் நிறுவப்பட்டு 20 ஆண்டுகள் நிறைவு பெறுவதை முன்னிட்டும் நூலகம் நிறுவப்பட்டு 20 ஆண்டுகள் நிறைவு பெறுவதை முன்னிட்டும் இக்கட்டிரை பிரசுரமாகிறது.**

போக்குவரத்து வசதி, எதிர்காலத்தில் நூலகத்தை மேலும் விஸ்தரிக்கப் போதுமான இட வசதி என்பவற்றைக் கருத்தில் கொண்டு கட்டடக் கலை நிபுணர் சி.கே. நிரசிம்மனும் அதனை ஏற்றுக் கொண்டார். முற்றவெளியை இழந்தாலும் நூலகம் வளர்ந்தால் பொதுமக்கள் என நூலகக் குழுவினரும் சம்மதித்தனர்.

29.3.1954 ஆம் ஆண்டு அடிக்கல் நாட்டும் வைபவம் இடம்பெற்றது. மாநரகர சபை முதல்வர் சாம் எ. சபாபதி வணக்கத்திற்குரிய தந்தை லோங் அடிகளார், பிரித்தானிய ஸ்தானிகர் செசில் சையென், அமெரிக்கத் தூதுவர் எச். ஈ. பிலிப் குறேவ் இந்தியத் தூதுவரின் செயலாளர் ஸ்ரீ சித்தார்த்த சாயி ஆகிய ஐவரும் அடிக்கல்லை நாட்டிக் கட்டட வேலையினை ஆரம்பித்து வைத்தனர்.

குறிப்பிட்டளவு நிதியினையும் அன்பளிப்புச் செய்தனர். திட்டமிட்டபடி நூலகத்தை அமைக்க மேலும் நிதி தேவைப்பட்டமையால் சாம் எ. சபாபதியும், லோங் அடிகளாரும் களியாட்ட விழாக்கள், அதிஷ்ட லாப சீட்டுக்கள், நகைச்சுவை நாடகங்கள் என்பவற்றை ஒழுங்கு செய்தனர். களியாட்ட விழாவினைச் சிறப்பித்த கலைஞர்களும் கலையரசு சொர்ணலிங்கம் குழுவனரின் பங்களிப்பும் குறிப்பிடத்தக்க தொன்றாகும்.

நிதிப் பற்றாக்குறையைக் கருத்தில் கொண்ட கட்டக் கலைஞர் நரசிம்மன் நூலகக் கட்டத்தை பகுதிபகுதியாகக் கட்டி முடிக்கலாம் என ஆலோசனை கூறினார். நூலகம் முழுமையாகக் கட்டப்பட முன்னரே தரைத் தளம் அமைக்கப்பட்டதோடு 17.10.1958 ஆம் ஆண்டு முதல் யாழ்ப்பாணம் பொதுசன நூலகம் என்ற பெயர் பெற்று செயற்படத் தொடங்கியது. பின்னர் 11.10.1959 ஆம் ஆண்டு மாநகரசபைத் தலைவர் அல்பிரட் தங்கராசா துரையப்பாவினால் உத்தியோகபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது. இவர் சாம். எ. சபாபதிக்குப் பின்னர் யாழ்ப்பாணத்துக்குக் கிடைத்த சிறந்த மேயர் என்பது பொது மக்களின் பரவலான அபிப்பிராயமாகும். யாழ்ப்பாண நகரின் வளர்ச்சிக்குப் பல திட்டங்களை அறிமுகப்படுத்தியதோடு நூலகத்தின் வளர்ச்சி யிலும் மிகுந்த அக்கறை காட்டினார்.. முன்னைய மேயர் சாம். எ. சபாபதியைப் பின்பற்றி நூலகக் கட்டட வளர்ச்சிக்காக 1959 ஆம் ஆண்டு மாபெரும் களியாட்ட விழாவினை ஒழுங்கு செய்தார். யாழ். மாநகர சபை நடத்திய 3 ஆவது பெருவிழா இதுவாகும். இவ்விழாவின் போது பிரித்தானியா, அவுஸ்திரேலியா, இந்தியா, சோவியத் யூனியன் போன்ற நாடுகளின் தூதுவர்கள் பெருமளவில் உதவி புரிந்தனர்.

யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த சட்டத்தரணிகள், கல்விமான்கள், கலைஞர்கள், வர்த்தகப் பெருமக்கள் எனப் பலரும் பெரும் பங்களிப்பு செய்தனர். இக்கால கட்டத்தில் 16,000 க்கும் மேற்பட்ட நூல்களும் இலங்கை உட்பட வெளிநாடுகளில் வெளியான 150 க்கும் மேற்பட்ட தமிழ், ஆங்கில் பத்திரிகைகளும், சஞ்சிகைகளும் பொது மக்களின் பயன்பாட்டுக்காக நூலகத்தில் காட்சியளித்தன. 1660 ஆம் ஆண்டளவில் கண்டி மன்னனால் சிறை வைக்கப்பட்ட றொபட் நொக்ஸ் என்பவரால் எழுதப்பட்ட இலங்கை வரலாறு உட்பட பல பழைய வரலாற்றுப் பெருமையும் உட்பட பல பழைய வரலாற்றுப் பெருமையும் மிக்க நூல்கள் சேகரிக்கப்பட்டு உசாத்துணைப் பிரிவில் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்தன.

யாழ்ப்பாணம் பொதுசன நூலகத்தின் மூன்றாவது கட்டட பெரு வளர்ச்சி நூலகர் அமரர் வே. இ. பாக்கியநாதனின் வருகையோடு ஆரம்பமாகியது. 1949 ஆம் ஆண்டு லோங் அடிகளார் கனவை நனவாக்கிய பெருமை இவரைச் சாரும். அமெரிக்காவிலே கலிபோர்ணியா பல்கலைக்கழகத்தில் நூலகவியல் துறையில் கலாநிதிப் பட்டம் பெற்ற இவரது அறிவும் அனுபவமும் யாழ்ப்பாண பொதுசன நூலகத்தின் செயற்பாட்டிலும் மாடிக் கட்டட அமைப்பிலும் நவீன மாற்றங்களைக் கொண்டு வர வழிகோலின. செயற்பாட்டில் புதிய மாற்றங்களை ஏற்படுத்தும் வகையில் நீண்டதோர் அறிக்கையினை அப்போதைய மேயர் எஸ்.சி. மகாதேவாவிடம் சமர்ப்பித்தார்.



யாழ். நூலகத்தின் இன்றைய தோற்றம்

அவை படிப்படியாக நடைமுறைக்கு வந்தன. பனை ஓலைச் சுவடிகளை சேரிப்பதில் ஆர்வம் கொண்ட இவர் அப்போது உள்ளூராட்சி அமைச்சராகவிருந்த மு. திருச்செல்வம் அவர்களின் உதவியுடன் பல சித்த வைத்திய வாகட ஏடுகளை யாழ். பொதுசன நூலகத்திற்குப் பெற்றுக் கொடுத்தார். யாழ்ப்பாணம் நான்காம் குறுக்குத்தெருவில் இயங்கி வந்த அமெரிக்கத் தகவல் நிலையம் மூடப்பட்டபோது அங்கிருந்த நூல்கள் தளபாடங்கள் பணியாளர்களை யாழ். நூலகம் பெற பெரு முயற்சி செய்து வெற்றி கண்டார். தனது சந்ததிக்கோ சிறுவர் நூலக அநுபவத்தினைப் பிரயோகித்து சிறுவர் நூலகத்தினை உருவாக்கினார். பின்னாளில் யுனெஸ்கோ நிபுணரான செல்வி இவான்ஸ் சிறுவர் நூலகம் பற்றிய அறிக்கையில் இலங்கையிலே அதி சிறந்த சிறுவர் நூலகமாக அதனைக் குறிப்பிட்டிருந்தார்.

அவரது பதவிக் காலத்திலேயே நூலகத்தின் மேல் மாடிக் கட்டடங்கள் கட்டப்பட்டன. நரசிம்மனின் ஆலோசனையின் பிரகாரம் தென்னிந்தியப்பண்பாட்டினை வெளிக்கொணரும் வகையில் முதல் கட்ட வேலைகள் நிறைவு பெற்றிருந்தன. யாழ்ப்பாண நூல் நிலை யம் யாழ்ப்பாண மண்ணையும் மக்களையும் பிரதிபலிக்கும் வண்ணம் சகல யன்னல்களும் யாழ். உருவில் அமைய வேண்டும் என விரும்பிய நூலகர் பாக்கியநாதன் அதற்கான மாதிரிப் படங்களை விபுலாந்த அடிகளார் எழுதிய யாழ். நூலிலிருந்து பிரதி எடுத்துக்கொடுத்து அவ்வாறே அமைய வழி செய்தார். அவரது அலோசனைப்படி கலைகளுக்குத் தெய்வமாகிய சரஸ்வதியின் சிலை முகப்பிலும் முற்றத்திலும் இடம்பெற்றது.

அரும்பெரும் கலைப் பொக்கிசமாக மட்டுமின்ற அழகுப்பெட்டமாகவும் தனக்கேயுரிய தனித்துவத்துடன் யாழ்பாண தீபகற்பத்திலிருந்து தென் கிழக்கு ஆகிய நாடுகளுக்கு ஒரு கலங்கரை விளைக்கமாக ஒளி வீசிக் கொண்டு கம்பீரமாகக் காட்சியளித்த யாழ். பொதுசன நூலகம் கோடான கோடி பணம் கொடுத்தாலும் ஈடு செய்ய முடியாத ஓலைச் சுவடிகள், கலாநிதி ஆனந்தக் குமாரசாமி நூற் தொகுதி, வன்னிய சிங்கம் நூற்தொகுதி, கதிரவேற்பிள்ளை நூற்தொகுதி, ஐசாக் தம்பையா நூற்தொகுதி போன்ற பல கல்விமான்களின் நூற்தொகுதிகள் பழைமையும் வரலாற்றுப் பெருமையும் கொண்ட பல்லாயிரம் நூல்கள் உட்பட ஏறத்தாழ ஓர் இலட்சம் நூல் சேர்க்கைகளைக் கொண்ட இக் கலைக்கோயில் 1981 ஆம் ஆண்டு மே 31ஆம் நாள் எரிந்து சாம்பலானது.. எரித்தவர்கள் யார் என்பது யாவரும் அறிந்த பரமரகசியம். தமிழினத்தின் தலைக்கோர் பலத்த அடி மட்டுமின்றி இடியும் கூட. நாகரிக உலகம் இலங்கையை அசிங்கமாகப் பார்த்தது. தமிழர் கலை கலாசார பண்பாட்டுப் படுகொலையாக இது அமைந்தது. அத்துடன் யாழ்ப்பாண பொதுசன நூலகத்தின் ஒரு சகாப்தம் முடிவுக்கு வந்தது.

இனவாத நாசகார சக்திகளின் மற்றுமோர் கோரத் தாண்டவம் தமிழர் தாயகத்துக்கு அப்பால் கடல் கடந்து மேற்கே கனடிய மண்ணில் உலகத்தமிழர் சமூக நூலகம் தோற்றம் பெறவும் வளர்ச்சியடையவும் வித்திட்டது.

1972 ஆம் ஆண்டு தமிழ் இளைஞர்களின் கல்விக்கு ஆப்பு வைத்தும், 1981 ஆம் ஆண்டு தமிழர்களின் கலாசார உறைவிடமாக விளங்கிய யாழ். நூலகத்தை எரித்தும் தாகம் தணியாத இனவாத நாசகார சக்திகள் தமிழினத்தை முற்றாக அழிக்கும் தருணம் ஒன்றையும் எதிர்பார்த்திருந்தனர். 1983ஆம் ஆண்டு ஜுலை மாதம் யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் 13 இராணுவத்தினர் கொல்லப்பட்ட சம்பவம் இவர்களுக்குத் தீனி போட்டது. தலைநகர் கொழும்பு மாநகரம் உட்பட இலங்கை எங்கும் வாழ்ந்த தமிழர்கள் நோக்கி இனக்கலவரம் கட்டவிழ்த்து விடப்பட்டது. வெட்டியும் எரித்தும் துப்பாக்கி ரவைகளாலும் தமிழ் மக்களன் உயிர்கள் பலியெடுக்கப்பட்டன. அவர்களின் சொத்துக்கள் உடைமைகள் எரித்து சூறையாடப்பட்டும் அழித்தொழிக்கப்பட்டன.

இதனைக் கண்டு உலக நாடுகள் அதிர்ச்சியடைந்தன. தமது கதவுகளையும் அகலத் திறந்தன. இனக் கலவரத்தால் பாதிக்கப்பட்ட ஈழத்தமிழர்கள் அகதி என்ற புதிய பெயருடன் உலகெங்கும் சிதறினர். அப்போது இன்முகம் காட்டி இரு கரங்களாலும் அரவணைத்த நாடுகளுள் கனடா முன்னணி வகித்த நாடாகும்.

இதன் மனிதாபிமான பண்பைப் பாராட்டி ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான அப்போதைய தூதுவர் ஜீன் பியர் ஹோக் (Jean Pierre Hocke - The United Nations High commissioner for Refugees) 1986 ஆம் ஆண்டக்குரிய நான்சென் (Nansen Medal) பதக்கத்தினை கனடாவுக்க வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

கனடாவில் குவிபெக் மாகாணத்தில் மொன்றியல மாநகரிலும் ஒன்ராரியோ மாகாணத்தில் ரொறொன்ரோ மாநகரிலும் பெருமளவில் ஈழத்தமிழர்கள் குடியேறினர். புதிய சூழ்நிலை, காலநிலை, மொழி, பழக்க வழக்கங்கள் என்பவற்றுக்கேற்ப தம்மை விரைவாகத் தயார்படுத்திக் கொண்டே அதேவேளை 10,000 மைக்கள் கடந்து வந்த போதிலும் தமது தாயகத்தில் நடைபெறும் சம்பவங்களை அறியும் ஆவல் கொண்டவர்களாயிருந்தனர். இந்த ஆவலைப் பூர்த்தி செய்யும் நோக்குடன் நூலக ஆர்வம் கொண்ட இளைஞர்கள் ஒன்றிணைந்து இருபது ஆண்டுகளுக்கு முன்னர் 1986ஆம் ஆண்டு உலகத் தமிழர் சமூக நூலகத்தை உருவாக்கினர். அப்போது ஏறக்குறைய 500 நூல்களும் பல சஞ்சிகைகளும் பத்திரிகைகளும் இவர்களின் பெரு முயற்சியினால் நூலகத்தில் காட்சியளித்தன.

றொறொன்ரோ மாநகரில் இல. 612 வீதியில் ஒரு வாடகைக் கட்டடத்தில் உருவாகி இந்த நூலகம் படிப்படியாக வளர்ச்சியடையவே போதுமான இட வசதியைக் கருத்தில் கொண்டு 1990 ஆம் ஆண்டு இல. 1231 எல்ஸ்மெயர் வீதியிலுள்ள கட்டடத்தின் மேல் மாடிக்கு இடமாற்றம் செய்யப்பட்டது. அதே ஆண்டு ஏப்ரல் மாதம் தமிழ் நாடு தேசிய இயக்கத் தலைவர் திரு. பழ. நெடுமாறன் அவர்களால் உத்தியோகபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது. அப்போது 4000 த்திற்கும் மேற்பட்ட நூல் சேர்க்கைகளைக் கொண்டதாக இந்நூலகம் விளங்கியது. நூல் சேர்க்கைகளின் எண்ணிக்கை மேலும் அதிகரித்த விசாலமான இடப்பரப்பினை கொண்ட இல. 39 Cosentino Drive என்ற முகவரியுடைய கட்டடத்திற்கு மேல் மாடிக்கு இடமாற்றம் செய்யப்பட்டது.

2002ஆம் ஆண்டளவில் தமிழகம் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக பேராசிரியர் க.ப. அறவாணன் அவர்கள் 3000 க்கும் மேற்பட்ட நூல்களை அன்பளிப்பு செய்ததையடுத்து அதன் வளர்ச்சியில் ஒரு திருப்புமுனை ஏற்பட்டது. தொடர்ந்து பல்வேறு அமைப்புகளும் தனிநபர்களும் நூல்களை அன்பளிப்புச் செய்து வருகின்றனர். தற்போது ஏறக்குறைய 13,000 நூல்களைக் கொண்ட நூலகமாக வளர்ச்சி பெற்றுள்ளது.

**வே. விவேகானந்தன்**
**கனடா**

தமிழ் மொழி, இலக்கணம், இலக்கியம், சிற்றிலக்கியம், ஈழத்து இலக்கியம், பழந்தமிழர் இலக்கியம், மெய்யியல், ஒப்பியல், திறனாய்வு, சிறுகதை, நாவல், கவிதை, பயணக்கட்டுரை, ஆய்வுக் கட்டுரை, அகராதிகள், கலைக்களஞ்சியம், மருத்துவம், சோதிடம், ஆன்மீகம், வரலாறு, நாடகவியல், ஊடகவியல், சமையல், நுண்கலை, பெண்ணியம், வாழ்க்கை வரலாறு, தேசப்படங்கள், விடுதலைப் போராட்டப் படைப்புக்கள் போன்ற 30 க்கும் மேற்பட்ட துறைசார் படைப்புக்கள் பல காணப்படுகின்றன. பருவ இதழ்ப்பிரிவில் இலங்கையிலிருந்து வெளிவரும் வீரகேசரி, தினக்கரல் பத்திரிகைகள் உட்பட கனடா, இந்தியா, ஐரோப்பிய நாடுகளிலிருந்து வெளிவரும் பத்திரிகைகளும் சஞ்சிகைகளும் காணப்படுகின்றன.

யாழ்ப்பாண வைபவ மாலை, மட்டக்களப்பு மான்மியம், காரைநகர் மான்மியம், வன்னி நாட்டு வரலாறு போன்ற கிடைத்தற்கரிய பல நூல்கள் பிரதியாக்கம் செய்யப்பட்டு நூலுருவில் கட்டப்பட்டு வாசகர்களின் பாவனைக்கு உகந்ததாக வைக்கப்பட்டுள்ளன. இந்த நூலகத்தின் துரித வளர்ச்சிக்கும் தரமான சேவைக்கும் நூலகப் பொறுப்பாளர் தம்பையா நடராஜா அவர்களின் ஊக்கமும் அயராத உழைப்பும் முயற்சியும் முக்கிய காரணிகளாகும். யாழ்ப்பாண பொதுசன நூலகத்தின் வளர்ச்சிக்கு வே. பாக்கியநாதனின் பணி எவ்வாறு ஒரு வரப்பிரசாதமாக அமைந்ததோ, அதே போன்று உலகத்தமிழர் சமூக நூல்கத்தின் வளர்ச்சிக்கு தம்பையா நடராஜா அவர்களின் பணி ஒரு வரப்பிரசாதமாகும். இங்குவாழும் தமிழ் மக்கள் மத்தியில் நூலகப் பயன்பாட்டில் விளிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் கடந்த ஜுன் மாதத்தினை நூலக மாத-மாகப் பிரகடனம் செய்து இவர் செயற்பட்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. யாழ்பாணப. பொதுசன நூலகம் எரிக்கப்பட்டு கடந்த 25 ஆண்டுகளும் மீண்டும் கம்பீரமாக காட்சி அளிப்பதோடு ஈழத்தமிழர்கள் எங்கெல்லாம் குடியேறினார்களோ அங்கெல்லாம் தமிழ் நூலகங்கள்

தொடர்ச்சி 02ஆம் பக்கம்

# புதிய அறிமுகங்கள் - 2

### கடந்த இதழ் தொடர்ச்சி

இதன் முதல் படியாகத் தான் இளங்கண்ணனின் இரு நாவல்களின் வருகையையும் நான் பார்க்கிறேன். இந்த வருகை வரவேற்கப்பட வேண்டும். நாதுலா திறக்கப்பட்டது போல. முன்னர் சிறுகதைத் தொகுப்புகள் ஒருசில நிறைய ஆண்டுகள் இடைவெளிக்குப் பின் வெளிவந்திருந்தாலும், நாவல் என ஏதும் வந்ததில்லை. இளங்கண்ணன் தான் முதலாக அடி எடுத்து வைத்துள்ளார் என்று தெரிகிறது.

"நினைவுகளின் கோலங்கள்", "அலைகள்" என்ற இந்த இரு நாவல்களைத் தவிர "வைகறைப் பூக்கள்" என்றும் ஒரு நாவல் அவர் எழுதியுள்ளதாக லக்ஷ்மி அவர்களின் புத்தகத்திலிருந்து தெரிகிறது.

இளங்கண்ணன் என்று புனைபெயர் பூண்டுள்ள பாலகிருஷ்ணன் தனித் தமிழ் தாகம் கொண்டவர் என்பது அவர் புனை பெயரிலிருந்து மட்டுமல்லாமல், அவர் பாத்திரங்கள் பெற்றுள்ள பெயர்களிலிருந்தும் தெரிகிறது. இதில் அவருக்கு முன்னோடி தமிழ் நாட்டின் மு.வ. அவர்கள். பாதி வழியில் நிற்பவர் அல்லர் அவர். அவர் சார்புகளும் பாத்திரங்களின் விருப்பங்களாகியுள்ளன. பாத்திரங்கள் விரும்பிப் படிக்கும் தேவநேயப்பாவணர், சிலப்பதிகாரம், திருக்குறள் பின் இன்றைய நெஞ்சுக்கு நீதி எல்லாம் சிறப்பிக்கப்படும் எழுத்துக்கள். இவ்விரண்டு நாவல்களும் படிக்க எனக்கு சுவாரஸ்யமாக இருந்தன. பல காரணங்களுக்காக. ஒரு காரணம், நம் புழக்கத்திலுள்ள பல ஆங்கில வார்த்தைகளுக்கு தூய தமிழ்ப் பதங்களை இளங்கண்ணன் பயன்படுத்தியுள்ளார். இவற்றில் எத்தனை அங்கு புழக்கத்தில் உள்ளன, எத்தனை இளங்கண்ணனின் கொடை என்பது தெரியவில்லை. புழக்கத்தில் கண்டக்டர் என்று நாம் சொன்னாலும் எழுதும் போது நடத்துனர் என்பது விசித்திரமாகத் தோன்றுவதில்லை அல்லவா? அது போல.

அலைகள் அவரது முதல் முயற்சி என்று தெரிகிறது. இதில் ஒரு சீனக் குடும்பமும், ஒரு தமிழ்க்குடும்பமும் நமக்கு அறிமுகமாகின்றன. மதியரசுக்கும் லேய் குவாவுக்கும் காதல். ஆனால் இருவரின் பெற்றோர்களுக்கும் சம்மதமில்லை. பெற்றோர்களுக்குத் தெரியாமல் திருமணம் செய்துகொள்கிறார்கள். தனித்து குடும்பம் நடத்துகிறார்கள். நிறைய ஆபத்துக்கள், பிரச்சினைகள். ஆள் வைத்து தாக்குவது, சில மரணங்கள். சந்தேகங்கள். பின் லேய் குவாவுக்கு ஓர் ஆண்குழந்தை பிறக்கிறது. அதற்கு திருவேங்கடம் என்று தமிழ்த் தாத்தாவின் பெயர் இடப்படுகிறது. பிரிந்த இரு குடும்பங்களையும் பிறந்த குழந்தை திரும்ப ஒன்று சேர்த்துவிடுகிறது.

## வெங்கட் சாமிநாதன்

"நினைவின் கோலங்கள்" நாவலில் நாம் பார்ப்பது இரு தமிழ்க் குடும்பங்கள். இரு குடும்பங்களும் எளிய நிலையில் உள்ளவை தான். ஒன்று சிங்கப்பூரில் இன்னொன்று தமிழ் நாட்டில் திருச்சியிலிருந்து தூர உள்ள ஒரு கிராமத்தில். மாடு வளர்த்து பால் வியாபாரம் செய்யும் குடும்பங்கள். சிங்கப்பூர் குடும்பத்தின் பெண் தமிழ் கிராமத்தில் வாழ்க்கைப்படுகிறாள். இதுபோல சிங்கப்பூரிலேயே இரு தமிழ்க் குடும்பத்தினிடையே கல்யாண உறவுகள். இரண்டு இடத்திலும் உள்ள பண்ணை வாழ்க்கை ஒன்று போலத்தான் தோன்றுகின்றன.

சிங்கப்பூர் நகரத்தின் இன்றைய தோற்றத்தை அறிந்துள்ள நமக்கு சிங்கப்பூரில் மாடு வளர்த்து பால் வியாபாரம் செய்யும் குடும்பம் தமிழ் நாட்டுத் தோற்றத்திலேயே அறிமுகமாகும் என்று எதிர்பார்த்திருக்க மாட்டோம். கொஞ்சம் திகைக்க வைக்கும். நாம் படிக்கும் கதை சுமார் முப்பது நாற்பது வருடங்களுக்கு முந்திய சிங்கப்பூரில் நடைபெறும் ஒன்று என நினைத்துக்கொள்ள வேண்டும். அவர்கள் வாழ்க்கை மாறுகிறது. வேகமாக மாறிவரும் சிங்கப்பூர், சாலை விஸ்தரிப்பில் மாட்டுக்கொட்டகையும் வீடும் மறைந்து போகின்றன. பால் வியாபாரம் போகிறது. புதிதாக கட்டப்படும் பல அடுக்கு மாடி கட்டிடத்தில் பதினைந்தாவது மாடியில் எதிரும் புதிருமாக இவ்விரு குடும்பங்களுக்கும் மாற்று வீடு கிடைக்கிறது. சலவைக்கல் பதித்த, நாகரிக அடுப்பறை கொண்ட, வசதியும் தூய்மையான வீடு. வாழ்க்கை மாறிவிட்டதே ஒழிய, மாற்றியது அரசாங்கமேயானாலும், அரசு அவர்களுக்கு வாட்டி வதைக்கும் ஒன்றாக இல்லை. புதிய இடம் பெற அவர்கள் எந்த அரசு அதிகாரிக்கும், அரசியல் வாதிக்கும் லஞ்சம் கொடுக்கவில்லை. கைகட்டி நிற்க வில்லை. அலைக்கழிக்கப்படவில்லை. சொல்லாமலே செய்யும் அரசாக, செய்ததைச் சொல்லாத அரசாக, இளங்கண்ணன் சொல்லாமலே நமக்குப் புலனாகிறது. எளிய குடும்பம் தான். லேய் குவாவுக்கு வலி எடுத்து விட்டது. மதியரசனைத் தாக்கி சாக்கடையில் தள்ளிவிட்டு ஓடிவிடுகிறது ஒரு கேடிக்கும்பல். மங்கையர்க்கரசிக்கு பேறு கால வலி. அடுத்து நாம் அவர்களைப் பார்ப்பது மருத்துவ மனையில். சென்னை பொது மருத்துவ மனையில் கூட இது நடக்காது. மருத்துவமனை வாசலிலேயே அவர்களை நிறுத்தி வைக்கப்படுவார்கள். பேரம் நிகழும்.

இரண்டு நாவல்களிலும் கால மாற்றம், வாழ்க்கை மாற்றம் தெரிகிறது. மனிதர் படும் அவதிகள் அவர்கள் குணங்கள் தந்ததும், சமூகம் தந்ததும் தான்.

இப்படித்தான் எனக்கு இந்நாவல்களைப் படிக்கத் தோன்றுகிறது. சிங்கப்பூர் வாழ்க்கையைச் சொல்வதற்கு மறைமுகமாக. அதற்கும் மேலாக இளங்கண்ணனை இவை நமக்குச் சொல்கின்றன.

முதன் முறையாக சிங்கப்பூர் எழுத்தைப் படிக்கும் நான் இவற்றை நான் சுவாரஸ்யத்துடனேயே படித்தேன். இளங்கண்ணனின் வருகை இன்னும் பலரை நமக்கு அறிமுகப்படுத்த வேண்டும். அது இன்னும் அதிக பரஸ்பர கொடுக்கல் வாங்கலுக்கு இட்டுச் செல்லவேண்டும் என்பது என் எதிர்பார்ப்பு. அது தமிழுக்கு வளம் சேர்க்கும். நம் பார்வைகளை விஸ்தரிக்கும். உலகமே நம் தமிழகத்துள் அடங்கி விடவில்லை. நம் இன்றைய பார்வைக்குள் அடங்கி விடவில்லை.

*குறிப்பு நாதுலா என்பது சீனாவுக்கும் இந்தியாவுக்கும் இடையே உள்ள ஹிமாலய மலைச்சரிவில் உள்ள ஒரு கணவாய். அதற்குப் பெயர் நாது. லா என்றால் திபெத்திய மொழியில் கணவாய் என்பது பொருள். இந்த நாதுலா வழியாகத்தான் ஆதி காலத்திலிருந்து இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையே வர்த்தகம் நடந்து வந்தது. 1962-ல் நடந்த சீன-இந்திய போருக்குப் பின்னர் இந்த கணவாய் மூடப்பட்டு, வர்த்தகம் முழுதாக முடக்கப்பட்டு இருந்தது. பின்னர் இப்போது உள்ள சுமுக உறவுகளின் காரணமாக அந்த கணவாய் திறக்கப்பட்டு வர்த்தகம் மீண்டும் தொடங்கப்பட்டுள்ளது.*




இதுவும் ஓர் வரலாற்றுக்கடமை !!!



இங்கேயும் எமது இருப்பை உறுதிசெய்ய உதவுங்கள்

Vote Shan Thayaparan

Standingh up for Our Children

November 4ம், 5ம் திகதிகளில்

Ward 42 Malvern Recreation Centre, 30 Sewells Road. (Community Room)

Ward 41 Percy Williams Public School, 35 White Heather Blvd. (Gym)

Elect

Sample Ballot

85 SHAN THAYAPARAN



வாகன ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன மேலதிகவிபரங்களிற்கு

416-703-6432 / 416-826-7426

## MATH, SCIENCE & ENGLISH TUITION

MATH, SCIENCE & PHYSICS under taken for ALL Grades from Gr. 2 to 12 & OAC Special classes in Calculus & Algebra - Geometry English for all grades from Gr. 2 ta Gr. 10

Individual & group classes available By an experience teacher: S.F. Xavier

CONTACT: 416 - 431- 6774 (Markham & Ellesmere)

## TUITION CLASSES



***Chemistry, Biology Math, Science***

From Grade 11 & 12 From Grade 5 to 10

Test Preparation

Review Questions / Answers

Based on Ontario Curriculum

McCowan & Finch

மேலும் விபரங்களுக்கு 416-335-9779

## TUITION CLASSES



***SHEPPARD / MEADOWVALE*** பகுதியில்

***Kindergarten - Grade 5*** வரையும் கல்விகற்கும் மாணவர்களுக்கு அனுபவம் வாய்ந்த ஆசிரியையினால் கல்வி கற்றுக்கொடுக்கப்படும்.

மேலதிக விவரங்களுக்கு 416-724-2819

## *TUITION CLASSES*



***BIRCHMOUNT / SHEPPARD***

***Grade 9 - Grade 12***

Math, Science, Calculus, Algebra, Geometry, Physics, Chemistry

***Fees - Gr. 9 & Gr. 10 - $40/Month***

***Gr. 11 & Gr. 12 - $50/Month***

***For more information Kula, B.Sc. SriLanka, B.Eng. Canada***

416.850.9397 /416.317.9413

# தமிழர் நிர்வாகத்தில் ஒரு

# EMBASSY

- வீட்டிற்குத் தேவையான தரமான உணவுப் பொருட்கள், (Groceries)
- இலங்கை / இந்திய இனிப்புப் படையல் (Sweets)
- இலங்கை / இந்திய உணவகம் (Restaurant)



416-332-8451

Finch / Middlefield

5200 Finch Ave., Scarborough

சமோசாவிற்கு அழையுங்கள்

416-332-0944



# YARL WINDOW

## BLINDS & DRAPERY

BLINDS DRAPERIES AND SHUTTERS

- Venetian Blinds
- Vertical Blinds
- Roller Shades
- Pleated Shades
- Cellular Shades



FREE ESTIMATE

உங்கள் எண்ணம் போல் வண்ண, வண்ணத் திரைச் சேலைகளுக்கு இன்றே அழையுங்கள்

விவரங்களுக்கு: என். செல்வம் - 905.201.7733

416.806.5397

5210 Finch Ave., E. Unit #3 (Middlefield & Finch) Scarborough, ON

HOMELIFE HIGHER STANDARDS

# Win A Brand New Toyota Corolla



**Buy or Sell properties thru me or our "Real Team" and you will have a chance to win one of many prizes****

Neilson/Sheppard



**Asking: $159,000**

3Bedrooms, 2washrooms condominium. Laminate Floor Thru out. Close to all amenities

Morningside/Sheppard




**Asking: $ 269,000**

3 Bedroom Detached Home. 3Washrooms. 1 Br Basement apartment with Sep.Entrance

Woodbine/Major Mac



**Asking: $ 689,000**

Detached House with 5 Bedrooms 2 Years New. Approx 3500 Sq Ft. Hardwood Floor Thru out.

1st Prize 2007 Toyota Corolla



**Kethees K. Seevaratnam**

Sales Representative

**416-275-5788**

Whiby



**Asking: $ 119,000**

Convenience Store in a Demand Whitby Area. Gross Sales $7500 per week plus Lotto 6/49 Commission. Low Rent—$900.

McCowan / 16th Ave



**Asking: $ 159,000**

Convenience / Grocery Store at a prime Location. Grocery including Meat & Fish ,Lotto 6/49, ATM & Western Union.

Neilson/Sheppard



**Asking: $ 229,000**

3 Bedroom Semi Detached House - 1 Bedroom Basement Apartment With Separate Entrance

WIN



REAL TEAM

**HomeLife/GTA Realty Inc.** Brokerage*, 1711 McCowan Road, Scarborough, On, M1S 3Y3 **Tel: 416-321-6969**

Some conditions may apply** This is not intended to solicit the properties currently listed for sale. *Each office independently owned and operated **Vehicle may not be as illustrated**

